# சுதந்திரன்
SUTANTIRAN

புத்தம் 20—திருவள்ளுவர் ஆண்டு 1997மாசி திங்கள் 26-ம் நாள் (10—3—1967) வெள்ளிக்கிழமை ஜுலை 27 | இதழ் 38


# அரசாங்கத்துக்கு எதிராக கல்வியமைச்சில் சதி?

## சித்திர ஆசிரியர் தேர்வில் பாரபட்சம்

**சித்திர ஆசிரியர்கள் தெரிவில் சிறுபான்மையினர் வேண்டுமென்றே புறக்கணிக்கப் பட்டுள்ளார்கள் இம்முறை தெரிவுசெய்யப்பட்ட மொத்தம் 192 சித்திர ஆசிரியர்களில் 11 தமிழர்கள் மட்டுமே இடம் பெற்றுள்ளார்கள். முஸ்லிம்கள் ஒருவர்தானும் இப்பதவிக்கு தெரிவு செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. கல்வி அமைச்சின் இத் தான்தோன்றித்தனமான செயல் அரசியல் வட்டாரங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.**

அண்மையில் நடைபெற்ற அகில இலங்கை ரீதியிலான சித்திர ஆசிரியர் தெரிவில் ஒரு முஸ்லிம்தானும் தெரிவு செய்யப்படவில்லை. தெரிவு செய்யப்பட்ட 192 பேரில் 181 பேர் சிங்களவர்கள் என்று தெரிய வந்துள்ளது. எஞ்சிய பதினொருவர்மட்டுமே தமிழர்கள்.

வட—கிழக்கு மாகாணங்களில் மொத்தம் 125 சித்திர ஆசிரியர்களுக்கு இடமிருந்த போதிலும் 11 பேர்மட்டுமே தெரிவு செய்யப்பட்டிருப்பது வேண்டுமென்றே கல்வி அமைச்சு செய்த ஒரு சதியாகப் பலரும் கருதுகிறார்கள். சித்திர ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சையிலேயே ஒருவகை இன ஒதுக்கல் தலைதூக்கியிருந்ததாக நம்பமுடிகிறது. தமிழ் மட்டுமே தெரிந்த தமிழ் சித்திர ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கு நடைபெற்ற நேர்முகப் பரீட்சையில் பரீட்சையாளர்களாக மூவர் இடம் பெற்றிருந்தனர். இவர்கள் மூவரும் தமிழ்தெரியாதவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்,

தெரிவு செய்யப்பட்ட 11 தமிழர்களில் குறிப்பிட்ட இருவருக்கு நியமனம் வழங்கக்கூடாது என்றும் அவர்கள் இருவரும் தனது தொகுதியைச் சேர்ந்தவர்களாக

(-9ம் பக்கம் பார்க்க)



எம். ஜி. ஆர். வெற்றியை யாழ்ப்பாணம், டாக்சி நிலையத்தில், டாக்சி சாரதியான, திரு. இ. சுந்தரலிங்கம் பிரமாதம வழவில் கொண்டாடினார். இவர், அன்றையதினம் இலவசமாக தனது டாக்சியை செலுத்தினார். அப்பொழுது இவரது டாக்சியில் தி. மு. க. கொடியும், எம். ஜி. ராமச்சந்திரன் படமும் இணைக்கப்பட்டிருந்தது. யாழ் எம். ஜி. ஆர். என அழைக்கப்படும் திரு. சுந்தரலிங்கம் எம். ஜி. ஆர். பக்தர் மட்டுமன்றி, தந்தை செல்வா பக்தருமாவார். இவரது டாக்சியில், செல்வா, எம். ஜி. ஆர். படம் பொருத்தப்பட்டுள்ளது காணலாம்.

## பொ. கட்சிக்குள் கோஷ்டிச்சண்டை

### யாழ், உடுப்பிட்டி எம். பீ.கள் மோதல்

**பொ. கட்சிக்குள் குமுறிக் கொண்டிருந்த கோஷ்டி மனப்பான்மை அதனகடந்த செயற்குழுக் கூட்டத்தில் எரிமலையாகி வெடித்ததாகத் தெரிகிறது.**

பெப்ரவரி 17ம்திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பொ. கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில்உடுப்பிட்டிஎம்.பி. திரு. மு.சிவசிதம்பரத்துக்கும், யாழ்ப்பாண பிரதிநிதி திரு. பொன்னம்பலத்துக்குமிடையே கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டதாகத் தெரிகிறது. 'தலைவர்கள் சாகவேண்டும்' என்றுஉடுப்பிட்டிபிரதிநிதி சமீபத்தில் தெரிவித்த கருத்தைப் பற்றி எழுந்த சர்ச்சையைத் தொடர்ந்தே இந்த வாக்குவாதம் ஏற்பட்டது என்றும், பின்னர் அது உடுப்பிட்டியாரின் ஆதரவாளர்களுக்கும் திரு. பொ.வின்ஆதரவாளர்களுக்குமிடையான வாக்குவாதமாக மாறிவிட்டதென்றும் கூறப்படுகிறது.

பொ. கட்சியின் 'செயற்குழுக்' கூட்டத்துக்கு திரு. பொ. தலைமை வகித்தாராம். திரு. பொ. தனது தலைமையுரையில், தான் இந்நாட்டில் இல்லாத சமயத்தில் இங்கு நடைபெற்ற சம்பவங்களை மனந்திறந்து வெளியிடுமாறு செயற்குழு உறுப்பினர்களைக் கேட்டுக்கொண்டார் என்று தெரிகிறது.

திரு. பொ. வின் பேச்சைத் தொடர்ந்து அவரது கோஷ்டியைச் சேர்ந்த ஒருவர், உடுப்

(9-ம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் 'திரு' வின் கடமையுணர்ச்சி



உள்ளூராட்சி அமைச்சர் கனம். மு. திருச்செல்வம் தமிழ் பேசும் மக்களின் நலனுக்காக, கண்ணும் கருத்துடனும் பணிபுரியும் ஒரு கடமை வீரர் என்பதை இம் மாதம் 6ந் திகதி நடைபெற்ற ஒரு சம்பவம் உறுதிப் படுத்தியது. அமைச்சரைப்பற்றிஒருசிலர்வாய்க்கு வந்தபடி 'கன்னா பின்னா' வென்று திட்டி எழுதுவது எவ்வளவு தவறானது என்பதை அந்தச்சம்பவம் எடுத்துக் காட்டியது.

தமிழ் பேசும் மக்கள் சம்பந்தப்பட்ட ஒரு முக்கிய பிரச்சினை பற்றி, அன்று பிற்பகல் 2-30க்கு, தமிழரசுத் தந்தை, தமிழரசுப் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் சகிதம் பிரதமரைச் சந்தித்துப் பேசஏற்கனவே ஒழுங்கு செய்திருந்தார் அமைச்சர் திருச்செல்வம். ஆனால் அன்று பகல்1மணிக்கு எதிர்பாராத விதமாக அமைச்சரின் அன்னையார் திருமதி செல்லம்முருகேசன் காலமானார்.

(9-ம் பக்கம் பார்க்க)

## தினபதி, சன் ஏடுகளிடையே மோதுதலா? இல்லையேல் மக்களை ஏமாற்றும் தந்திரமா?

**தமிழரசுக்கட்சிக்கும் தி. மு. க. வுக்கும் தொடர்பு இருப்பதாகவும், விரைவில் இலங்கையை தி. மு. க கபளீகரம் செய்து விடுமென்றும் சிங்கள மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்வதில் சில தினசரிகள் ஈடுபட்டிருக்கின்றன.**

இரண்டு சிங்களத் தினசரிகளையும், ஒரு தமிழ்த் தினசரியையும், ஒரு ஆங்கிலத் தினசரியையும் சுதந்திரனப்பத்திரிகா சமாஜம் வெளியிட்டு வருவது தெரிந்ததே. இந் நிறுவனத்திலிருந்து வெளிவரும் 'சன்' என்ற ஆங்கிலப் பத்திரிகையின் இம் மாதம் 5ந் திகதி இதழ் பல தவறான தகவல்களை தலைப்புச் செய்தியில் வெளியிட்டிருப்பதோடு, தி. மு. க. வெற்றி பற்றி கண்டிக்கத் தக்க ஒரு தலையங்கமும் எழுதியுள்ளது.

தமிழரசுக் கட்சியின் செயற்குழு உறுப்பினராக விருந்தம் ஜனாப் மசூர் மவுலானா, கொழும்பு விவேகானந்த சபையில் நடைபெற்றஒருகூட்டத்தில், தமிழரசுக்கட்சிக்கும், தி. மு. க. வுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்றும், தமிழ்நாடு அமைப்பதே தி. மு. க. தமிழரசு ஆகிய இரண்டு கட்சிகளின் லட்சியம் என்றும், தாம் இந்தியா சென்ற போது தி. மு. க. தலைவர் திரு. சி. என். அண்ணாதுரையுடன் மிக முக்கியமான விடயங்கள் பற்றி விவாதித்ததாகவும் கூறியதாக ஒரு அப்பட்டமான

(9-ம் பக்கம் பார்க்க)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயப்பிரவேசத்திற்கு விசேட சட்டம் வேண்டுமா?

ஆலயப் பிரவேசம் இன்று யாழ்ப்பாணத்தில் ஒரு முக்கிய சமூகப் பிரச்சினையாக இருக்கிறது. தென்னிந்தியாவில் பல ஆண்டுகளாக இச் சீர்திருத்தம் நிகழ்ந்து, ஆலயங்கள் எல்லாம் சாதித் தடையின்றி வழிபாட்டிற்குத் திறக்கப்பட்டிருக்கின்றன. அங்கே அதற்கான சட்டமும் இயற்றப்பட்டுள்ளது.

இலங்கையில் ஆயலப் பிரவேசத்தைப் பொறுத்தமட்டில் சாதித்தடை இருப்பது ஆத்மீக வளர்ச்சிக்கும் சைவ சமயத்திற்கும் ஒரு தடையும் இழுக்கும் என்று பெரியார் பலர் கண்டு அதற்கான பரிகாரம் சில செய்திருந்தனர். சில வருடங்களுக்குமுன் யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல கோயில்கள் இவர்கள் முயற்சியால் சாதித்தடை நீங்கி எல்லாச் சைவர்களுடைய வழிபாட்டிற்கும் திறந்துவிடப்பட்டன. இப்போது இலங்கையில் பாடல்பெற்ற திருக்கேதீச்சரம், திருக்கோணேஸ்வரம் ஆகிய கோயில்களிலும் பிரசித்திபெற்ற நல்லூர் கந்தசாமி கோயில், வண்ணை வைத்தீஸ்வரன் கோயில், பெருமாள் கோயில், கைலாசபிள்ளையார் கோயில், சுதுமலை அம்மன் கோயில், அராலி முருகமூர்த்தி கோயில் ஆகியவற்றிலும் சாதித்தடை இல்லை.

### பலாத்காரமும் சத்தியாக்கிரகமும்

நல்ல சீர்திருத்தம் இப்படி நிகழ்ந்திருக்க கிராமப்புறங்களில் உள்ள கோயில்களில் இச் சீர்திருத்தம் இன்றும் நிகழவில்லை. ஆணவத்தின் அம்சமாகிய சாதிவெறி இன்னும் ஆங்காங்கே ஆலயப்பிரவேசத்துக்கு சாதித் தடையாக இருக்கிறது.

இந்த அநீதியை நீக்கப் பலர் பல்வேறு வழிகளில் முயற்சிக்கிறார்கள். பலாத்காரத்தையும்கூட சில கம்யூனிஸ்ட் வாதிகள் இதற்காகத் தூண்டிவிடுகிறார்கள். இன்னும் சிலர் இந்த விஷயத்தில் சத்தியாக்கிரகம் உகந்ததல்ல என்று விளங்காமல் சத்தியாக்கிரக இயக்கத்தைக் கருதுகிறார்கள். உண்மை, அகிம்சை என்ற அடிப்படையில் நடத்தப்படும் சத்தியாக்கிரக இயக்கமும் கூட ஆலயப் பிரவேசத்துக்குப் பொருந்திய வழி அல்ல என்று காந்தி அடிகளே சொல்லியிருக்கிறார்.

### விசேட சட்டம் வேண்டுமா?

ஆகவே, நற்பிரசாரமும் அது தோற்ற இடத்தில் சட்ட இயக்கமுமே உகந்த வழிகள் என்று நாம் கருத வேண்டும். பெரியோர்கள் முயற்சிசெய்து பலன் தராத இடத்தில் சீர்திருத்தத்தைச் சட்டமூலம் கொண்டுவருவது அவசியம். பொதுக்கோயில்களிலும் இன்னும் விசேடமாகத் தனியார் கோயில்களிலும் சாதித்தடை இன்றி சைவமக்கள் பிரவேசித்து வழிபாடு செய்ய அத்தகைய 'உரிமை வழங்கும்' விசேஷ சட்டம் வேண்டும் என்று பலர் கருதியிருக்கிறார்கள்.

ஒரு 'சிவில் உரிமை' வழங்குவதற்கு நினைத்தால் இக் கருத்துச் சரியானதே. ஆனால் சாதித்தடையின்றி ஆலயப் பிரவேசத்தை அனுகூலம் ஆக்குவதற்கு ஏற்கனவே ஒரு சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது.

### ஏற்கனவே சட்டம் உண்டு

1957-ம் ஆண்டில் 21ம் இலக்கத்தின்கீழ் சமூக குறைபாடுகளை விலக்கும் சட்டம் என்று ஒன்று இயற்றப்பட்டது. ஆலயப் பிரவேசம் ஒரு 'சிவில் உரிமை'ப் பிரச்சினை என்ற கருத்தை விசேடமாக சட்டமூலம் ஏற்படுத்தாமல், ஆலயப் பிரவேசத்தில் சாதித்தடை ஒரு தண்டிக்கப்படக்கூடிய குற்றம் என்ற கருத்து சட்டத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே இன்று ஆலயப் பிரவேசத்தை அனுகூலமாக்குவதற்கு ஒரு விசேஷ சிவில் உரிமை வழங்கும் சட்டம் வேண்டியதில்லை. இன்று இருக்கும் சட்டமே போதுமானது.

### சட்டம் கூறுவது இதுதான்

சமூக குறைபாடுகளை விலக்கும் 1957ம் ஆண்டு 21ம் இலக்கச் சட்டத்தின்கீழ் 3 (பி) சரத்தால் ஆலயப் பிரவேசத்தில் சாதித்தடை தண்டனைக்குரிய குற்றமாகிறது. இச்சட்டத்தின் 2ம் சரத்தின்கீழ், ஒரு சமூக குறைபாட்டைச் சுமத்துதல் ஒரு குற்றம் என்றும், அக்குற்றத்திற்கு ஆறு மாத சிறைவாசம் அல்லது நூறு ரூபாய் தண்டம் விதிக்கப்படக்கூடிய தண்டனை என்றும் இயற்றப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் 3 (பி) சரத்து பின்வருமாறு:—

> "ஒரு சமத்தைப் பின்பற்றுகிறவர்கள் பிரவேசிக்கும் வழிபாட்டிற்குரிய இடத்தில் அச்சமயத்து மற்றவரைப்பிரவேசித்தல், சமூகமாயிருத்தல் வழிபாடு செய்தல் என்றதில் தடுத்தால் அல்லது இடையூறு செய்தால், அவர் 2-ம் சரத்தின் கீழ், மற்றவர் மேல் ஒரு சமூக குறைபாட்டைச் சுமத்தியதாகப் கருதப்படுவர்."

> 3. For the purpose of section 2, a person shall be deemed to impose a social disability on any other person —
>
> (b) If he prevents or obstructs such other person being the follower of any religion, from or in entering being present in, or worshipping at any place of worship to which the followers of that religion have access.

### செய்யவேண்டியது என்ன?

ஆகவே, இன்றைய சட்ட நிலையில் ஆலயப் பிரவேசத்திற்காக ஒரு விசேஷ 'உரிமை' வழங்கும் சட்டம் வேண்டியதில்லை. ஆலயப் அபிரவேசத்திற்குச் சாதித்தடை தண்டனைக்குரிய குற்றம் என்று பத்து வருடங்களுக்கு முன் இயற்றப்பட்ட சட்டமே ஆலயப் பிரவேசத்தை அனுகூலமாக்கும். இதற்கு பலாத்காரமும் சத்தியாக்கிரகமும் வேண்டாம். சைவ நீதியை நிலைநாட்ட நல்ல தூயபிரசாரமும், வேண்டிய இடத்தில் இன்றைய சட்டத்தையும் அமுல் நடத்திச் சமூக குறைபாடுகளைச் சுமத்தும் குற்றவாளிகளை தண்டிக்கும் சட்ட அமுல் நடவடிக்கையும் போதுமானது.

> "கண்ணினுளுமைக்காணக் கதவினைத்
> திண்ணமாகத் திறந்தருள் செய்மினே."



**சி. கதிரவேற்பிள்ளை** பா. உ.

---

## சிவராத்திரி விழா

புங்குடுதீவு இரண்டாம் வட்டாரத்திலுள்ள அரசடி ஆதி வயிரவ சுவாமி கோவிலில் எதிர்வரும் மாசிவராத்திரி விழாவை சுவாமி சதானந்தாஜீ தலைமையில் கொண்டாட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. அன்றைய தினம் விசேட வழிபாடுகளும் கூட்டுப் பிரார்த்தனைகளும் நடைபெறும்.

அன்றைய தினம் மாலை 6.00 மணியிலிருந்து அதிகாலை 4.00 மணிவரை கூட்டு வழிபாடு, பஜனை, இன்னிசை [illegible] சுப்பையாக்குருக்கள் நடத்தி வைப்பார்.

---

## வள்ளுவ நாடு

எம் ஏ. நுஃமான்

நாடுகள் காண நடந்தார் பலபேர்கள்.
காடு கடந்தும் கடல் கடந்தும் சென்றார்கள்.
வீடொன்றே போதுமென வீழ்ந்து கிடக்காமல்,
சுற்றிப் பரந்துள்ள சூழ்நிலையைக் காண்பதற்கும்,
விற்பனைக்காய் உள்ள விளைபொருட்கள் தேடுதற்கும்,
தங்கள் பொருட்களுக்கோர் சந்தை பிடிப்பதற்கும்,
தங்கம் எடுக்கத்தகும் நிலங்கள் காண்பதற்கும்,
வீட்டுக்கு விடு மிகுந்து பிறப்பெடுத்த
ஆட்கள் தொகைய அனுப்பிக் குடியேற்றி
ஆட்சி செலுத்தி அரசைப் பெருக்குதற்கும்,
தேடி நடந்த சிலர்திரும்பி வந்தார்கள்.
கண்டு பிடித்த கடல்கடந்த நாடுகளில்
பண்டங்கள் பெற்றும் பலதைத் தமக்காகக்
கொண்டும் பெயர்கள் கொடுத்தும் அநுபவத்தைக்
கூட்டி எடுத்துக் குறிப்புகளும் சேர்த்தார்கள்.
நாட்டு வளங்கள், நகர்வளங்கள், மன்னர்களின்
ஆட்சி முறைகள், அவையின் அலங்காரம்,
கூட்டம் குழுவாய்க் குடியிருந்த மக்களது
வீட்டு நிலைமை, விருப்பு, வெறுப்பெனறு
நாட்டில் இருந்த நடைமுறைகள் பற்றித;தம்
புத்தகத்தில் தங்கள் புதிய குறிப்புகளை
அச்சடித்தும் தந்தார் அவர்.

மின்னை நிலைகள் முழுதும் முடிவடைய
பின்னுளில் நாங்கள் பெரும்வளர்ச்சி உற்றதனுல்
தொல்லுலகம் மிச்சம் சுருங்கிக் கிடப்பதனுல்
எலேலோரும் வானில் எழுந்து பறந்துபோய்
நாடுகளைக் கண்டு நமக்குவந்து சொல்லுகிறார்.
ஏடுகளாய்ப் பல்நா றெழுதிக் குவிக்கின்றார்.
காலை எழுந்திருந்து கட்டிலிலே போய்ப்படுக்கும்
மாலை வரைக்கும் மனிதனுக்கு வேண்டியவை
அத்தனையும் செய்ய அமைந்த இயந்திரங்கள்
நித்திரையில் லாமல் நிதமும் நடக்கின்ற
கேளிக்கைக் குள்ளே கிடத்தி மனுக்குலத்தை
வேடிக்கை பார்க்கும் விசயத்தை; ஒவ்வொன்றாய்
போகப் பொருளின் பெருக்கத்தின் உட்புகுந்து
நாகரிக வாழ்க்கை நடத்தும் பெரிய,பல
நாடுகளைக் கண்டு நமக்கு வந்து சொல்பவரின்
ஏடுகளைப் பார்த்தால் எளிதில் உணர்கின்றோம்!

அற்புதங்கள் காணும் அவாவுடையோர், தங்களது
கற்பனையில் கண்டும் கடல்கடந்து போய்ப்பார்த்தும்
நீர்வளமும் நல்ல நிலவளமும் வீரமுடன்
போர்புரிந்து பெற்ற புகழும உடையபல
நாடுகளைக் கண்டு நமக்குமதைக் காட்டுதற்காய்
ஏடுகளை நன்றாய் எழுதி இருப்பதனைப்
பார்த்துள்ளோம், ஆயின், பழையஒரு காலத்தில்
பார்த்த இவர்,இவற்றைப் பார்ப்பதற்கு முன்னமயே
வள்ளுவன் என்ற மனிதன், ஒருகிழவன்
சுள்ளி உடலும் சுடர்ந்த விழிகளுமாய்
வாழ்ந்திருந்த போது...வளர்ந்து பெரிதாகச்
சூழ்ந்து கிடந்தபல நாடுகளைச் சோதித்தான்.

மஞ்சட் கதிர்கள், வருடும் இளம்தென்றல்
கஞ்ச மலர்கள், கவியும் கருமுகில்கள்
துள்ளி மகிழ்ந்து சுகமாய் விளையாடும்
புள்ளிமான் கூட்டம், இவைபோன்ற பலபொருட்கள்
கூடிப் பரந்து குலவித் திரிவதுவே
நாடா? எனஆய்ந்து நாலு மனிதரின்றேல்
காடாகும் என்பதனைக் கண்டான்!
நகரங்கள்.
மாடி மனைகள், வளர்ந்துசெலும் வீதிகளில்
ஓடித் திரியும் உயர்ந்த பரித்தேர்கள்,
கடல் கடந்து செல்கின்ற கப்பற்துறைகள்
உடல் அழகைக் கூட்டும் உயர்ந்த பலஅணிகள்,
ஆடல் அரங்கம், அரம்பையர்கள் யாழிசைக்கும்
பாடல் அரங்கம் இவைகள் பலபண்ணிக்
கூடிச் சுகித்துக் குவிந்து கிடக்கும்
மனிதர் இருந்துவிட்டால் மட்டும்அது நாடா?
இவையபல வாறக எண்ணி, இறுதியிலே
ஒட்டிக் கிடக்கும் உறவை அறுத்தெறிந்தும்
மொட்டை அடித்தும், முடிவளர்த்தும் மேனியிலே
சட்டையின்றிச் சென்ற சனக்கூட்டம் ஓர்புறமும்,
வாழ்க்கை வசதி வழங்கும் சுகத்துக்குள்
ஆழ்ந்து கிடந்தே அழிந்தொழியும் மக்களுமாய்
நீண்டு கிடக்கும் நிலத்தை ஒரு நாடென்று
தீண்டாமல், அப்பாலே சென்று, சிலகாலம்
சிந்தித்தான். பின்னர் தெளிந்தான். பெரிதாக
எந்தப் பொருளும் இணையற் றிலங்குகிற
செந்தண்மை யோகத் தெரியும் மனிதத்தைச்
சந்தித்தான்; அங்கே தனது புதுநாட்டைக்
கண்டு பிடித்தான். கவிபோல் குறையின்றி
வெண்பஞ்சு போன்று விளங்கும் ஒருநாட்டில்
மனத்துக்கண் மாசிலன் ஆய மனித
இனத்தின் இனிய, செழிய இயல்பான
வாழ்க்கை நெறிகள் மலர்ந்து கிடக்குமென
ஆழ்ந்துணர்ந்து கண்ட அவன்;நம் அனைவருக்கும்
நாடென்று சொல்வதெலாம் நல்ல மனிதர்களின்
வீடென்ற உண்மையினைக் கண்டு விளக்கினன்.
வீடாய்ப் புதிதாய் விளங்குகிற அந்நாட்டில்
நாய்மைக் குணத்தின் நலிவை நசுக்கி, ஒரு
வாய்மைக் குணமே வளர்ந்து கிடப்பதையும்'
அன்புடைமை என்ற அழகில் உயிரினங்கள்
தென்பாய், மகிழ்வாய் சிறப்பாய்த் திரிவதையும்,
சான்றாண்மை என்றஒரு தன்மை மிகுந்ததனுல்
தோன்றமற் போன துயரின் தொடர்களையும்
ஆழ்ந்துணர்ந்து கண்டான் அவன்.
வாழ்க்கையின் உண்மை வடிவங்கள் எங்குளவோ?
வாழ்க்கை வனப்புக்கள் எங்கு மலர்ந்துளவோ?
உயிர் நிறைந்து நெருங்கும் நிலமெதுவோ?
அந்த இடமே அவன் கண்ட நாடாகும்!
அந்த இடமே அழகான வீடாகும்!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




க. மனோகரன்,
இறத்தோட்டை.

கே: தமிழ்நாட்டுத் தேர்தல் பற்றிய சோதிடர்களின் கூற்று பொய்யானது எதைக் காட்டுகிறது?

ப: அந்தச் சோதிடர்கள் காங்கிரஸ் சார்பானவர்கள் என்பதைக் காட்டுகிறது.

கே: இராஜாஜியைஒரு 'சோஷலிஸ்ட்' ஆக்குவேன் என்கிறரே அண்ணா, இது நடக்கக்கூடியதா?

ப: பாஸிஸ்ட் ஜனசங்கத்தையும், ஜனநாயக தி. மு. க. வையும் இணைப்பேன் என்று ராஜாஜி கூறுவது எவ்வளவு சாத்தியமோ, அவ்வளவு சாத்தியம் ராஜாஜியை சோஷலிஸ்ட் ஆக்குவேன் என்று அண்ணா கூறுவது.

கே: மத்திய ஆட்சியாலன்றி மாநில ஆட்சியால் அண்ணா கூறுவதுபோல் அரிசி விலையைக் குறைக்க முடியுமா?

ப: உணவுப்பிரச்சினை அகில இந்திய பிரச்சினைதான். ஆனல் தமிழகத்தில் நெல் உற்பத்தியைப் பெருக்கி கறுப்புச் சந்தையையும, பதுக்கலையும் ஒழிப்பதின் மூலம் அரிசி விலையைக் குறைக்கலாம். இதற்குத் திட்டமிட்டுப் பாடுபட வேண்டும்.

கே: காமராசரைத் தோற்கடித்த மாணவ தலைவர் சினிவாசன் தொடர்ந்து கல்விகற்க முடியுமா?

ப: முடியும்! தடையில்லை——மந்திரியாகாவிட்டால்.

ஃ

பாவா-அன்பரசி,
வேலணை கிழக்கு.

கே: மனிதனின் முதல் ஆசை எது? இரண்டாவது ஆசை எது?

ப: முதலாவசை பண ஆசை——இரண்டாவது ஆசை உயிர் மீது ஆசை.

ஃ

நா. சிவசுப்பிரமணியம்,
விந்துலை.

கே: தினபதி பத்திரிகையின் சகோதர சிங்கள ஏடான 'தவச' தமிழ்நாட்டில் 25 பாராளுமன்றத் தொகுதிகளை 'அப்பே தெமலுபக்சய' (நாம் தமிழர்கட்சி) வெற்றிபெற்றதாக குறிப்பிட்டுள்ளதே! அப்படி ஒரு கட்சி இருப்பதாகத் தெரிய வில்லையே!

ப: 'நாம் தமிழர்' என்ற சொல் சிங்களமக்களிடையே தமிழர்கள்மீது வெறுப்பைத் தூண்டுவதற்குப் பயன்படலாம் என்று கருதியே தி. மு. க. வுக்குப் பதிலாக இச் சொல்லை உபயோகப்படுத்துகின்றது இப்பத்திரிகை.

ஃ

சின். கென்னடி,
யாழ்ப்பாணம்.

கே: இந்தியாவில்நடந்தேறிய தேர்தலில் அடைந்துள்ள மாற்றம்பற்றி தங்கள் கருத்தென்ன குயுத்தியாரே?

ப: திராவிடத்தில் சரிபாதியும் வங்காளமும் இடதுபக்கமும் வடக்கே மற்றும் சில பகுதிகள் வலதுபக்கமும் சாய்ந்துவிட்டன. காந்திஜியைக் கொன்ற கட்சி தலைநகரைக் கைப்பற்றிவிட்டது. வடகோடியில் இந்திவெறிக்கட்சி வெற்றி—தென்கோடியில் இந்தி எதிர்ப்புக்கட்சி வெற்றி——வடநாட்டிலும், தென்னட்டிலும் அரசியல்வளர்ச்சி வெவ்வேறு விதமானது என்பதை தேர்தல் எடுத்துக்காட்டி விட்டது.

கே: இலங்கையில் சில சிங்களத் தலைவர்கள் தி. மு. க. வெற்றியை அறிந்து பிதற்றிக் கிலியுண்டாக்குவதேன்?

ப: அவர்களுக்கு உண்மை தெரியும். இடைத் தேர்தலில் வெற்றிபெறுவதற்காக இந்தப் பூச்சாண்டியைக் காட்டுகின்றனர்.

ஃ

அ. தவராஜா,
ஊர்காவற்றுறை.

கே: தமிழ்நாட்டில் தோல்வி கண்ட காங்கிரஸ்கட்சி மறுமுறை நடைபெறும் தேர்தலில் ஒரு இடம் கூடப் பெருது என்பது என் கருத்து. குயுக்தியாரே உம் கருத்து என்னவோ?

ப: பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியாகச்செயலபடும் கட்சிக்கு ஆளும் கட்சியாக மாறுவதற்கு இடமுண்டு. அன்று எதிர்க்கட்சியாக இருந்த தி. மு. க. இன்று ஆளும் கட்சியாகியுள்ளது. இன்று எதிர்க்கட்சியாக இருக்கும் காங்கிரஸ் நாளை ஆளும் கட்சியாக வராது என்று கூறுவது தவறு. அப்படிக் கூறுவது பாராளுமன்ற ஜனநாயகத்தைக் கேலிசெய்வதாகும்.

கே: இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவி தி. மு. க. ஆட்சி தமிழ்நாட்டில் வந்ததை யிட்டு பயம் கொள்வது ஏன்?

ப: அவர் பயப்பட வில்லை. பயப்படுவதாக சிங்கள வாக்காளரிடம் காட்டிக்கொள்கிறர் 'வோட்டு' வேட்டைக்காக!

ஃ

ஆர். பாலகிருஷ்ணன்
மாத்தளை

கே: நம் நாட்டில் தலைவிரித்தாடும் அரிசிப் பஞ்சம் எப்போது நீங்கும்?

ப: எல்லோருக்கும் பசி திர உண்பதற்குச் சோறு கிடைக்கும் போது அரிசிப்பஞ்சம் நீங்கிவிடும்.

ஃ

க. இ. ம.,
மாதகல்.

கே: காதலில் தோல்விகண்ட காதலன் தற்கொலை செய்து கொள்வதை எப்படித் தடுக்கலாம்?

ப: மீண்டும் காதலிப்பதற்கு மற்றொரு பெண் இவ்வுலகில் உண்டென்பதை அவனுக்குச் சுட்டிக்காட்டுவதின் மூலம்.

ஃ

என். டி. அப்துல்ரஹ்மான்,
பேருவளை.

கே: எனது வயது கூடிக் கொண்டே வருகிறதே! அதைக் குறைக்க ஒரு வழி சொல்லமாட்டீர்களா?

ப: உங்கள் சட்டையின் பித்தான் துவாரத்தில் கவர்ச்சியான ஒரு வர்ண ரோசாப் பூவை வைத்துக்கொள்ளுங்கள். வயதில் பல வருடங்கள் குறைந்துவிடும்.

ஃ

டி. மகேஸ்வரி,
கொழும்பு-10.

கே: பிறந்தால் சந்தோஷப் படுகிறேம்—இறந்தால் துக்கப் படுகிறேம். ஏன்?

ப: காரணம் இரண்டிலும் நாம் சம்பந்தப்படாமல் இருப்பதுதான்—மற்றவரது பிறப்பாதலின் சந்தோஷப்படுகிறேம். மற்றவரது இறப்பாதலின் துக்கப்படுகிறேம். ஒருவர் தான் பிறக்கும்போது சந்தோஷப்படுவதுமில்லை; இறந்ததற்காக துக்கப்படுவதுமில்லை.

ஃ

எம். ஆர். எஸ்.,
பருத்தித்துறை.

கே: என்காதலி நான்எதைச் சொன்னலும் சிரிக்கிருள். இதன் அந்தரங்கமென்ன?

ப: அவளுக்கு அழகான பற்கள் இருப்பதுதான் காரணம்.

ஃ

பாலகிருஷ்ணன்,
காங்கேசன்துறை.

கே: நான் எந்தப்பெண்ணைக் காதலித்தாலும், அவளைக் காதலிப்பதற்கு எனக்குப் போட்டியாக ஒருவன் முளைத்துவிடுகிறன் இதற்கு என்ன செய்யலாம்?

ப: போட்டி ஏற்படாமல் காதலிக்க வேண்டுமானல் தன்னைத் தான் காதலிப்பது தான் ஒரேவழி.

ஃ

எஸ். எஸ். பழனிநாதன்,
பதுளை.

கே: தெய்வீகத்தன்மைக்கும் மனிதத்தன்மைக்கும் உள்ள வித்தியாசமென்ன?

ப: சாப்பிடுவதற்கும், சிரணிப்பதற்குமுள்ள வித்தியாசமே! சாப்பிடுவது மனிதத்தன்மை—சீரணிப்பது தெய்வீகத்தன்மை.

ஃ

சி. ராஜேந்திரன்,
திருமலை.

கே: எதிலும் சந்தேகம் ஏற்படும்போது என்ன செய்யவேண்டும்?

ப: உண்மையைப் பேசவேண்டும்.

ஃ

எம். ஆர். வெங்கடேசன்,
கொழும்பு-11.

கே: ஒரு பெண் பாதுகாக்கக் கூடிய இரகசியம் எது?

ப: அவளுடைய வயது.

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
194, ஏ பண்டாரநாயக்கா வீதி,
கொழும்பு-12

டி. ஆர். இராமன்,
மட்டக்களப்பு.

கே: உலகிலேயே மிக எளிதான வேலை எது?

ப: மிக மிக எளிதானவேலை புகைப்பதை நிறுத்துவது தான். ஏனெனில், அதனை ஆயிரம் தடவைக்குமேல் நான் செய்திருக்கிறேன்.

ஃ

எஸ். பத்மினி,
அநுராதபுரம்.

கே: ஆண்டவனைக் கண்டு பிடிக்க நீங்கள் ஏன் முயற்சி செய்யக் கூடாது?

ப: ஆண்டவன் இருக்கும் போது அவரைக் கண்டுபிடிக்க ஏன் முயற்சிசெய்யவேண்டும்? அவர் இல்லாவிட்டால் அல்லவா முயற்சி செய்யவேண்டும்?

ஃ

ப. சண்முகம்,
அட்டன்.

கே: எழுத்தாளர்கள் பெரும்பாலும் உண்மையை எழுதுவதில்லையே! ஏன்?

ப: தங்களிடமுள்ள மிகவும் பெறுமதியான பொருள் உண்மையே என்று எழுத்தாளர்கள் கருதுகின்றனர். எனவே அதனை வீணக்காமல் மிகச் சிக்கனமாக உபயோகிக்கின்றனர்.

ஃ

எஸ். உமைதா,
கடுகண்ணுவை.

கே: உடலை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள என்னசெய்ய வேண்டும்?

ப: நீங்கள் உண்ண விரும்பாததை உண்ணுங்கள். குடிக்க விரும்பாததைக் குடியுங்கள். செய்ய விரும்பாதவதைச் செய்யுங்கள்.

ஃ

வி. குணராணி,
கண்டி.

கே: குயுக்தியாரே, நீங்கள் இறந்துவிட்டதாகப் பத்திரிகையில் செய்தி வெளிவந்திருக்கிறதே?

ப: செய்தி வெளிவந்தது உண்மை. ஆனல் வெளிவந்திருந்தது என்து மரணம்பற்றி மிகைப்படுத்தப்பட்ட செய்தியாகும்.



## மது(ர) மொழி!

இவண்டவிலுள்ள மதுக் கடையொன்றில் மொழி வேறுபாடு கைவிடப்பட்டது.

—செய்தி

மது(ர) மொழி பேசுவோர் உலாவும் இடத்தில் மொழிவேறுபாடு ஏன் என்று அதன் உரிமையாளர் யோசித்திருக்கலாம்.

## செருப்படிக் காதல்!

"கன்னை கண்மணிக்கு அவசரமா?" என்று மாணவியை நோக்கிப் பாடிய வாலிபனை அம்மாணவி செருப்பால் அறைந்தாள்.

—செய்தி

—செருப்படிபட்டதும் 'சட்டி சுட்டதடா' கைவிட்டதடா! என்று அந்த வாலிபர் பாடிக்கொண்டு போயிருப்பாரோ?

## புதிய சிந்தனை!

தமிழ் நாட்டில் காங்கிரஸ் தோற்றதற்கு இந்தி எதிர்ப்புணர்ச்சியே முக்கிய காரணம் என்று காமராசர் காங்கிரஸ் காரியக்கமிட்டியில் கூறினுர்.

செய்தி

—தோல்விகள் தான் மனிதர்களைச் சிந்திக்க வைக்கின்றன போலும்!

## தன் வாக்கே...

உத்தரப் பிரதேசத்தில் ஒரு அமைச்சர் ஒரு வாக்கினுல் வெற்றியீட்டினுர்.

செய்தி

—தன் வாக்கே தனக்குதவியென்பது புதுமொழியோ?

## 13 கூட்டு

மேற்கு வங்காளத்தில் 13 கட்சிகளை கொண்ட அரசாங்கம் நிறுவப்படும்.

செய்தி

—இங்குள்ள தேசிய அரசாங்கத்தை ஏழு கட்சிக் கூட்டு என்று கேலி செய்யும் எதிர்க் கட்சியினருக்கு இது அர்ப்பணம்!

## ஆளும் ஆட்டமும்!

ஆளை ஆள் கண்டிப்பதில் பயனில்லை.

—ஆளை ஆள் கண்டிக்கவில்லை; ஆட்டத்தைததான் கண்டிக்கிறேம் என்று கூறுகிறர் பொவின் எதிர்ப்பாளர் ஒருவர்.








எல்லோரும் புகைப்பது

# கமலா பீடி

ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்
கமலா ஸ்டோர்ஸ்,
நிர். 15, செட்டியார் தெரு,
கொழும்பு-11.
தந்தி: தாமரை
தொலைபேசி:


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்ணா இலங்கை வருகிறார்

## சிங்களத் தினசரி கயிறு திரிக்கிறது

**சென்னை முதன் மந்திரியும் தி. மு. க. தலைவருமான அறிஞர் அண்ணா இலங்கைக்கு விஜயம் செய்கிறார் ஏன் தெரியுமா? நாட்டைக் கூறு போடுவதற்காக ஆலோசனை கூறுவதற்கும், தமிழர் பலத்தை மேன் மேலும் பலப்படுத்துவதற்கும்—எப்பொழுது வருவார் தெரியுமா? மாவட்டசபை மசோதா பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் போது அவர் இலங்கையில் இருப்பார். இப்படி ஒரு செய்தியை எத்த (4-3-1967) வெளியிட்டுள்ளது.**

எத்த கூறுவதாவது:-

'தமிழரசுக் கட்சியின் விசேட அழைப்பின் மீது தி.மு.க.தலைவர் திரு. அண்ணாதுரை அடுத்த மே மாதக் கடைசியில் இலங்கை வரவிருக்கிறார்.

தமிழரசுக் கட்சியின் அழைப்பை அவர் ஏற்றுக் கொண்டிருக்கிறாரெனினும் இலங்கைக்கு வரும் திகதியை பின்னர் தெரிவிப்பதாக அறிவித்திருக்கிறார்.

மாவட்ட சபை மசோதா பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் போது அவர் இலங்கையில் இருக்கக் கூடியதாக அதற்குச் சில தினங்களுக்கு முன்பு திரு. அண்ணாதுரையை இலங்கைக்கு அழைப்பதற்குத் தமிழரசுக் கட்சி நடவடிக்கை எடுக்கிறது,

மாவட்ட சபை மசோதாவைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் திகதி பற்றி பிரதமர் இன்னும் முடிவு செய்யாதால் திரு. அண்ணாதுரையின் இலங்கை விஜயத்துக்கான திகதியை நிர்ணயிக்க முடியாத நிலையில் தமிழரசார் இருக்கின்றனர்.

திரு. அண்ணாதுரையின் கட்சிஅரசாங்கத்தைக்கைப்பற்றியதும் இலங்கை மலை நாட்டிலுள்ள தி. மு. க. காரர்கள் தொடர்ந்து சில நாட்களாக விழாக் கொண்டாடியதுடன், தங்களது தலைவரை இலங்கைக்கு அழைத்துக் கொடுக்குமாறு தமிழரசாரை வற்புறுத்தியுள்ளனர்.

பல காரணங்களை முன்னிட்டு திரு. அண்ணாதுரை இலங்கைக்கு வரவிருப்பதாக தமிழரசுக் கட்சிப் பிரமுகர் ஒருவர் கூறினார். அவற்றிற் சில:-

★ இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் அந்தரங்கத்தைப் பற்றிபேச்சு வார்த்தைநடத்துதல்.

★ மாவட்டசபை மசோதா பற்றி ஆலோசனை கூறுதல்.

★ மலைநாட்டிலுள்ள தி.மு.க.வுக்கு புத்துயிரளித்தல்

கலாசார தூது என்ற பெயரால் திரு. அண்ணாதுரையின் சகாக்கள் மூன்று பேர் ஏற்கனவே இலங்கைக்கு வந்தார்கள். தி. மு. க. வின் உயர்தரப் பிரதிநிதிகள் மட்டுமின்றி, எம். ஜி. இராமச்சந்திரன், எஸ். தங்கவேலு, எம். இராஜேந்திரன் ஆகியோரும் இலங்கைக்கு வந்தனர்.

அவர்கள் தமிழரசாருடன் நீண்ட பேச்சு வார்த்தைகள் நடத்தினர் என்பதை ஏற்கனவே 'எத்த' மட்டும் பிரசுரித்துள்ளது.

இந்த விஜயத்தின் போது மலை நாட்டு தி. மு. க. வுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தியதுடன், அந்த ஸ்தாபனத்தை பலப்படுத்தும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர்.

தங்கவேலு கம்பளையில் ஒரு தேயிலைத் தோட்டம் விலைக்கு வாங்கவும் இப் பயணத்தின்போது முடிவுசெய்தார். இம் மூவரில் இராமச்சந்திரன் பெருவாரியான வாக்குகளைப் பெற்று இந்தியத் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளார்.

இதற்கிடையே மாவட்ட சபை பற்றி பிரதம மந்திரியின் ஸ்திரமான முடிவு தெரியும்வரை தமிழரசார் பொறுமையின்றிகாத்திருக்கின்றனர்.

மாவட்டசபை மசோதா அடுத்த மே அல்லது ஜூன் மாதத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படாவிட்டால் அரசாங்கத்திலிருந்து தமிழரசுக் கட்சி விலகிவிடுமென்று அண்மையிற்தான் பயமுறுத்தினர்' ஆதலின் அடுத்த ஜூன் மாதத்துக்கு முன் மாவட்டசபை மசோதாவை பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்க வேண்டிய நிலை பிரதமருக்கு ஏற்படும்.

## மூலையில் கிடக்கும் தமிழ் சான்றிதழ்

அரிசிப் பங்கீட்டுப் புத்தகங்களை அரசாங்கத்திடம் கையளிப்பவர்களுக்கு, வழங்குவதற்காகப் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவின் கையெழுத்துடன் கூடிய நற் சான்றிதழ்களைத் தூக்கி ஒரு மூலையிற் போட்டுவிட்டனர், என்று தவஸ (23-3-67) ஒரு செய்தியை வெளியிட்டுள்ளது.

'அரிசி நெருக்கடியிலிருந்து மீளுவதற்காக பங்கீட்டுப் புத்தகங்களை அரசாங்கத்துக்கு அன்பளிப்பு செய்யும்படி விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு இதரமாகாணங்கள் போதியளவு செவிசாய்த்திருக்கின்றன. குறிப்பாகத் தமிழர்கள் பெரும்பாலும் வட, கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழ் மக்கள் இவ் வேண்டுகோளுக்கு எங்ஙனம் செவிசாய்த்துள்ளனர் என்பது பற்றி விரிவான ஓர் அறிக்கையைப் பிரதமருக்கு விவசாய அமைச்சு அனுப்பி வைக்கும் என்று தவச மேலும் கூறுகிறது.

**சிங்கள இதழ்களில்...**

# இலங்கைக்கு ஆபத்து

## தி. மு. க.வின் ஆட்சிக்கு ஈழம் அடிபணியும்

### சிங்கள ஏட்டின் விஷமம்

**'சென்னை மாநிலத்தில் அரசாங்க அதிகாரம் தி. மு. க. வுக்கு கிடைத்ததால் இலங்கைக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. எப்படி? அந்தக் கட்சியின் நோக்கம் ஒரு திராவிட சாம்ராஜ்யத்தை நிறுவுவதே. தமிழரசுக் கட்சியின் நோக்கமோ வட, கிழக்கு மாகாணங்களைப் பிரித்து அங்கு சமஷ்டி அரசுநிறுவுவதே.**

**ஆகவே இங்கு சமஷ்டி அரசு நிறுவப்பட்டால் இது அந்த திராவிட சாம்ராஜ்யத்துடன் இணைக்கப்படுமென்பதில் ஐயமில்லை. அதன்பின் இலங்கையில் எஞ்சிய பகுதிகள் அந்த திராவிட சாம்ராஜ்யத்தின் குடியேற்றப் பகுதியாகி திராவிட சாம்ராஜ்யத்துக்கு அடிபணிவதைத் தவிரவேறு வழியில்லையாது' இவ்வாறு 'எத்த' வெளியிட்டுள்ள ஒரு கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இக் கட்டுரையைப் பிரபலசிங்கள எழுத்தாளர் திரு எச். சே. மஹிந்ததாச எழுதியுள்ளார்.**

இக் கட்டுரையில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது-:

'இலங்கையில் இந்தியத் தமிழர் வசிக்கும் பிரதேசங்கள் உட்பட ஏனைய தமிழர் வசிக்கும் பிரதேசங்களையும் உள்ளடக்கி, ஆந்திரா, கேரளம், கர்னாடகம், சென்னை ஆகிய மாநிலங்களையும் உள்ளடக்கி திராவிட சாம்ராஜ்யமொன்றினை நிறுவுவது தி. மு. க. வின் அடிப்படை இலட்சியம் என்பதை அந்தக் கட்சியின் தலைவர்கள் பல முறை கூறியுள்ளனர்.

திராவிட சாம்ராஜ்யத்துடன் இலங்கையில் தமிழ் மக்கள் வசிக்கும் பிரதேசங்கள் மட்டுமின்றி முழு இலங்கையையும் இணைத்துக் கொள்வது தி. மு. க. வின் நோக்கம் என்பதற்கு பல ஆதாரங்கள் உண்டு.

இலங்கையும் தென்னிந்தியாவும் ஒரே நாடாக இருந்ததென்று புராணங்கள், இதிகாசங்கள் கூறுவதால் இலங்கையும் திராவிட சாம்ராஜ்யத்துக்கு உரியதாகும் என்பதே அவர்களின் வாதம்.

காலஞ் சென்ற பிரதமர் பண்டாரநாயக்கா சிங்களம் மட்டும் மசோதாவைப் பாராளுமன்றத்திற் சமர்ப்பித்த போது தி. மு. க. வின் தலைவர் திரு. சி. என். அண்ணாதுரையும், தமிழரசுக் கழகத்தின் தலைவர் திரு. சிவஞானகிராமணியாரும் மசோதாவைக் கண்டித்தனர்.

அது மட்டுமல்ல, அதற்கெதிராகப் போராடுவதற்குத் தென்னிந்தியாவிலிருந்து படைகள் அனுப்பப்போவதாகவும் பயமுறுத்தினர்.

'சிங்களத் தீவுக்கு ஒரு பாலம் அமைப்போம்', என்ற போர்க் கோஷத்துடன் சிங்களம் மட்டும் மசோதாவுக்கு எதிராக ஒரு பெரிய இயக்கத்தையே நடத்தினர்.

**வடக்கே விழா!**

அந்தச் சமயத்தில் தமிழர் படைகள் இலங்கைக்கு அனுப்பப்படாவிட்டாலும், அவர்களின் நோக்கம் என்ன என்பது அவ்வாறுகூறியதிலிருந்து தெளிவாகிறது.

'உங்களின் வெற்றி எங்களின் வெற்றியாகும்' என்று வடக்கே தமிழரசுத் தலைவர்கள் தி. மு. க. தலைவர் திரு. அண்ணாதுரைக்கு வாழ்த்துச் செய்திகள் அனுப்பியுள்ளனர்.

தி. மு. க. சென்னை மாநிலத்தில் பெற்ற வெற்றியால் தமிழரசுத் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் எவ்வளவு தூரம் துணிவு பெற்றுள்ளாரென்றால், 'ஸ்தாபனத்தைப் பலப்படுத்தி ஒரே மனிதனைப் போல எழுந்து நிற்க வேண்டும், என்று தனது கட்சியினருக்கு அறிவித்துள்ளார்.

'நமது தமிழன்னை இனி தலை தூக்க முடியும்' என்று உள்ளூராட்சி அமைச்சர் திரு. திருச்செல்வமும், 'தமிழ் அரசு ஒன்று நிறுவப்பட்டது எமக்கு உற்சாகமளிக்கிறது' என்று தமிழரசுக் கட்சித் தலைவர் டாக்டர் நாகநாதனும் தி. மு. க. வெற்றி பற்றி அகமகிழ்ந்து கூறியுள்ளனர்.

தென்னிந்திய தி. மு. க. வுடன் ஒன்று சேரும் நோக்கம் தமிழரசுக் கட்சிக்குக் கிடையாதென்று திரு. திருச்செல்வம் கூறியிருக்கிறார் என்றொரு செய்தியை 'தினமின' ஏடு 27ந் திகதி வெளியிட்டிருந்தது.

வீட்டில் கன்னம் வைக்கப் போகும் திருடர்கள் வீட்டில் குடியிருப்பவர்களுக்கு அது பற்றி ஏற்கனவே அறிவிப்பதில்லையென்பதும், இரவில் கன்னக்கோல் வைக்கும் கள்ளர்கள் பகலில் ஒருவருக்கொருவர் சண்டைபோட்டுக் கொள்வதுண்டு என்பதும்சிறு குழந்தைகளுக்கும் கூட தெரியும்.

தி. மு. க. அரசாங்கம் மத்திய அரசாங்கத்திடமிருந்து பிரிந்து போகாது என்று 'தினமின' கூறுகிறது. உடனடியாக யாரும் அப்படிச் செய்ய மாட்டார்கள் என்பது தெரிந்த விஷயமே.

மத்திய அரசாங்கத்திடமிருந்து பிரிந்து செல்லாமல் திராவிட சாம்ராஜ்யம் நிறுவும் நோக்கத்தை எப்படி நிறைவேற்ற முடியும்?

இந்தியப் பொதுத் தேர்தல் பற்றி விமர்சனம் செய்த 'நியுயோர்க்டைம்ஸ்' பத்திரிகை, நேருவின் மகிமையால் இந்தியா ஒரே நாடாக இருந்ததெனினும் இனி இந்தியா துண்டு துண்டாகத் துண்டாடப்பட்டுவிடுமென்றும், உள்ளூரில் பல பிளவுகள் தோன்றக் கூடுமென்றும் எழுதியுள்ளது.

சென்னை தி. மு. க. வுக்கும் தமிழரசுக் கட்சிக்குமிடையேயுள்ள தோழமை இன்றோ—தி. மு. க. ஆட்சிக்கு வந்த பிறகோ ஏற்பட்டதன்று. ஆரம்பத்திலிருந்து இரு கட்சிகளும்' தோழமைகொண்டிருக்கின்றன.

தமிழரசுக் கட்சி 1958ல் காலிமுகத் திடலில் சத்தியாக்கிரகம் நடத்திய பொழுதும், யாழ்ப்பாணம் கச்சேரியில் சத்தியாக்கிரகம் நடத்

(9-ம் பக்கம் பார்க்க)

களிப்புற்ற வாழ்க்கை சலிப்புற்றதா?

அதற்குக் காரணம்...?

கல்யாண விஷயமா?
காதல் விவகாரமா?
கிரக தோஷமா?
கீர்த்தி கேடா?
குடும்பத் தகராறு?
கூடுதல் கடனா?
கெடுதல் வருகையா?
கேடுகள் சேர்க்கையா?
கை நஷ்ட வியாபாரமா?
கொடிய எதிரியா?
கோணல் வாழ்வா?
கௌரவ தாழ்வா?

எதுவானாலென்ன!

நிவாரணம் பெற

என் உதவியை நாடுங்கள்!

இலவச ஆலோசனைக்கு

எனக்கொரு கடிதமெழுதுங்கள்!

அரசாங்க பதிவு பெற்ற

பி. எம். திசாநாயக்க

— நான்கு கோவில்களின் தர்மகர்த்தா —

கண்டி ரோட், கம்பளை. போன்: 454

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊவா பகுதியில் தனிச் சிங்களம்

—ஃ—

## தமிழாசிரியர்கள் திணறல்

மலையகத்திலேயே எண்ணற்ற தமிழ் பாடசாலைகளைக் கொண்டிருப்பது ஊவாமாகாணத்திற்குரிய பண்டாரவளை, வித்தியா கந்தோராகும். அத்தகைய கந்தோரில் தமிழ்ப் பாடசாலைகள் சம்பந்தமாக நிகழும் சகல கருமங்களும் தனிச் சிங்கள மொழியிலேயே நடைபெற்று வருவது உச்சக்கட்டத்தை அடைந்து விட்டது. ஏன்! வித்தியா கந்தோர் என்ற அறிவித்தல் பலகையில் கூட ஆங்கிலத்திற்கும், தமிழுக்குமிடமின்றி தனிச் சிங்களத்திலேயே எழுதப்பட்டுள்ளது.

ஒரு தமிழாசிரியர் மேற்படி காரியாலயத்திற்குப் போய் தன் கடமையை முடிப்பதற்கு ஊழியர் ஒருவரை காண்பதற்கு முன் நிரப்பிக் கொடுக்கும் அட்டையும் தனிச்சிங்களத்திலேயே அச்சிடப்பட்டுள்ளதால் தமிழாசிரியர்கள் சங்கடப்படவேண்டிய துன்ப நிலை நிலவி வருகிறது.

பண்டாரவளை வித்தியா கந்தோரிலிருந்து தமிழ்ப்பாடசாலை தலைமை ஆசிரியர்களுக்கும். தமிழ் அதிபர்களுக்கும் அனுப்பப்படும் சகல கடிதத்தொடர்புகளும், சுற்றறிக்கைகளும் தமிழும் ஆங்கிலமும் தவிர்க்கப்பட்ட தனிச் சிங்கள மொழியிலேயே அனுப்பப்பட்டு வருகின்றன.

தமிழாசிரியர்களுக்கு வரும் உத்தியோகம் சம்பந்தபட்ட கடிதங்களும் கூட தனிச் சிங்களத்திலேயே வந்தவண்ணமிருக்கின்றன. இவற்றையெல்லாம் தட்டிக் கேட்க ஆளில்லாத காரணத்தினால் பண்டாரவளை வித்தியா பகுதி தனது தனிச் சிங்கள கெடுபிடியை வாயுவேகத்தில் நடத்திக் கொண்டு வருகிறது. ஊவாப் பகுதியிலுள்ள தமிழ் பாடசாலைகளின் எண்ணிக்கையின் படிக்கு இந்த காரியாலயத்தில் ஐந்து தமிழ் ஊழியராவது கடமையாற்ற வேண்டும். ஆனால் தமிழ்ப்பகுதிக்கென இருப்பவர் ஒரேயொரு தமிழர் மட்டுமே. இதுபற்றி பலர் இ. தொ. ழகத்திடம் முறையிட்டுள்ளனர்.

## எங்கே ரூ1/-சம்பள உயர்வு

## குட்டையை குழப்புவது யார்?


மலைநாட்டு தமிழ் தொழிலாளர்களின் இழந்த உரிமைகளை மீட்க 'நாடற்றவன்' என்ற அவப்பெயரைப்போக்க மலையகத்தொழிலாளர்களும் மனிதர்களாக இந்நாட்டில் உலவி வர தியாகச் செம்மல்களையும் போராடத் துணிந்த வீரர்களையும் கொண்ட நமது கழகம் தொழிற்சங்க அநுபவம் பெற்றவர்களையும் பெரும்சட்ட வல்லுனர்களையும் கொண்டுள்ளது. அதுமாத்திரமன்றி தமிழ் பேசும் தொழிலாளர்கள் அனைவரையும் ஓரணியில் திரட்டி இனவழி ஒற்றுமை வழியில் உறுதிபூண்டு உழைத்து வருகின்றது. எமது கட்சியும் கழகமும் எம்மை வஞ்சிக்கும் சக்தி எங்கிருந்து எம்மை சுரண்ட வந்த போதும் அதை பார்த்துக் கொண்டு சும்மாயிருக்க விடமாட்டாது. அதற்கு உதாரணமாக அரசாங்கத்துடன் எமது தமிழ் அரசுக்கட்சி சேர்ந்திருந்த போதும் நாம் முதலாளிமார் சம்மேளனத்திற்கு எதிராக பஞ்சப்படி 17-50 போராட்டத்தில் இறங்கினோம். ஆனால் அன்று பஞ்


# ராணி

# அழகிகளைத் தெரிவு செய்து அழகிய பரிசொன்றைப் பெறுங்கள்

### 1 ஆம் பரிசு

சிங்கர் தையல் மெசின் (கபினெற் மொடல்) அல்லது) ரூ. 1000/- ரொக்கம்.



### 2 ஆம் பரிசு

ஒரு குருண்டிக் பாட்டரி ரேடியோ அல்லது ரூ. 525/- ரொக்கம்.



### 3 ஆம் பரிசு

ஒரு ஹம்பர் பைசிக்கிள் அல்லது ரூ. 300/- ரொக்கம்.




### 4 ஆம் பரிசு

டயமன் மண்ணெண்ணெய் அடுப்பு மற்றும் சமையல் பாத்திரங்கள் கொண்ட பொட்டலம் அல்லது ரூ. 185/- ரொக்கம்.



முதலாவதாகக் கிடைக்கபெறும் அதிதுப்புரவான சரியான விடைத்தாளுக்கு முதலாவது பரிசும் 2 ஆவது 3 ஆவது விடைகளுக்கு 2 ஆம் 3 ஆம் பரிசுகளும் இவ்வாறே பிற பரிசுகளும் வழங்கப்படும்.



மேலேயுள்ள படத்தில் இலங்கையின் பண்டைய அரசிகளில் ஒருவரான பத்மாவதி குளித்துக் கொண்டிருக்கிறார். அவரைச் சூழ அவருடைய சேடிமாரும் மற்றும் பல அழகிகளும் காணப்படுகின்றனர். இவர்களுடைய முகங்கள் மறைந்திருக்கின்றன.

நீங்கள் இப்பொழுது செய்யவேண்டிய காரியம் மிகவும் இலகுவானது. படத்தில் எத்தனை முகங்கள் உண்டு என்பதை எண்ணிப் பார்த்து, உங்கள் பதிலைக் கீழேயுள்ள பத்திரத்தில் எழுதி அந்தப் பத்திரத்தை ராணி சந்தன சோப் உறையொன்றுடன் த. பெ. 1119, கொழும்பு என்னும் விலாசத்துக்கு அனுப்ப வேண்டியதே.

மேலேயுள்ள படத்தில் . . . . . . . ராணி
அழகிய முகங்கள் காணப்படுகின்றன.

பெயர்: ..............................

வயது ..............................

விலாசம் ..............................

ஒப்பம்: ..............................

விதிகள்

1. இந்தப் போட்டியில் சுவதேசி இன்டஸ்ட்றியல் வேர்க்ஸ் லிமிட்டெட் மலர் அன்ட் பிப்ஸ் (இலங்கை) லிமிட்டெட், கிரான்ட் அட்வேர்ட்டைஸிங் (இலங்கை) லிமிட்டெட் ஆகிய ஸ்தாபனங்களின் ஊழியர்களோ அவர்களின் குடும்பத்தவர்களோ பங்குபற்றத் தகுதியற்றவர்களாவர்.
2. இந்தப் போட்டி சம்மந்தமாக எத்தகைய கடிதப் போக்குவரத்தும் நடைபெறமாட்டாது.
3. நீதிபதிகளின் தீர்ப்பே இறுதி முடிவாக இருக்கும்.

சோப்புகளில் ராணி ராணி சந்தன சோப்

சுவதேசி இன்டஸ்ட்றியல் வேர்க்ஸ் லிமிட்டெட், கந்தானை.

GRANT-57


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீ. ஜீ. க்குப் பதில் - கட்டாயநாடு இடாப்புமில்லை - மசோதாவில்

- இலங்கை - இந்திய ஒப்பந்த அமுல் மசோதா பற்றி எழுந்துள்ள மயக்க நிலையினை இக் கட்டுரை மூலம் தெளிவுபடுத்தியுள்ளார் இலங்கைத் தமிழரசுக் கட்சிப் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம்.
- 1948-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட இந்திய-பாகிஸ்தானிய பிரசாவுரிமைச் சட்டமும் இலங்கை இந்திய ஒப்பந்த அமுல் மசோதாவும் ஒன்றே என்ற திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் அண்மைக்கால வாதத்திற்கும் இக் கட்டுரையில் ஆப்பு வைக்கப்பட்டுள்ளது.



- இலங்கை-இந்தியப் பிரச்சினை பற்றிய வரலாறும் இக் கட்டுரையில் தெளிவாகவும் அதேநேரத்தில் சுருக்கமாகவும் விளக்கப்பட்டிருக்கிறது.
- கட்டாய நாடு கடத்தல் என்ற பேச்சிற்கு புதிய மசோதாவில் இடமில்லை - என்பதனையும் பல ஆதாரங்களுடன் திரு. அமிர்தலிங்கம் இக் கட்டுரையில் தெளிவுபடுத்தியிருக்கிறுர்.

மலைநாட்டுத் தமிழ் மக்கள் பிரச்சினையில் இலங்கைத் தமிழரசுக் கட்சி தனது கொள்கைகளை கைவிட்டு விட்டதென்ற குரல் சில வட்டாரங்களிலிருந்து கிளப்பப்பட்டுள்ளது. அதே நேரத்தில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்கள் 1948ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட இந்திய—பாகிஸ்தானிய பிரசாவுரிமைச் சட்டமும், இப்போது நிறைவேற்றப்பட்டிருக்கும் இலங்கை—இந்திய ஒப்பந்த அமுல் மசோதாவும் ஒரே மாதிரியான சட்டங்கள் என்றும் அன்று தான் இந்திய—பாகிஸ்தானிய பிரசாவுரிமைச் சட்டத்தை ஆதரித்ததைக் கண்டித்தவர்கள் இன்று அதே செயலை தாமும் செய்திருக்கிறுர்கள் என்றும் கூறிவருகின்றுர். இவ் விரண்டு தவறுபட்ட கருத்துக்களுக்கும் விளக்கம் கொடுத்து முற்றுப் புள்ளிவைக்க வேண்டியது அத்தியாவசியமாகின்றது.

## பிரச்சினையின் ஆரம்பம்

இந்நாட்டில் காடுகளை அழித்து தேயிலை றப்பர் தோட்டங்களை ஆக்குவதற்கு முற்பட்ட வெள்ளையர் அவற்றில் வேலை செய்வதற்கு இங்கு போதிய தொழிலாளர்கள் குறைந்த சம்பளத்தில் கிடைக்காத காரணத்தினுல், தமிழகத்திலிருந்து பல்லாயிரக்கணக்கானவர்களை கட்டுப்படுத்தப்பட்ட தொழிலாளர்களாக இங்கு கொண்டு வந்தார்கள். அவர்களுக்கு இந்நாட்டுப் பிரசைகளுக்குரிய உரிமைகள் அளிக்கப்படுமென்று உறுதி கூறப்பட்டது.

டொனமூர் அரசியல் திட்டம் இந்நாட்டில் நடைமுறைக்கு வந்து பெரும்பான்மைச் சமூகத்தவரின் கையில் அரசியல் ஆதிக்கம் படிப்படியாகப் போனவுடன் இப்பிரச்சினையில் வகுப்புவாதம் தலைதூக்கத் தொடங்கியது. பாரம்பரியமான சிங்களப் பிரதேசம் எனக் கூறப்படும் மலைநாட்டில் இத் தமிழ்த் தொழிலாளர்கள் லட்சக்கணக்கில் வாழ்வது கண்டிச் சிங்கள மக்களின் தாயகத்தைப் பறிப்பதாகும் என்ற பிரசாரம் வகுப்புவாத அரசியல் தலைவர்களால் கிளப்பப்பட்டது. ஆயினும் தோட்ட முதலாளிகளின் நலனில் அக்கறை கொண்டவர்கள் மேற்கொண்டும் தமிழ்த் தொழிலாளர்கள் இங்கு வருவதை ஆதரிக்கவே செய்தனர்.

சிங்கள மகா சபைத் தலைவராக இருந்த காலம் சென்ற திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா இப்படி ஆதரித்தவர்களில் ஒருவர். ஆனுல் இத் தொழிலாளர்களுக்கு அரசியல் உரிமைகள் வழங்குவதற்கு சிங்கள மந்திரி சபை எதிர்ப்புத் தெரிவித்து வந்தது. இதனுல் இந்திய அரசாங்கம் பயிற்சி யற்ற உடலுழைப்புத் தொழிலாளர்கள் இலங்கைக்குச் செல்வதை 1939ம் ஆண்டு நிறுத்தியது. எனவே இன்று இலங்கையிலிருக்கும் இந்திய வம்சாவழியினரான தமிழ்த் தொழிலாளர்கள் அத்தனை பேரும் 1939ம் ஆண்டுக்கு முன்பு வந்தவர்களாக அல்லது அப்படி வந்தவர்களது சந்ததியினராகவே இருக்கின்றனர்.

## சோல்பரி ஆணைக்குழு

இலங்கையின் அரசியல் அமைப்பை மாற்றி இலங்கைக்கு பொறுப்பாட்சி வழங்குவதையிட்டு பரிசீலனை செய்வதற்கு 1945ல் இங்கு அனுப்பப்பட்ட சோல்பரி ஆணைக் குழுவினர் முன் விலையில் இப்பிரச்சினை பெரிதாக எழுந்தது. தமிழ் மக்கள் சார்பில் வாக்குமூலமளித்த அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் இவர்களுக்கு பூரண அரசியல் உரிமை வழங்க வேண்டுமென வாதாடியது. அப்போதைய தமிழ்க் காங்கிரசில் திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்கள் துணைத் தலைவராகவும், டாக்டர் இ. மு. வி. நாகநாதன் அவர்கள் இணைச் செயலாளராகவும் விளங்கினர் என்பது குறிப்பிடவேண்டியது.

சோல்பரி அமைப்பின் கீழ் நடைபெற்ற முதல் பொதுத் தேர்தலில் மலைநாட்டுத் தமிழ்த் தொழிலாளர்களது பிரதிநிதிகளாக எட்டுத் தமிழர்கள் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டனர். வாசகால யோக்கியதையின் படி இத் தொழிலாளர்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டிருந்தது என்பது இதிலிருந்து தெரியவரும். ஆனுல் அவர்களுடைய குடியுரிமை விடயம் தீர்க்கப்படாததாக இருந்தது. 1947ம் ஆண்டு பொதுத் தேர்தலின்போது தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்கள் கைச்சாத்திட்டு இலங்கை இந்தியக் காங்கிரசுக்கு ஒரு வாக்குறுதி வழங்கினுர். இந்நாட்டில் ஐந்து ஆண்டுகள் வாழ்ந்த இந்திய வம்சாவழியினர் அனைவருக்கும் பூரண குடியுரிமை அளிக்கச் செய்வதற்கு போராடுவோம் என்பதே இவ்வாக்குறுதியாகும்.

1948ம் ஆண்டு இலங்கை விடுதலை பெற்றவுடன் இந்நாட்டுக் குடியுரிமைச் சட்டங்கள் ஆக்கப்பட்டன. முதல் நிறைவேற்றப்பட்ட இலங்கைக் குடியுரிமைச் சட்டத்தின் கீழ் 1948ம் ஆண்டுக்கு முன் தொடர்பாக இரண்டு சந்ததி இலங்கையில் பிறந்தவர்களுக்கே இந்நாட்டுக் குடியுரிமை உண்டென்று நிர்ணயிக்கப்பட்டது. இச் சட்டம் பாராளுமன்றத்திற்கு வந்த நேரத்தில் தமிழ்க் காங்கிரஸ் சார்பில் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்கள் இதை எதிர்த்துப் பேசினுர். ஆனுல் அப்பொழுது மந்திரிசபையில் சேர்வதற்கு பிரதமர் டி. எஸ். சேனநாயக்காவுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்த திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்கள் சம்பிரதாயத்திற்கு இருவர் மாத்திரம் இம் மசோதாவை எதிர்த்து வாக்களிப்போம் என்று பிரதமருக்குக் கொடுத்த இரகசிய வாக்குறுதியின் படி இரண்டு தமிழ்க் காங்கிரஸ் பிரதிநிதிகள் மாத்திரமே இக் குடியுரிமைச் சட்டத்திற்கு மாறுக வாக்களிக்க திரு. பொன்னம்பலம் அவர்களால் அனுமதிக்கப்பட்டனர்.

# மொழி பெயர்ப்பா? மொழிப் பெயர்ப்பா?

## மொழித் திணைக்களம் செய்து வருவது என்ன?

பயிர் பற்றுடல்களை நட்டு வளர்ப்போர், அவற்றைக் கட்டாக்காலிகளான ஆடு மாடுகள் அழித்து விடாதபடி பாதுகாப்பதற்காக, வேலிகளை அமைத்துக் கொள்கிறுர்கள். பாதுகாப்புக்காக அமைக்கப்படுகின்ற வேலிகளே அவ் வேலி எல்லைக்குள்ளிருக்கும் பயிர்களை மேய்ந்து அழிக்கத் தொடங்கினுல், என்ன நடக்கும்? பயிர்கள் அழிந்து, பயிர்கள் வளரும நிலமும் அழிந்து, பயிர்களைப் பேணிக் காத்து வளர்க்கும் மக்களும் அழிந்து போவார்கள். அதைப போலவே, மொழித் திணைக்களத்திலும் மொழிபெயர்க்கத் தெரியாமல் மொழியையே பெயர்ப்பவர்கள் இருந்து பணியாற்றினுல், மொழியும் அழிந்து, மொழி [illegible] மும் அழிந்து, மொழியினை வழங்கும் மக்களும் அழிந்து போவார்கள்.

### அங்கு இருப்பவர்கள் யார்

அரசகரும மொழித் திணைக்களத்திலே, மொழி அறிந்தவர்கள்—மொழியின் மரபை அறிந்தவர்கள்—மொழி பெயர்க்கத் தெரிந்தவர்கள், மொழி பெயர்த்தவர்கள், மொழி பெயர்ப்பதற்கான சொற்றெகுதிகளைத் தொகுத்தளித்தவர்கள்-அவற்றுக்கெல்லாம் பொறுப்பாயிருந்தவர்களையெல்லாம் ஒருவரொருவராக அத் திணைக்களத்திலிருந்து மெல்ல வெளியேற்றிவிட்டு, அந்தத் திணைக்களத் தலைவராகவிருக்கும் ஆணையாளர் இப்போது யாது செய்து கொண்டிருக்கிறுர்? மொழி அறியாதவர்கள்— மொழியின்

(11-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடத்தலுமில்லை தனிவாக்காளர் தமிழரசார் ஆதரித்ததேன்?

இச் சட்டத்தினுல் மலைநாட்டுத் தமிழ் மக்கள் பத்துலட்சம் பேருக்கும் இந்நாட்டுக் குடியுரிமை மறுக்கப்பட்டது. இந்நாட்டுத் தமிழ் முஸ்லீம் மக்களும் சந்தேகப் பிரஜைகளாக்கப்பட்டனர். இவ்வளவு பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்திய இச் சட்டத்தை எதிர்த்து வாக்களிக்க வந்த திரு. கு. வன்னியசிங்கம் அவர்களைக்கூட வாக்களிக்கவிடாது வெளியேறச் செய்தார் திரு. பொன்னம்பலம். இதைத் தொடர்ந்து திரு. டி. எஸ். சேனநாயக்கா மந்திரிசபையில் அமைச்சரானுர் திரு. பொன்னம்பலம்.

## இந்திய-பாகிஸ்தானிய பிரசாவுரிமைச் சட்டம்

இந்நேரத்தில் இலங்கைப் பிரதமருக்கும் இந்தியப் பிரதமர் திரு. நேரு அவர்களுக்குமிடையில் இலங்கைவாழ் இந்திய வம்சாவழியினரின் நிலைமை குறித்து பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருந்தது. ஆனுல் அப் பேச்சுவார்த்தைகள் இடையில் முறிந்துபோயின. திரு. டி. எஸ். சேனநாயக்கா கொண்டு வந்த இந்திய—பாகிஸ்தானியப் பிரசாவுரிமைச் சட்டத்தை நேரு ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். அச் சட்டம் பிரசாவுரிமை மறுப்புச் சட்டமே தவிர பிரசாவுரிமை வழங்கும் சட்டமல்ல என்று இலங்கை இந்திய காங்கிரசினர் அச் சட்டத்தை எதிர்த்தார்கள்.

மலைநாட்டுத் தமிழரின் ஒரே ஸ்தாபனமாக அன்று இருந்த இலங்கை இந்திய காங்கிரசும் இந்திய அரசாங்கமும் நிராகரித்த சட்டத்தைத் தான் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் ஆதரித்தார். 1947ம் ஆண்டு பொதுத் தேர்தலின்போது இலங்கை இந்திய காங்கிரசுக்கு எழுத்துமூலம் தாம் கையெழுத்திட்டுக் கொடுத்த வாக்குறுதியை மீறித்தான் இச் சட்டத்தை ஆதரித்தார் திரு. பொன்னம்பலம். தமிழ்க் காங்கிரஸ் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற வேண்டுமென்றும், மலைநாட்டுத் தமிழ்மக்களின் உரிமையை மறுக்கும் சட்டத்தை எதிர்க்க வேண்டுமென்றும், அம் மக்களினுடைய ஸ்தாபனமாகிய இலங்கை இந்தியக் காங்கிரசுடன் ஒற்றுமையாகச் செயலாற்ற வேண்டுமென்றும் கருதிய திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், திரு. கு. வன்னியசிங்கம், திரு. எஸ். சிவபாலன், டாக்டர் இ. மு. வி. நாகநாதன் ஆகியோர் இச் சட்டத்தை எதிர்த்து வாக்களித்தனர்.

## நாடற்றவர் தோன்றினர்

இவற்றை எல்லாம் சிந்தியாது திரு. பொன்னம்பலம் அவர்கள் இச் சட்டத்தை ஆதரித்து வாக்களித்த காரணத்தால் மலைநாட்டுத் தமிழ் மக்களுக்கும், இலங்கைத் தமிழ் மக்களுக்குமிடையில் ஒரு பெரும் பிளவு ஏற்படுவதற்குக் காரணமானுர். ஏற்பட்ட அப் பிளவு திரு. செல்வநாயகம் அவர்களது நேர்மையான செயலினுல் ஓர் அளவிற்குத் தவிர்க்கப்பட்டது. அன்று நிறைவேற்றப்பட்ட இந்திய—பாகிஸ்தானிய பிரசாவுரிமைச் சட்டத்தின் விளைவே இன்று நாம் காணும் நாடற்றவர்கள் பிரச்சினை. அச் சட்டத்தினுல் 10 லட்சம் தமிழ் மக்களில் ஒருலட்சத்து முப்பத்தையாயிரம் பேரே குடியுரிமை பெற்றனர்.

இதையொட்டி திரு. பொன்னம்பலம் அவர்கள் பாராளுமன்றத்தில் கூறிய கூற்றிற்கு திரு. தொண்டமான் அவர்கள் பின்வருமாறு பதில் கொடுத்தார். "பிரசாவுரிமைச் சட்டத்தை இந்திய காங்கிரஸ் பகிஸ்கரித்ததைப் பற்றியும் இந்திய—பாகிஸ்தானிய பிரசாவுரிமைச் சட்டத்தைப் பற்றியும் கௌரவ யாழ்ப்பாணப் பிரதிநிதி கூறிய கருத்துக்களைப்பற்றி நான் அவரோடு தர்க்கிக்க விரும்பவில்லை. ஆனுல் அதையொட்டிய அவரது விளக்கம் தவறுனது என்பதைக் கூற விரும்புகிறேன். இந்தச் சட்டம் வேண்டுமென்றே திட்டமிட்டுக் கொண்டுவரப்பட்டது. 1954ல் நடந்த மாநாட்டில் ஒரு சுற்றறிக்கையின் புகைப்படப் பிரதி சமர்ப்பிக்கப்பட்டது. மேலிடத்திலிருந்து அப்படியான ஒரு சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருக்கக் கூடாதென்று அம்மாநாட்டில் ஒப்புக்கொள்ளப்பட்டது. கௌரவ யாழ்ப்பாணப் பிரதிநிதி அவர்களை தோம்பே பிரதிநிதி (திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா) கூறுவதையெல்லாம் ஏற்றுக் கொள்ள வேண்டாமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இந்திய—பாகிஸ்தானிய பிரசாவுரிமைச் சட்டத்தின் கீழ் ஏராளமான விண்ணப்பங்கள் சரியாக நிரப்பப்படாத காரணத்தினுல் நிராகரிக்கப்பட்டன என்று அவர் கூறினுர். அது உண்மையல்ல." (கான்சாட் தொகுதி 71, பக்கம் 1008).

திரு. தொண்டமான் மேதுவாகக் கூறினுலும் இந்திய—பாகிஸ்தானிய பிரசாவுரிமைச் சட்டத்தின் கீழ் மிகக் குறைந்த தொகையினரே இலங்கைப் பிரஜைகளாகப் பதிவு செய்யப்பட்டனர் என்பது வேண்டுமென்று திட்டமிடப்பட்ட விளைவே. இச்சட்டத்தை ஆதரித்தவர்கள் அத்தனை பேரும் அதற்குப் பொறுப்பாளிகளே. அச் சட்டத்தினுல் ஏற்பட்ட விளைவே நாடற்றவர் பிரச்சினை. எனவே, இந் நாடற்றவர் பிரச்சினைக்கு காரணமான இந்திய—பாகிஸ்தானிய பிரசாவுரிமைச் சட்டத்தை ஆதரித்த திரு. பொன்னம்பலம் இந் நிலைக்கு தமது பொறுப்பை மறைக்கமுடியாது.

## இந்திய—இலங்கை ஒப்பந்த அமுல் மசோதா

இந்திய—பாகிஸ்தானிய பிரசாவுரிமைச் சட்டத்தினுல் இந்நாட்டுக் குடியுரிமை மறுக்கப்பட்ட தமிழ்த் தொழிலாளர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இலங்கை—இந்திய அரசாங்கங்களுக்கிடையில் எத்தனையோ தடவை பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. 1954ம் ஆண்டு நேரு—கொத்தலாவலை ஒப்பந்தம் ஏற்பட்டது. ஆனுல் அதுவும் முறிந்தது. அதைத் தொடர்ந்து இம்மக்கள் இந்தியப் பிரசைகள் அல்ல என்று இந்திய அரசாங்கம் உறுதியாகக் கூறியுள்ளது. அவர்கள் இலங்கைக் குடியுரிமைச் சட்டத்தின் கீழ் இலங்கைப் பிரஜைகளுமல்ல, இந்திய அரசாங்கத்தின் கூற்றின் படி இந்தியப் பிரஜைகளுமல்ல என்ற நிலை ஏற்பட்டது. இதுதான் நாடற்றவர் பிரச்சினையின் வரலாறு. இவர்களுடைய நிலையை தீர்மானிப்பதற்கு எத்தனையோ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இறுதியான முயற்சிதான் சிறிமா—சாத்திரி ஒப்பந்தம்.

1964ம் ஆண்டு நவம்பர் மாதம் இவ்வொப்பந்தத்தை எழுதிவிட்டு இலங்கை திரும்பிய திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா இரண்டு முக்கியமான விடயங்களைக் கூறினுர். தான் செய்திருக்கும் ஒப்பந்தத்தின் கீழ்:

(1) 5 லட்சத்து 25 ஆயிரம் தமிழ் மக்கள் கட்டாயமாக நாடுகடத்தப்படுவார்கள் என்றும்'

(2) இலங்கைப் பிரசாவுரிமை பெறும் 3 லட்சம் தமிழ் மக்களும் தனி வாக்காளர் இடாப்பில் வைக்கப்படுவர் என்றும் கூறினுர்.

இவ்வறிக்கையைத் தொடர்ந்து இவற்றை உள்ளடக்கியதாகக் கூறப்பட்ட ஒப்பந்தத்தை எதிர்த்து முதல் கண்டனக் குரல் எழுப்பியது இலங்கைத் தமிழரசுக் கட்சி. அதைக் கண்டித்துத் தமிழரசுக் கட்சிச் செயற்குழு நிறைவேற்றிய தீர்மானத்தில் கீழ்க்கண்டவாறு கட்சியின் நிலையை தெளிவுபடுத்தியுள்ளது.

"இலங்கையைத் தமது தாயகமாகக் கொண்ட எல்லோருக்கும் இலங்கைக் குடியுரிமை வழங்குவதாலும், இந்தியாவிற்குத் திரும்பிப் போகவிரும்பும் இந்திய மரபினர்களுக்கு இந்தியக் குடியுரிமையை வழங்கி அவர்களின் இயற்கையான மொழி, பண்பாட்டுச் சூழ்நிலைக்கு இணங்க அவர்களுக்கு புனர்வாழ்வளிப்பதனுலும் மட்டுமே இலங்கை வாழ் நாடற்ற தமிழ்த் தொழிலாளர் பிரச்சினையை தீர்க்க முடியுமென்பதே இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கருத்தாகும்."

சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசாங்கம் வீழ்ச்சியடைந்து இன்றைய தேசிய அரசாங்கம் ஏற்பட்டபின்னரே கட்டாய நாடுகடத்தலையோ, தனிவாக்காளர் இடாப்பையோ, இந்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லையென்பது தெரிய வந்தது. திரு. டட்லி சேனநாயக்கா அவர்கள் தேசிய அரசாங்கத்தின் முதல் சிம்மாசனப் பிரசங்க விவாதத்தின்போது முந்திய அரசாங்கத்தால் மறைக்கப்பட்டிருந்த இவ்வுண்மைகளை வெளியிட்டார். இக்காரணத்தினுலேயே இவ்வொப்பந்த அமுலை உள்ளடக்கிய சிம்மாசனப் பிரசங்கத்தை இலங்கைத் தமிழரசுக் கட்சி ஏற்றுக்கொண்டது. அந்த நேரத்தில் கட்சி உறுப்பினர் எவரும் வேறு கருத்துக் கொண்டிருக்கவில்லை.

இப்பொழுது கொண்டுவரப்பட்டிருக்கும் மசோதா கட்டாய நாடுகடத்தலுக்கு வழிவகுக்க வில்லையென்று எதிர்க்கட்சியிலிருந்து திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா திரு. பீற்றர் கெனமன், திருமதி பண்டாரநாயக்கா, போன்றோர் குரலெழுப்பியதற்கு பிரதமர் டட்லி சேனநாயக்கா கொடுத்த பதில் நிலைமையை ஐயத்திற்கிடமின்றி தெளிவாக்குகின்றது. "கட்டாய நாடு கடத்தல் உங்கள் நோக்கமாக இருந்தால் நீங்கள் ஏன் அதை ஒப்பந்தத்தில் வெளிப்படையாகக் கேட்கவில்லை" யென்று அவர் எதிர்க்கட்சித் தலைவி சிறிமா பண்டாரநாயக்காவிடம் கேட்டார். "நீங்கள் அப்படிச் செய்யாது விட்டது அதை இந்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்ளமாட்டாது என்ற காரணத்தால்தான்" என்று ஆணித்தரமாகக் கூறினுர். எனவே, எதிர்க்கட்சியினரும் அரசாங்கக் கட்சியினரும் ஒரே கருத்தோடு கட்டாய நாடுகடத்தலுக்கு இச் சட்டத்தில் இடமில்லையென்று கூறும்போது எமது நண்பர்கள் சிலர் மாத்திரம் இச்சட்டத்தில் கட்டாய நாடுகடத்தல் உண்டு என்று கூறுவது விசித்திரமானது.

இந்திய அரசாங்கம் மலைநாட்டுத் தமிழ் மக்களின் ஸ்தாபனங்கள் ஆகிய அத்தனையும் ஏற்றுக் கொள்ளும் இம்மசோதாவை நாம் மாத்திரம் எதிர்க்க வேண்டுமென்று கூறுவது அர்த்தமற்ற கூற்ருகும். அதே நேரத்தில் இந்திய அரசாங்கமும் இலங்கை-இந்திய மக்களும் ஒருமித்து எதிர்த்து, இன்றைய நாடற்றவர் பிரச்சினைக்கு மூலகாரணமாக இருக்கும் இந்திய—பாகிஸ்தானிய பிரசாவுரிமைச் சட்டத்தை ஆதரித்த திரு. பொன்னம்பலம்அவர்கள் இந்திய அரசாங்கமும் மலைநாட்டுத் தமிழ் மக்களின் ஸ்தாபனங்கள் எல்லாம் ஏற்று, இந்நாடற்றவர் பிரச்சினையை ஒரு அளவிற்குத் தீர்க்க முற்படும் இம் மசோதாவை நாம் ஆதரிப்பதை, தனது முந்திய செயலோடு ஒப்பிட்டுப் பேசுவது வேடிக்கையானது.

## இரண்டும் ஒன்றல்ல

சிறிமா—சாத்திரி ஒப்பந்தத்தில் ஐந்து லட்சத்து இருபத்தையாயிரம் பேர் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டால் வெளியேறுபவர்களது வீதத்திற்குத் தக்கதாக மூன்று லட்சம் பேருக்கு இலங்கைப் பிரசாவுரிமை வழங்கப்படுமென்று இலங்கை அரசாங்கம் ஒப்புக்கொண்டது. இப்போது கொண்டுவரப்பட்டிருக்கும் மசோதாவில் இந்தியப் பிரஜைகளாகப் பதிவு செய்யப்பட்டு இந்தியாவுக்குத் திரும்புபவர்களுடைய வீகிதத்திற்குத்தான் இலங்கைப் பிரசையாகப் பதிவு நடைபெறும் என்று கூறப்படவில்லை. 'அப்படி விதிக்க முடியாதென்று" எதிர்க்கட்சியினர் கேட்ட கேள்விகளுக்கு பிரதமர் தெளிவாகப் பதிலளித்துள்ளார். எனவே, 525 பேர் இந்தியப் பிரஜைகளாகப் பதிவு செய்யப்பட்டு அவர்கள் இந்தியா திரும்பினுலென்ன திரும்பாவிட்டாலென்ன, 300 பேர் இலங்கைப் பிரசைகளாகப் பதியப்படுவர். இவர்கள் தனிவாக்காளர் இடாப்பில் வைக்கப்படாது பொது இடாப்பிலேயே வைக்கப்படுவார்கள் என்பதும் தெளிவு. விருப்பத்தின் பேரில் இந்தியப் பிரசைகளாகப் பதிவு செய்து இந்தியா செல்பவர்கள் தமது உடமைகளையும் கொண்டு செல்வதற்கு வாய்ப்பளித்து, இந்நாட்டுப் பிரசைகளாக மறுப் பண்ணுபவர்களுக்கு ஐந்தேகாலுக்கு மூன்று என்ற வீதத்தில் இலங்கைப் பிரசாவுரிமை வழங்குவதே இம் மசோதாவின் நோக்கமாகும். இந்தியப் பிரசையாகப் பதிவு செய்யப்படுபவர் வேறு ஒரு இடாப்பில் வைக்கப்பட வேண்டுமென்று நாம் கோரி இருக்கின்றேம். அதற்குரிய திருத்தத்தை கொண்டுவர பிரதமர் ஒப்புக்கொண்டுள்ளார். இந்தியப் பிரசையாக மறுப்பண்ணுதவரின் பெயர் இந்தியப் பிரசைகளின் இடாப்பில் சேர்க்கப்பட்டால் அவர் அதை எதிர்த்து சட்ட நடவடிக்கை எடுக்க முடியும்.

எனவே, தமது விருப்பத்தின் பேரிலன்றி எவரும் இந்தியப் பிரசையாகப் பதிவுசெய்யப்படவோ இந்தியாவுக்கு அனுப்பப்படவோ முடியாது. இந்திய அரசியல் சட்டம், பிரசாவுரிமைச் சட்டம் ஆகியன திருத்தப்பட்டால்சில சமயங்களில் விருப்பமற்றவர்கள் இந்தியப் பிரசைகளாக்கப்படலாம் என்று சிலர் அஞ்சக்கூடும். ஆனுல், அப்படி நோக்கம் இந்திய அரசாங்கத்திற்கு இல்லையென்பது இந்திய வெளிவிவகார மந்திரி இந்திய லோகசபையில், ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்ட சொற்ப நாட்களில், கூறியதிலிருந்து தெளிவாகின்றது. எனவே, கற்பனைக் காரணங்களை வைத்துக்கொண்டு இம் மசோதாவை நாம் எதிர்க்க வேண்டுமென்று கூறுவதோ, இம் மசோதாவையும் இந்திய—பாகிஸ்தானியர் பிரசாவுரிமைச் சட்டத்தையும் ஒரே விதமாகக் கணிப்பதோ அறிவீனமாகும். எக் கட்டத்திலாவது கட்டாய நாடுகடத்தல் அல்லது தனி வாக்காளர் இடாப்பு என்ற அம்சங்கள் தலைதூக்குமாயிருந்தால் இலங்கைத் தமிழரசுக் கட்சி தன் முழுப் பலத்தையும் கொண்டு அவற்றை எதிர்க்கும். இதை நாம் பாராளுமன்றத்திலே தெளிவாகக் கூறியிருக்கிறேம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1967 மார்ச் மாதம் 10-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலை பேசி எண் - 3411 த. பெ. 1183

# அபாயகரமான உபாயம்

தமிழகத்தில் அண்ணாவின் அமைச்சரவை பதவியேற்றுள்ளது. தமிழ் பேசும் தமிழக மக்களுக்கும் இத்துடன் விமோசனம் பிறந்துள்ளது என்று கூறின் மிகையாகாது. தென்னிந்தியாவிலே ஏற்பட்ட இந்த மாபெரும் மாறுதலைக் கண்டு உலகத் தமிழர்கள் அனைவரும் மகிழ்ச்சியடைகின்றனர்.

ஈழநாட்டுத் தமிழ்பேசும் மக்களுக்கும் தி. மு. க. வின் வெற்றி மகிழ்ச்சியை அளித்துள்ளது. இந்த மகிழ்ச்சியைத் தவறாகப் புரிந்துகொண்டுள்ளனர் இங்குள்ள எதிர்க்கட்சியினர்;

உலகத் தமிழர்கள் இனமே. அவர்கள் பல்வேறு நாடுகளைத் தாயகமாகக் கொண்டவர்கள். தமிழர்கள் வாழும் நாடுகளை எல்லாம் ஒன்றாக இணைத்து தனியொரு தமிழ் உலகை நிறுவ வேண்டுமென்ற நோக்கம் எந்த நாட்டுத் தமிழருக்கும் கிடையாது.

பர்மாவிலோ, மலேசியாவிலோ, தென்னாபிரிக்காவிலோ வாழும் தமிழர்கள் தமது நாட்டைத் தென்னாட்டுடன் இணைக்க வேண்டுமென்று கனவிலும் கருதவில்லையே!

ஈழத் தமிழ்பேசும் மக்களோ, தமிழகத்தின் மக்களோ தமிழ்நாட்டையும் ஈழத்தின் தமிழ்ப்பகுதியையும் ஒன்றாக இணைத்து ஒரு 'திராவிடஸ்தான்' நிறுவ வேண்டுமென்று எண்ணியதே இல்லை. இரு தனி நாடுகளையும் இணைக்கும் பிரச்சினையே எழவில்லை.

ஆதலின், தி. மு. க. ஆட்சிக்கு வந்ததால் ஈழத்தின் தமிழ்ப் பகுதியையும் தமிழகத்தையும் ஒன்றாக இணைத்து தமிழர் சாம்ராஜ்யம் நிறுவப்படுமென்ற எதிர்க்கட்சியினரின் கூற்று முற்றிலும் தவறாகும்.

தி. மு. க. திராவிடஸ்தான் கொள்கையை முற்றாகக் கைவிட்டுவிட்டது. இது எதிர்க்கட்சியினருக்கும் தெளிவாகத் தெரியும். தெரிந்தும் ஏன் இவ்வாறு பிரசாரம் செய்கின்றனர்? இடைத் தேர்தல்களில் சிங்கள வாக்குகளை வேட்டையாடுவதற்காகக் கையாளும் உபாயமாம் இது!

ஆனால் இது மிக அபாயகரமானதோர் உபாயமென்பதை எதிர்க்கட்சியினருக்கு எச்சரிக்கின்றோம். வெறும் பிரசாரத் தந்திரமாக மட்டும் இதைக் கருதவேண்டாம். தமிழ்பேசும் மக்களுக்கும் சிங்கள மக்களுக்குமிடையே ஒரு மோதுதலை உண்டாக்கி நாட்டிலே மீண்டும் வகுப்புக் கலவரத்தைக் கிளப்பிவிடும் ஒரு பிரசாரம் இது. அபாயத்தை உணர்ந்து பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டியது எதிர்க்கட்சிகளின் கடமையாகும்.

---

# மூன்று மேடைகள்

பொதுத் தேர்தல் இந்திய துணைக்கண்டத்தின் அரசியலிலே பெரும் மாற்றத்தை உருவாக்கியுள்ளது. பிரிட்டனைப்போல இரு கட்சி முறையோ, அமெரிக்காவைப்போல இரு கட்டு முன்னணி முறையோ தேர்தலின் விளைவாக இந்தியாவில் உருவாகுமென்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இரண்டுக்கும் இடமில்லாது போயிற்று.

தேர்தலுக்குப் பின்னர் நாடெங்கும் ஏற்பட்டுள்ள நிலை காங்கிரசும் காங்கிரசை எதிர்க்கும் ஐக்கியமுன்னணியும்தான். ஆனால் இஃது உண்மை நிலையன்று.

தேர்தலில் காங்கிரசைத் தோற்கடிக்கும் ஒரே நோக்கத்துடன் எதிர்க்கட்சிகள் பொதுமக்களிடம் (தேர்தல்) முன்னணி அமைத்துக்கொண்டன. பின்னர், காங்கிரஸ் ஆட்சிக்கு வருவதையோ, ஜனாதிபதி ஆட்சி ஏற்படுவதையோ தடுப்பதற்காக வங்காளம், கேரளம், பீகார், உத்தர பிரதேசம் ஆகிய மாநிலங்களில் தேர்தல் முன்னணி ஐக்கிய முன்னணியாக வளர்ச்சி பெற்றது. (சென்னையில் மட்டும் தேர்தல் முன்னணி தேர்தலுடனேயே நின்றுவிட்டது. அதற்கு அப்பால் செல்லவில்லை.)

இந்த ஐக்கிய முன்னணிகளில் பல்வேறு கட்சிகள் ஒரு பொதுவேலைத் திட்டத்தாலும் காங்கிரஸ் எதிர்ப்பாலும் இணைக்கப்பட்டுள்ளன. ஆயினும், இந்த ஐக்கிய முன்னணிகள் (கேரளம் தவிர) தொடர்ந்து நீடிக்கும் வாய்ப்புகள் இருப்பதாகத் தெரியவில்லை.

காரணம், முரண்பட்ட கொள்கைகளையும், நோக்கங்களையும் வேலைத் திட்டங்களையும் கொண்ட கட்சிகள் இம்முன்னணிகளில் இணைந்திருப்பதே. அவை இந்திய ஜனநாயகத்தின் முரண்பட்ட சக்திகளையும், வெவ்வேறு பகுதிகளையும் பிரதிநிதித்துவம் செய்கின்றன. எனவே அக்கட்சிகள் நீண்ட நாள் ஒரே மேடையில் நிற்பது சாத்தியமன்று.

ஜனசங்கமும், கம்யூனிஸ்ட் கட்சியும் ஓரணியில் திரளுவதோ, சுதந்திராக் கட்சியும் சோஷலிசக் கட்சிகளும் ஒரே பாதையில் அணிவகுப்பதோ நீண்ட காலத்துக்குச் சாத்தியமன்று. இக்கட்சிகள் தங்களின் முரண்பட்ட உள்நாட்டுக் கொள்கையையோ வெளிநாட்டுக் கொள்கையையோ விட்டுக்கொடுக்குமென்று எதிர்பார்க்க முடியாது.

ஆதலின், ஜனசங்கம் போன்ற தீவிர வலதுசாரிக் கட்சிகளும் சுதந்திராக் கட்சி, காங்கிரசைக் கைவிட்ட வலதுசாரிகள், ஒரணியிற் றிரளுவது காலப் போக்கில் தவிர்க்க முடியாதது போலவிருக்கிறது. தற்போது காங்கிரஸிலுள்ள தீவிர வலதுசாரிகளும் பின்னர் இந்த அணியில் வந்து சேர்ந்துவிடலாம்.

அடுத்தது சோஷலிஸ அணி. இதில் பிரஜா சோஷலிஸ்ட் கட்சி, சம்யுக்த சோஷலிஸக் கட்சி, கம்யூனிஸ்டுக் கட்சி, மற்றும் பல மாநில சோஷலிஸ்டுக் கட்சிகள், சோஷலிஸ மனப்பான்மை கொண்ட திரு. கிருஷ்ணமேனன் போன்ற தனிப்பட்டவர்கள் இந்த முன்னணியில் திரளுவார்களென்று நிச்சயமாகக் கூறலாம். தி. மு. க. வும் காலப்போக்கில் இதே அணியிற்றான் சேரமுடியும்.

மூன்றாவது அணி காங்கிரஸ்... காங்கிரஸ் ஏற்கனவே ஒரு முன்னணிதான். அதில் இடது, வலது நடுவாந்தர சாரிகள் அனைவரும் உள்ளனர்.

ஆகவே மூன்று அணிகள் (மூன்று அரசியல் மேடைகள்) தேர்தலின் விளைவாக தோன்றும் நிலை உருவாகியுள்ளது. அடுத்த தேர்தலுக்கு முன்பு இம் மூன்று மேடைகளும் தெளிவாக உருவாகிவிடும் என்று நம்பலாம்.

இத் தேர்தலில் இந்தியா எந்த அளவுக்கு இடது பக்கம் சென்றுள்ளதோ, அந்த அளவுக்கு வலது பக்கமும் சென்றுள்ளது. பாரதத்தில் இடதுசாரிகளும், வலதுசாரிகளும் சமபலத்துடன் விளங்குகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி. மு. க. பூச்சாண்டியை உடன் நிறுத்துக!

தூங்குபவனை எழுப்பலாம்; தூங்குவது போன்று பாசாங்கு பண்ணுபவனை எழுப்ப முயல்வது முடியாதவிடயம் என்பது நாடோடி வழக்கு. இந்தியத் தேர்தல் முடிவுகளை வைத்து இலங்கைத் 'தேசிய'த் தினசரிகளும், எதிர்க்கட்சிகளும் நடத்தும் பிரச்சாரமும் கயிறு திரிப்பும் இதனையே நினைவுபடுத்துகின்றன.

சென்னை மாநிலத்தில் எதிர்க்கட்சியாக இருந்துவந்த தி.மு. கழகம் இம்முறை பெரும் வெற்றிபெற்று மாநில ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளது. இம் மாநில ஆட்சி மாற்றத்தினை வைத்துக்கொண்டு சிங்கள மக்களின் உணர்ச்சிகளைத் தட்டிவிட்டு மீண்டும் இந்நாட்டில் ஓர் இரத்தக்களரியை ஏற்படுத்த பலர் முயற்சிக்கிறார்கள்.

தென்னிந்தியாவையும், இலங்கையின் தமிழ்ப்பகுதிகளையும், சிங்கப்பூர், மலேசியா முதலிய நாடுகளையும் சேர்த்து அகண்ட தமிழ்இராச்சியம் ஒன்றை உருவாக்குவதே தி. மு. க. விட ரட்டம் என்று தமிழரசுக்கட்சியும் அதற்கு ஆதரவாக உள்ளது என்றும் பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது.

## பொறுப்பற்ற பேச்சு

இப்படி ஒரு அப்பட்டமான பொய்ப்பிரசாரத்தை மேற்கொள்பவர்கள் யார்? இவர்கள் உண்மை நிலையை அறியாமற்றான் பேசுகிறார்களா என்றால் இல்லை. உண்மை நிலையை நன்கு தெரிந்துகொண்டு வேண்டுமென்றே பொய்ப்பிரசாரத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்திய அரசியலமைப்பின் கீழ் இராச்சியங்களுக்குள்ள அதிகாரம் என்ன? இலங்கையின் உள்நாட்டு அரசியலில் தி. மு. க. ஆட்சிக்கு தலையிட உரிமையுண்டா? இவைபற்றியெல்லாம் சிறிதும் சிந்தியாது, பொறுப்புணர்வு இல்லாது இந்நாட்டிலுள்ள சிங்கள வகுப்புவாதிகள் கோஷம் எழுப்பிவருகிறார்கள்.

பாரதத்திலுள்ள 17 மாநிலங்களில் சென்னை மாநிலமும் ஒன்று. சென்னை உட்பட இந்த 17 மாநிலங்களின் பிடியும் டெல்லியிலுள்ள மத்திய அரசாங்கத்திடம்தான் இருக்கிறது—இருக்கப்போகிறது. டெல்லிக்குத் தெரியாமல் தமிழகத்தில் உள்ள தி. மு. க. ஆட்சி ஒரு சுண்டுவிரல்கூட இலங்கையை நோக்கி நீட்டிவிட முடியாது.

## மாநில ஆட்சிக்கு அதிகாரம் உண்டா?

இலங்கைத் தமிழர் சம்பந்தப்பட்ட பிரச்சினைகூட வேண்டாம்—இலங்கையிலுள்ள இந்தியர் சம்பந்தப்பட்ட பிரச்சினையில் தானும் தலையிடவோ, இலங்கை அரசாங்கத்துக்கு அதிகார பூர்வமாக ஒரு அபிப்பிராயம் தெரிவிக்கும் உரிமையோ கூட சென்னை மாநிலத்தில் ஆளும் கட்சியாக வந்துள்ள தி. மு. க. அரசாங்கத்துக்கு இல்லையென்பது இந்திய அரசியற் சட்டம் அறிந்தவர்களுக்கு நன்குதெரிந்திருக்கும்.

இலங்கையிலுள்ள பிரச்சினைகளை நன்கு உணர்ந்தவரான தமிழரசுக்கழகத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானம் அண்மையில் எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயகாவுக்கு அளித்திருந்த பதிலில் இதைத் தெளிவுபட எடுத்து விளக்கியிருந்தார்.

வாதத்துக்காக இலங்கை அரசியலில் தி. மு. க. ஆட்சி தலையிடுவதாகவே வைத்துக்கொள்வோம். அப்போது என்ன நடக்கும்? காங்கிரஸ் கட்சியின் அதிகாரத்திலிருக்கும் டில்லி ஆட்சி பார்த்துக்கொண்டு சும்மா இருக்குமா? இரவோடிரவாக தி. மு. க. ஆட்சி கலைக்கப்பட்டு கவர்னர் ஆட்சி பிரகடனம் செய்யப்பட்டுவிடுமே! அது மட்டுமல்லாமல், அதை அண்டை நாடுகள் தானும் அனுமதிக்குமா? இந்தச் சின்ன உண்மையைத்தானும் உணர்ந்துகொள்ளாமலோ— அல்லது வேண்டுமென்றோ பொறுப்பில்லாமல் எழுதுவது 'தேசிய' பத்திரிகைகளுக்கு அழகல்ல.

## தி. மு. க. கேட்பது பிரிவினையா?

அகண்ட தமிழ் சாம்ராஜ்ஜியத்தை உருவாக்க தி. மு. கழகம் முயலுகிறது என்று பிரசாரம் செய்யப்படுகிறது. தி. மு. க. தனது தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டு 5 ஆண்டுகளுக்கு மேலாகின்றன. இதை அக்கட்சியின் தலைவர் திரு. சி. என். அண்ணாதுரை ஐயத்திற்கிடமின்றி தெட்டத் தெளிவாக விளக்கியிருக்கிறார்.

கடந்தவாரம்கூட அமெரிக்க நிருபர் ஒருவர் 'தற்காலிகமாகத் தான் திராவிடநாட்டுக் கோரிக்கையை கைவிட்டீர்களா?' என்று திரு. அண்ணாதுரையிடம் கேட்டபோது 'அப்படி சொல்வது தவறு; தற்காலிகமாக என்ற வார்த்தையை எடுத்துவிடுங்கள். பிரிவினைக் கோரிக்கையை முற்றாகவே கைவிட்டுவிட்டோம்' என்று அறிஞர் அண்ணா திட்டவட்டமாக விளக்கமளித்திருந்தார்.

அறிஞர் அண்ணா பிரிவினை கேட்ட நேரத்தில்கூட இந்திய மாநிலங்களான தமிழகம், கேரளம், கர்நாடகம், ஆந்திரா ஆகிய 4 மாநிலங்களும் பிரிந்து வாழ வேண்டும் என்று கேட்டாரே தவிர. அவர் அப்போது கேட்ட திராவிட நாட்டில், வேறு எந்த நாடோ, அல்லது நாட்டின் பகுதிகளோ சேர்க்கப்படவில்லை.

தி. மு. க. தலைவரான திரு. அண்ணாதுரை ஒரு பயங்கரவாதியல்ல. பொறுப்புணர்ந்த—சாதுவான ஒரு அரசியல் தலைவர். சிறந்த ஜனநாயகவாதி. அப்படிப்பட்ட ஒருவரால் தனிச் சுதந்திர நாடாக விளங்கும் ஈழத்துக்கும், சிங்கள மக்களுக்கும் ஆபத்து ஏற்படும் என்று கூறுவது கடைகெட்ட ஒரு ஈனத்தனமான செயலாகும்.

## மகிழ்ச்சி ஏன்?

தமிழரசுக்கட்சிக்கும் தி. மு. க. வுக்குமிடையே உறவில்லையென்றால், சென்னையில் தி. மு. க. வெற்றி பெற்றதைக் குறித்து இலங்கையிலுள்ள தமிழரசுக்கட்சியினரும் தமிழ் மக்களும் குதூகலிப்பானேன்? தி. மு. க. வுக்கு வாழ்த்துத் தெரிவிப்பானேன்? என்று கேட்கலாம்.

அதற்குக் காரணம் அரசியற் தொடர்பு அல்ல. அது உணர்ச்சி பூர்வமானது. கியூபாமீது அமெரிக்கா கைவைத்த நேரத்தில் அதை எதிர்த்து இங்கு ஆர்ப்பாட்டம் நடைபெற்றதற்குக் காரணமாயிருந்த உணர்ச்சி காரணமோ—சீனாவில் முஸ்லிம்கள் தாக்கப்படுவது குறித்து இங்குள்ள முஸ்லிம்கள் கண்டனம் தெரிவிப்பதற்கு எந்த உணர்ச்சி காரணமோ—சீனா இந்தியாவைத் தாக்கிய நேரத்தில் இங்குள்ள தமிழ், சிங்கள மக்களை ஒன்றுபட வைத்து கண்டனக் குரல் எழுப்பியதற்கு எந்த உணர்ச்சி காரணமோ—அதே போன்ற ஒருவித உணர்ச்சிதான் இலங்கையிலுள்ள தமிழ் மக்கள் இந்தியாவிலுள்ள தி. மு. கழகத்துக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதற்கும், தி. மு. க. வெற்றியையிட்டு மகிழ்ச்சி விழாக்கள் நடத்துவதற்கும் காரணமாக இருந்தது—இருக்கிறது.

இந்த உணர்ச்சி கலாசாரத் தொடர்பால் ஏற்பட்டது. மொழித் தொடர்பால் ஏற்பட்டது. இதற்கு அரசியல் முலாம் பூசுவது பண்புகெட்ட செயல். சந்தர்ப்பவாதம்.

## பூச்சாண்டியைக் கைவிடுக!

இங்குள்ள சீனச்சார்புக் கம்யூனிஸ்டுகள் மாசேதுங் படத்தைப் போட்டு நாள்காட்டி வெளியிடலாம் என்றால், தமிழர்கள் அறிஞர் அண்ணாவின் படம் போட்ட நாள்காட்டியை வெளியிடுவது எப்படி தவறாகும்?

இலங்கையிலுள்ள தமிழ்மக்கள் இலங்கையிடத்தில் கொண்டுள்ள தேசியப்பற்றை சந்தேகிப்பது அவர்களின் மனதைப் புண்படுத்துவதாகும்.

ஆகவே எதிர்க்கட்சியினரும் வகுப்புவாத நஞ்சைக் கக்கும் 'தேசிய' ஏடுகளும், இந்நிலைமைகளை நன்குணர்ந்து, தி. மு. க. பூச்சாண்டிகாட்டி, சந்தர்ப்பவாதம் பேசி சிங்கள மக்களை தவறானவழியில் இட்டுச்செல்லாது நேர்மையான பாதையிற் செல்லும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

தி. மு. க. பூச்சாண்டிக்குப் பின்னால் ஒரு பெரும் உண்மை மறைந்திருப்பதையும் நாம் உணரவேண்டும். இப்பிரச்சினைபற்றி நீண்டதொரு ஆசி

(9-ம் பக்கம் பார்க்க)

# சுதந்திரக் கட்சியில் 3 அணிகள்

## மக்களின் ஆதரவை பெற புதிய தந்திரம்

தேசிய அரசாங்கத்திற்கெதிரான பிரச்சாரத்தை எதிர்கட்சிகள் மூன்று அணியாகப் பிரிந்து நின்று நாட்டில் தீவிரமாக முடுக்கி விடத்தீர்மானித்திருப்பதாக இப்பொழுது தெரியவந்துள்ளது. புதிய கொலன்னுவை பிரதிநிதியும் சுதந்திரக்கட்சித் தலைவர்களில் ஒருவருமான திரு. ரி. பி. இலங்கரத்தின தலைமையில் பொருளாதாரப் பிரச்சினைகளை முன்வைத்து ஒரு அணி தீவிர பிரச்சாரம் நடத்துகையில் மறு அணி திரு ஆர். ஜி சேனநாயக்கா தலைமையில் தி. மு. க. வெற்றியைப் பெரிதுபடுத்தி வகுப்புவாத அடிப்படையில் பிரச்சாரத்தை மேற் கொள்ளுமாம். மூன்றாவது அணி இவ்விரு அணிகளிலிருந்தும் சற்று விலகி நின்று சிறுபான்மை மக்களின் ஆதரவைப் பெறும் முயற்சியில் முன்னாள் குருநாகல் எம் பி. திரு ஜெயாபத்திரான தலைமையில் பிரச்சாரம் மேற் கொள்ளும் என்று தெரிகிறது.

தேசிய அரசாங்கக் கட்சிகளுக்கெதிரான பிரச்சாரத்தை இலங்கை பூராவிலும் தீவிரப்படுத்துவது என்று எதிர்கட்சிகளின் அண்மையக் கூட்டமொன்றில் தீர்மானிக்கப்பட்டிருப்பதுடன் அதற்கான திட்டம் ஒன்றும் தயாரிக்கப்பட்டுள்ளது. பலதரப்பட்ட மக்களினதும் ஆதரவைப் பெறக் கூடியதாகவும் இத்திட்டம் அமைந்திருப்பதாகத் தெரிகிறது.

நாட்டில் இன்றுள்ள பொருளாதாரப் பிரச்சினைகளைக் குறிப்பாக உணவுப் பொருட்களின் தட்டுப்பாட்டையும், அரசாங்கம் உத்தேசித்திருக்கும் சேமிப்பு இயக்கத்தையும் கண்டித்து திரு. ரி. பி. இலங்கரத்தின தலைமையில் திருவாளர்கள் ரி. பி. சுபசிங்கா, எம். பி, டி. சற். சிறிவர்த்தன, மூதவை உறுப்பினர் கருணகொடை, ஸ்டான்லி திலக்கரத்தின முதலியோர் இலங்கையின் மத்திய பகுதியிலிருந்து தமது பிரச்சாரத்தை தொடக்க இருக்கிறார்கள் என்று அறியப்படுகிறது.

இரண்டாவது கோஷ்டி திரு ஆர். ஜி. சேனநாயக்கா தலைமையில் தி. மு. க. வெற்றியையும், இவ்வெற்றியினால் தமிழரசுக் கட்சி பலம் பெற்றிருப்பதாகவும், இச்சந்தர்ப்பத்தில் மாவட்ட சபைகள் அமைக்கப்பட்டால் இலங்கை தி. மு. க. வசமாவது தவிர்க்க முடியாதது என்றும் தென்னிலங்கையில் தமது பிரச்சாரத்தை ஆரம்பிக்கவிருக்கிறது. இக் கோஷ்டியில் திரு. பீலிக்ஸ் டயஸ்பண்டாரநாயக்கா, திரு. டி. எம். கோத், நுவரெலிய முன்னாள் எம். பி. திரு. வில்லியம் பர்ணந்து முதலியோர் உள்ளனர் என்று தெரிகிறது.

மூன்றாவது கோஷ்டி முன்னாள் குருணகல் எம். பி. திரு. ஜெயா பத்திரான தலைமையில் தனது பிரச்சாரத்தை வட-கிழக்கு இலங்கையில் மட்டும் நடத்தவிருக்கிறது. இக் கோஷ்டியில் திரு. மைத்திரிபால சேனநாயக்கா, திரு.கே. பி. ரத்நாயக்கா, மூதவை உறுப்பினர் திரு. ஆனந்த திசநாயக்கா, மிகுந்தலை எம். பி. திரு. தென்னக்கோன், ஜனாப் ஏ. எல். ஏ. மஜீத் ஆகியோர் உள்ளனராம். இவர்கள் தமிழ் மக்களின் ஆதரவைப் பெறக்கூடியதாக தமது பிரச்சாரத்தை நடத்த விருக்கிறார்கள். இதற்கிடையே முன்னாள் அமைச்சர் ஜனாப் பதியுதீன் மாமூத் தலைமையிலுள்ள இஸ்லாமிய சமதர்ம முன்னணி முஸ்லிம்மக்களின் ஆதரவைப் பெற முயற்சி செய்து கொண்டிருக்கிறது.

இடதுசாரிக் கட்சியினர் இப்பிரச்சார முறையில் எத்தகைய பொறுப்பினையும் ஏற்காத போதிலும் இக்கோஷ்டிகள் அனைத்திற்கும் அவ்வப்போது சமய சந்தர்ப்பம் போல தங்கள் ஆதரவை கொடுக்கத் தவற மாட்டார்கள் என்று கூறப்படுகிறது.

இடைத் தேர்தல்களில் கிடைத்து வரும் வெற்றி எதிர்க் கட்சிகளுக்குப் புதிய பலத்தையும் தெம்பையும் கொடுத்திருப்பதாகவும், இவ் வெற்றிகளே இப்புதிய திட்டத்திற்குக் காரணம் என்றும் நம்பப்படுகிறது.

### பொ. கட்சிக்குள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிட்டிப் பிரதிநிதி கொழும்பில் ஒருகூட்டத்தில் ஆற்றிய ஒரு உரையைக் குறிப்பிட்டு அந்தப் பேச்சு தங்கள் தலைவரைமறைமுகமாகத் தாக்குவது போலிருப்பதாகவும் அதற்காக உடுப்பிட்டிப் பிரதிநிதி செயற் குழுவிடம் மன்னிப்பு கேட்கவேண்டும் என்றும் கூறினராம்.

அப்பொழுது திரு.பொ.குறுக்கிட்டு என்ன பேச்சு அதுஎன்று கேட்டபோது 'தமிழர்கள் ஒற்றுமைப் படவேண்டுமென்றால் இன்றைய தலைவர்கள் சாகவேண்டும்' என்று திரு. மு. சிவசிதம்பரம் பேசியிருப்பதாகக் குறித்த உறுப்பினர் விளக்கினர் என்று தெரிகிறது.

இதைக் கேட்ட திரு.பொன்னம்பலம் சர்வாதிகாரத் தொனியுடன், சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்வது போல, திரு. சிவசிதம்பரத்தை நோக்கி "உண்மைதானா?" என்று கேட்டபோது திரு. சிவசிதம்பரம் 'உண்மையைத்தான் சொன்னேன். அதற்காக மன்னிப்புக்கேட்கவும் மாட்டேன்' என்று அடித்துச் சொன்னதாகத் தெரிகிறது.

இதைத் தொடர்ந்து உடுப்பிட்டியாருக்கும் திரு. பொன்னம்பலத்துக்குமிடையில் கடுமையான வார்த்தைகள் பரிமாறப்பட்டனவென்றும் பின்னர் அது பொன்னம்பலர் கோஷ்டிசிவசிதம்பரர்கோஷ்டியென்றுபிளவுபட்டு, கோஷ்டிச் சண்டையாக மாறியதாகவும் இந்தக் கோஷ்டி சண்டையுடன் செயற்குழுக் கூட்டம் நிறுத்தப்பட்டதாயும் தெரிய வருகிறது.

இம்மாதம் 3ம் திகதி நடைபெறவிருப்பதாக கூறப்பட்ட பொ. கட்சியின் செயற்குழுக் கூட்டம் சனி கிழமை திகதியில் நடைபெறாமல் போனதற்கும் பொ கட்சிக்குள் பூதாகாரமாக வளர்ந்துவிட்ட கோஷ்டிப் பூசலே காரணமென்றும் சொல்லப்படுகிறது.

### தி. மு. க....

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

ரியத் தலையங்கத்தை எழுதியுள்ள 'சன்' என்ற ஆங்கிலத் தினசரி ஏதோ மகாராஷ்டிரத்தில் தென்னிந்திய வர்த்தகர்கள் பகிஷ்கரிக்கப்பட்டார்கள் என்றும் கதையளந்திருக்கிறது.

தேசிய அரசின் கடமை

'சன்' பத்திரிகை அது போன்ற ஒரு பகிஷ்கரிப்பு இயக்கம் இலங்கையிலும் தமிழர்களுக்கு எதிராக ஆரம்பிக்கப்பட வேண்டுமென்பதை மறைமுகமாக சிங்களமக்களுக்குச் சுட்டிக்காட்டுவதாகவே தெரிகிறது இது எத்தகைய அபத்தானது என்பதை நாம் இங்கு விளக்கத் தேவையில்லை. இத்தகைய பிரச்சாரங்கள் எல்லாம் மீண்டும் ஒரு இனக்கலவரத்திற்கு வழிசமைக்குமென்பதை அனைவரும் உணர்வார்கள்.

தேசியத் தினசரிகளினதும் எதிர்க்கட்சிகளினதும் இந்த அபத்தான விளையாட்டுக்கு ஒரு எல்லை இல்லையா? தேசிய அரசாங்கம் இவற்றைப் பார்த்துக்கொண்டு கண்மூடிமௌனியாக இருப்பது ஏன்? உடனடியாக இந்த பொறுப்பற்ற பித்தலாட்டப் பிரச்சாரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறோம்.

### தினபதி சன்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொய்ச் செய்தியை முன்பக்கத்தில் முதல் செய்தியாக 'போர்டர்' கட்டி பிரசுரித்திருந்தது. ஆனால் அதன் சகோதர பத்திரிகையான 'தினபதி' இச் செய்தியை வெளியிடவில்லை, ஏன்? ஒரே நிறுவனத்தைச் சேர்ந்த சிங்கள, ஆங்கில, ஏடுகள் தமிழ் பேசும் மக்களுக்கு எதிராகப் பிரசாரம் செய்யும் போது தமிழ் ஏடு தமிழ் பேசும் மக்களின் நண்பனை நடிக்க முயற்சி செய்கிறது.

அத்துடன் அன்றைய பத்திரிகையில் எழுதப்பட்ட தலையங்கத்திலும், மகாராஷ்டிரத்தில் "சிவசேனை" என்ற இயக்கத்தால் தமிழ்க் கடைகள் பகிஷ்கரிக்கப் பட்டு வருவதுபோல இலங்கையிலும், 'நாம்சிங்களவர்' இயக்கம் என்றஒருஇயக்கத்தைதொடங்கலாம் என்றும் எழுதியுள்ளது.

இலங்கையில் மீண்டும் ஒரு ரத்தக்களரியை ஏற்படுத்தும் நோக்கத்துடனே இப்படியான தவறான செய்திகள் சிங்கள மக்கள் மத்தியில்பரப்பப்பட்டு வருகிறது என்று கேட்கப்படுகிறது.

இதன் சகோதரப்பத்திரிகையான 'தினபதி' போ தி.மு.க. செய்திகளை படங்களுடன் பக்கம் பக்கமாக வெளியிட்டு பத்தினி வேடம் போடுகிறது.

'தினபதி'க்காகஎன்று தமிழ் பிரதிநிதிகளிடமிருந்து பெறப்படும் அபிப்பிராயங்கள் 'சன்' பத்திரிகையிலும், ஏனைய சிங்களப் பத்திரிகைகளிலும் சிங்கள மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டிவிடக்கூடிய முறையில் திரித்து வெளியிடப்படுகின்றன.

இத்தகைய பிரச்சாரங்களை உடனடியாகத்தடுத்து நிறுத்த தேசிய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கத்தவறினால், இது பின்னர் திருத்த முடியாத தவறாகி விடும் என்றும் சுட்டிக் காட்டப்படுகிறது.

### எங்கே...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

சப்படி போராட்டம் வேண்டாம், ஒரு ரூபாய் ரேட் உயர்வை சமீபத்தில் பெற்றுத்தர போகின்றோம் என்றெல்லாம் அறிக்கை விட்டு இன்று வரை சதக்காசைக் கூட பெற்றுத்தராத தொழிற் சங்கங்கள் எல்லாம் தமிழரசார் குட்டையை குழப்புகிறார்கள் என்று கூறுவது எமக்கு விந்தையாக இருக்கிறது. போராடியிருந்தால் நாம் அந்த பஞ்சப்படியை பெற்றிருப்போம், நாம் ஓரணியில் இல்லாத காரணத்தால் தான் பல வருடகாலமாக ஒருசதம்தானும் சம்பள உயர்வின்றி இருந்து வருகின்றோம். நாம் என்று ஒரே தொழிற்சங்கத்தின் கீழ் ஒரே அணியில் நின்று போராடுகின்றோமோ அன்று தான் நம் போராட்டத்தின் முக்கிய பலனை அநுபவிக்க முடியும்.' இவ்வாறு கடந்த 24.2.67ல் தலவாக்கொல்லையைச் சேர்ந்த மொச்சைக்கொட்டைத் தோட்டத்தில் நடந்த கோட்டக் தேர்தல் கூட்டத்தில் உரையாற்றியஇலங்கைத் தொழிலாளர் கழகத்தின் இணைப்பொருளாளர்களில் ஒருவரான திரு. மு. எல்லாளன் கூறினர்.

### மறைவு

உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வம் அவர்களின் அருமை அன்னையார் திருமதி செல்லம் முருகேசன் அவர்கள் கடந்த 6-3-67 அன்று அவரது 87 வது வயதில் இயற்கை எய்தினார் அன்னையைப் பிரிந்து வாடும் அமைச்சருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் சுதந்திரன் வாசகர்கள் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத்தெரிவித்துக் கொள்கிறோம்.

### இலங்கைக்கு...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

திய சமயத்திலும் தி. மு. க. தமிழரசுக்கட்சிக்கு ஒத்துழைப்பு அளித்து வாழ்த்து கூறி செய்திக்குமேல் செய்தி அனுப்பி வைத்தது.

தமிழரசுத் தலைவர் தென்னிந்தியாவுக்குப் போகும் போதெல்லாம் அவர்களுக்கு வரவேற்பு அளித்து உபசாரங்கள் செய்தவர்கள் சென்னை தி. மு. க. தலைவர்களே.

அதே மாதிரி தி. மு. க. தலைவர் ஒருவர் இலங்கைக்கு வந்தால், அவருக்கு இராஜோபசாரம் நடத்துவது தமிழரசாரே.

தி. மு. க. தலைவர்களிலொருவரான திரு. எம். ஜி. இராமச்சந்திரன் இலங்கைக்கு வந்தபோது அவருக்கு இங்கு எத்தகைய வரவேற்பு அளிக்கப்பட்டதென்பது அனைவரும் அறிந்ததே! அவர் மலை நாட்டுக்கு போரில் வென்ற மன்னன் திக்விஜயம் செய்வதைப் போல சென்றார். அங்கு அவர் ஓர் அரசனைப் போல வரவேற்கப்பட்டார்.

அதுமட்டுமல்ல நம் நாட்டு அரசாங்கத் தலைவர்களுடன் இரகசியப் பேச்சு வார்த்தைகள் நடத்தவும் அவருக்கு சந்தர்ப்பம் பெற்றுக் கொடுக்கப்பட்டது'.

### அரசாங்கத்துக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இருந்த போதிலும் தனக்கு எதிரான அரசியல் கருத்து உடையவர்கள் என்றும் கல்வி அமைச்சரிடம் பொ. கட்சிப் பெரிய பா. உறுப்பினர் முறையிட்டாராம். அவரது முறையீட்டை அறிந்த கல்வி அமைச்சைச் சேர்ந்த ஒரு உயர் தர அதிகாரி பெரிதும் ஆத்திரமடைந்துள்ளார். இவ்வதிகாரி 'பெரியவர்' தலையீடு பற்றி நமது நிருபரிடம் கூறுகையில் 'தெரிவு செய்யப்பட்டதோ பதினொன்று. அதற்குள் இரண்டைத் தட்டிவிட்டால் அதுவும் சிங்களவர்கைக்கு அல்லவா போய்விடும்' என்றார் மனக் கொதிப்புடன்.

தேசிய அரசாங்கம் தோன்றிய நாள்முதல் கல்விஅமைச்சு பிரச்சினைக்குரியதாகவே இருந்து வருகிறது. கல்வி அமைச்சின் இன விரோத செயல்கள் பற்றி தமிழர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் பிரதமரிடம் தூதுசென்று முறையிட்டிருந்தது நமது வாசகர் அறிந்ததே. இப்பொழுது சித்திர ஆசிரியர் தெரிவில் தமிழர்களும் முஸ்லிம்களும் ஒதுக்கப்பட்டிருப்பது தேசிய அரசாங்கத்திற்கு எதிரானஒருசதிஎன்றுஅரசாங்கக்கட்சிப் பிரமுகர் ஒருவரே கூறியுள்ளார். இப்பிரச்சினையையும் தமிழரசார் பிரதமரது கவனத்திற்கு விரைவில் சமர்ப்பிப்பார்கள் என்றுதெரிகிறது.

### அமைச்சர்......

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தாயை இழந்த துயரம் ஒரு புறம். மறுபுறம் தாயாரின் அந்திமக்கிரியைகளுக்கு வேண்டிய ஒழுங்குகளையும் செய்ய வேண்டும். பி-ப 2-30 மணிக்கு பிரதமரை வேறு சந்திக்கவேண்டும்.

பி-ப 2-15மணிக்கு பாராளுமன்ற வராந்தாவில் தமிழரசுத் தந்தையும், திரு. அ. அமிர்தலிங்கமும் அமைச்சர் வருவாரோ மாட்டாரோ என்று காத்துக்கொண்டு நின்றார்கள்' அப்பொழுது அமைச்சர் திருச்செல்வத்தின் கார் வந்தது. காருக்குள்ளிருந்து சோகமே உருவாக அமைச்சர் திருச்செல்வம்; கையில் 'பைல்கள்' சகிதம் பிரதமரைச் சந்திக்கும் பொருட்டு தமிழரசுத் தந்தையிருந்த இடத்துக்கு வந்து சேர்ந்தார்.

வீட்டில் பெற்றதாய் இறந்து கிடந்தநேரத்திலும் கூட கடமையாற்றஓடோடி வந்த கடமை வீரரான அமைச்சரைப் பார்த்து ஆச்சரியப் பட்டார்கள் அங்கு நின்றோர்.

—சபை நிருபர்.

### சின்டிகேட், தோல்வி

டில்லி மத்திய அரசின் கொள்கைகளை நிர்ணயிப்பவர்களான "அமெரிக்கப் புதல்வர்கள்' அனைவரும்கடந்த பொதுத்தேர்தலில் படுதோல்வி அடைந்துள்ளார்கள். திருவாளர்கள் எஸ். கே. பட்டீல், சி. சுப்பிரமணியம், அதுல்யாகோஷ் ஆகியோர் அக்குழுவின் முக்கிய தலைவர்களாவர். இது "சின்டிகேட்" என்று கூறப்படுகிறது. இவர்களில் ஒருவரேனும் கடந்த தேர்தலில் வெற்றிபெருதமையினுல் அமெரிக்க பி.எஸ். 480 உதவித்திட்டத்தின்கீழ் இந்தியாவுக்கு வழங்கப்படும் நன்கொடைகள் பாதிக்கப்படலாம் என்று அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பி|ர|ச|வ|ம்

## போட்டிக் கதை

எனது துடிப்புக்களையும், ஆவலையும் தின்று தின்று பொருமிப்போன அசமந்தத்தோடு இரவின் நிமிஷத்துளிகள் கால நிலத்திலே பொட்டுப் பொட்டென்று விழுந்து தெறித்துக் கொண்டிருக்கின்றன. இதயம், எதிர்பார்ப்பின் அச்சுறுத்தலுக்குப் பயந்ததுபோல வேகமாக அடித்துக்கொள்கிறது.

நான் எனது மனைவியைச் சேர்த்திருந்த பிரசவ அறையின் வெளியிலே ஒரு நாற்காலியிற் சாய்ந்திருக்கிறேன். உள்ளிருந்து அவளின் முனகல் அடிக்கொருதரம் காதைக் குடைந்து, நெஞ்சைப் பிளக்க முயல்கிறது. தலைப் பிரசவம்; 'என்ன ஆகுமோ:' என்ற அச்சத்தில் பிறந்த ஒரு துடிப்பில் கழுத்தை வளைத்து உள்ளே பார்க்கிறேன். மூடிய கதவுகள் என்னை முறைக்கின்றன. இருந்திருந்து வெளியே வரும் 'நேர்ஸி'ன் முகத்தில் எனது இதயக் கேள்வியை விழிக்கரத்தால் கொழுவுகிறேன். 'நேர்ஸோ' எந்தவித உணர்ச்சியுமின்றி என்னைக் கடந்து, எனது உணர்ச்சிகளை நடைபாவாடையாக்கி நடக்கிறாள்.

'ஆ......அம்மா... அப்பா... ஐயோ......

விட்டுவிட்டு வருகிறது. வேதனைக்கு அவரோ கணகதி கொடுத்து வளர்கிறது.

நான் கண்ணை மூடிக்கொள்கிறேன்......

'பிரபஞ்சம் பரப்பிரமத்தின் ஒரு தோற்றம் மாத்திரந்தான். நான் என்பதும் நீ என்பதும் ' அது என்பதும் அவை என்பதும் எல்லாம் வெறும் மாயம். பிரமத்தின் விவர்த்தமயமான விளையாடலில் நீ மயங்குகிறாய். நீயும், அவளும் உனது வித்தாக அவளின் வயிற்றைக் குடைந்து கொண்டிருக்கும் ஜீவனும் எல்லாம் ஒன்றே. பலவெல்லாம் ஒன்றாகி ஒன்றே நித்தியமாய் அந்த நித்தியமே எல்லாமாய் அமைவதை அறி''

தத்துவசாஸ்திர விரிவுரையறையிலே வேதாந்தத் தத்துவத்திற்கு விளக்கம் கொடுத்துக்கொடுத்துப் பழகிப்போன அடிமனத்திலிருந்து சந்தர்ப்ப பேதமாக, அபஸ்வரமாக எழுகின்ற சிந்தனைக்கரு, சிந்தையிலே சர்ப்பமாக நெளிய......

நான் கண்களைத் திறக்கிறேன். மழைக்கால இரவின் நினைவுச் சின்னமாக எங்கும் ஈசற் செட்டைகளும், ஈசற் பிணங்களும் குவிந்து கிடக்கின்றன. நடுவிலே வாழைத் தண்டுபோலத் தூங்கும் மேக்கூரி விளக்கைச் சுற்றி 'உய்' என்ற ஒலியிலே ஈசற்பட்டாளத்தின் தற்கொலைப் போராட்டம் தொடர்ந்து நடக்கிறது.

'நானும் இந்த ஈசல்களும் மேக்கூரி விளக்கும் இதோ என்னருகே வருகின்ற 'நேர்சு'ம், இந்த நாற்காலியும், உள்ளே இருக்கும் மனைவியும் நினைவாக எஞ்சி நிற்கும் எனது பெற்றோரும் எல்லாம் ஒன்றே ...எல்லாம் ஒன் .''

பெற்றோரின் நினைவில் ஒரு கணம் ஆழ்ந்து போகிறேன். ''அப்பா......'

'நெடிது வளர்ந்த ஆகிருதி. ஏறிய பரந்த நெற்றி. லலாடத்தில் பாம்பின் நெளிவோடு ஓடுகின்ற நடுநரம்பு. அந்த நரம்பின் மத்தியிலே புளியமிலை வடிவிலமைந்த சந்தனப் பொட்டு. நீண்ட ஏதோ ஒரு வகைப் போதையேறிய விழிகள். அரையிலே சாய வேட்டி. தோளில் செட்டைத்துண்டு.'

இதுதான் அப்பா! தோற்றத்தின் கம்பீரத்தால் அளவிடமுடியாத உண்மைகளை உணர்த்திவிடும் சாயவேட்டியிலே, தாமரையிலை நீர்த்துளியாக அவர் வாழ்ந்த நிஷ்காமிய கர்ம வாழ்க்கை புலனாகும்.........

வெள்ளிக்கிழமைகளிலும் அமாவாசைகளிலும் முருக்கங்காய்க் குறிகளோடு, மத்தியான வேளையில், வாழைமடல்களை உரித்து, மேசைக்கத்தியாற் கீறி தென்னை ஈர்க்குக் கொண்டு இலை தைத்த காட்சி என் நினைவிலே குதிர்கிறது.

அவருக்கருகிலே சென்று அந்த வாழைத்தண்டை இழுத்து கிறீச் கிறீச் என்று அதை விரலால், அழுந்த இழுத்துச் சப்தம் செய்து மகிழ்ந்த அந்தப் பாலபருவம்......

அப்பா ஒன்றும் சொல்லமாட்டார், 'உம்' என்ற ஒரு கனைப்போடு, தமது இலைதைக்கும் யோகத்தில் ஏகாக்கிர சித்தத்துடன் ஒன்றி விடுவார். முதுகிலே விழுந்து கிடந்த புளியங்காய்ச் சடையும், நீண்டு தொங்கிய வெள்ளை கலந்த கறுப்புத் தாடியும் அவரிலே நான் கண்ட புதுமைகள்.

அவர் எனக்குச் சொல்லித் தந்த பாடல்கள்? 'ஊரும் சதமல்ல...... உற்றார் சதமல்ல... ''வாழ்வாவது மாயம். இது மண்ணாவது திண்ணம்'' ஒரு மடமாது ஒருவனுமாகி?...... 'அவரின் அச்சுப்பிரதிதானும் நான்.' என் அம்மா சொல்லுவாள். பேச்சைக் குறைத்து கருமத்திலே கண்ணாயிருந்த அப்பா, எனது ஆதர்சபுருஷராக அமைந்ததில் எனக்கு எவ்வளவுக்கெவ்வளவு பெருமையிருந்ததோ அவ்வளவுக்கு அவ்வளவு அம்மாவுக்கு அது துக்கம்...... கட்டைவரை நீங்காது நின்ற பெருந் துக்கம் அது.

அப்பாவுக்குத் தொழில் பூமாலை கட்டுதல். மல்லிகையிலும், கனகாம்பரத்திலும், அலரியிலும், செவ்வரத்தையிலும் மாலைகள், செண்டுகள் அல்ல...... காவியங்கள் வடித்துத்தரும் கலைஞர் அவர்! ஆண்டு முழுவதும் மாறி மாறிக் கோயிலுக்கும், மணவீடுகளுக்கும், பொதுக் கூட்டங்களுக்கும் மாலைகள் கட்டிக் கொடுத்துக்கொண்டிருந்தார்,

எவ்வளவுதான் பணம்வரட்டுமே? அதைத் தொட்டுப் பார்ப்பதற்கே அருவருப்புப் பட்டவர்போல ஓடி வந்து அம்மாவிடம் கொடுத்துவிடுவார். அதற்குப் பிறகு எல்லாம் அம்மாவின் பாரந்தான்–குறைந்தது கூடியது என்று மூச்சுவிடக்கூடாது.

அப்பாவிற்குக்கோபம்வந்து பார்க்கவேண்டுமே! நெற்றி நரம்பு புடைத்து நிற்க, விழிகளிலே இரத்தம் திரண்டு புரள, உதடுகள் துடிக்க, வாய், பேசாமல் பேசுவது போலப் பாவனை செய்ய......

அம்மா கரிந்து சுருண்டு போவாள்......அதற்குப் பிறகு அப்பாவின் பார்வையிலே இரண்டுநாட்களுக்குப் படவே மாட்டாள்......

'அம்மா......' அவள் எவ்வளவு நல்லவள்? தனது ஏக புத்திரனும், ஆதாரமுமான என்னை அவள் தன் உயிருக்குள்ளே உயிராக வைத்துப் பேணினள். ஆனல் எனக்கு அன்றைக்கு அந்த அன்பு வேண்டியே இருக்கவில்லை: அப்பாவின் புருஷத்துவமாகிய மகாசமுத்திரத்திலே ஒரு குமிழியாக மிதக்கின்ற மிதப்பில், அந்தப் பெருமிதத்தில் அம்மா எனக்கு ஒருதூசாகவே தோற்றினள்......

'தம்பி! ராசா! மோனே! குஞ்சு . ... என்ரை திரவியம் என்று அம்மா அணைத்து என் முகத்தோடு முகம் வைத்து மலர்கையில், நான் அந்த அணைப்பிலிருந்து பலவந்தமாக என்னைப் பிய்த்துக் கொண்டு ஓடிவிடுவேன்.

அநாவசியமாக என்னைத் தொட்டுக்கூட அடியாத அப்பாவின் நிழலிலே, அவருக்கருகிலே நிற்கும்போதுதான் நான் நானக இருந்தேன்...... அப்படி நினைத்துக்கொண்டேன்!

அப்பா எனது இதயத்தின் மீது பற்றின்மை என்ற திரையை விரிக்க, அம்மா அதைக் கிழித்து எனது பாசத்தைத் தூண்டிவிட முயல......

இருவர்க்குமிடையே நடந்து வந்த யுத்தத்தில் அப்பாதான் வென்றார்; அது ஒரு மாபெரும் வெற்றிதான்!

''அப்பா' நீங்கள் என்னிலே உங்களையே பதித்துவிட்டீர்கள் என்ற இறுமாப்பிலே எத்தனை ஆண்டுகளை நான் போக்கினேன்? ஆனல் எனது சாதாரணத்திலே உங்கள் அசாதாரணம் அத்துவிதத்தன்மை பெற்றதா, என்ற கேள்விக்குச் சரியான விடை கிடைக்க நான் எத்துணைக்காலம் காத்திருக்கவேண்டியிருந்தது...?''

(2)

ஷுப்தி நிலையிலிருந்து சாக்கிர நிலைக்குத் திரும்பி...... கண்களைத் திறக்கிறேன்,

''அம்மா...ஆ... ஐயோ...... மனைவியின் குரல்,

எனது பலவீனம் என்னைச் சூழ்ந்து கொள்கிறது. அப்பா, அம்மா, ஈசல், மேக்கூரி விளக்கு, நான் எல்லாம் மறைந்து எனது பாச இதயம் பிரசவ அறையின் கதவுகளைச் சென்று மோதுகிறது.

''இன்னும் ஒன்றும் இல்லையா?''

'நேசின்'காலடிச் சத்தத்தை எனது மூன்று சொல்களும் வரவேற்கின்றன.

'நேர்ஸ்' முகத்தைச் சுழித்துக்காட்டிவிட்டு பேசினைக் கைகளிலே எந்திக்கொண்டு உள்ளே செல்கிறாள்.

இன்னும் எத்தனை மணித்தியாலங்கள்! இருதயத் துடிப்பில் மோதிக்கொண்டு வெளிவரத் துடித்த பெருமூச்சில் எனது வேதனை சிலந்தி போலத் தூங்குகிறது.

கால்களுள் ஏதோ ஊசி ஏற்றுவதுபோன்ற உணர்ச்சி கிளம்புகிறது. விறைத்துவிட்டனவோ? எழுந்து நொண்டி நொண்டி முற்றத்திற்கு வந்து அண்ணாந்து நோக்குகிறேன்.

ஆகாசம் என்றால் எங்கும் ஒளிதருவது என்று பொருளாம்! ஆனல் நான் கண்ட ஆகாசம் ஒரே இருட்டாய்ப் பிசுக்கேறிக் கிடக்கிறது. நட்சத்திரங்களும் செத்துவிட்டனவோ......?

முற்றத்து மல்லிகையும், ரோசாவும், முல்லையுமெல்லாம் கலந்து முயங்கி மூக்கைத் துளைக்கின்றன

விரக்தியுடன் நான் உள்ளே வந்து மீண்டும் கதிரையிலே விழுந்து சமாதி நிலையில், புலன்களுக்குள்ஒடுங்கிப்போய் கிடக்கிறேன்.

என்முன்னால்சிதையொன்று ஆங்காரத்துடன் கப்புங் கிளையும் விட்டு எரிகிறது. அதில் எனது அம்மாவின் சடலம் எரிகின்றது......

பதினைந்து வருடங்களின் பின்னைப்பால் எனதுவிழி கசிந்த வேளையில், அப்பாவின் ''மடையா'' என்ற உரப்பல் என்னை நானுக்குகிறது.

கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, அப்பாவின் வைரம் பாய்ந்த கரத்தைப் பற்றியவனாய் வீடு நோக்கி நடக்கிறேன்.

எனது அப்பாவின் கம்பீர நடைக்கு ஈடுகொடுக்க இயலாது ஓட்டமும் நடையுமாக நடக்கிறேன். அம்மாவின் நினைவு என்னிலிருந்து சிறிது சிறிதாக கரைகிறது.

அப்பாவைத் தொடர்ந்து நானும் பாடுகிறேன்.

'ஊரும் சதமல்ல, உற்றார் சதமல்ல, உற்றுப் பெற்ற பேரும் சதமல்ல பெண்டிர் சதமல்ல...'

உற்றார் உறவினர்கள் எங்களை ஏதோ பைத்தியங்களைப் பார்ப்பது போல் பார்க்கிறார்கள்.

நான் அந்தப் பார்வையை எனக்குக் கிடைத்த பாராட்டாகக் கொள்கையில், அப்பாவின் விழித்தீ என் இதய தீபத்தை ஏற்றிச் சுடர் விட வைப்பது போன்ற உணர்ச்சியைஏற்படுத்துகிறது.

மாதங்கள் கரைகின்றன. வருடங்கள் கால சமுத்திரத்தில் துளிகளாகின்றன.

எனது முகத்தில் மீசை அரும்பிப், பருக்கள் போட்டு, பின் அவை மறைந்து...

நான் வாலிபனகிப் பல்கலைக் கழகப் படியேறி, தத்துவ சாஸ்திரத்தில் சிறப்பு பட்டம் பெற்று, பல்கலைக்கழகத்திலேயே விரிவுரையாளராகின்றேன்.

அப்பா என்னிடம் எதையும் எதிர்பார்க்காமல், ஒரு நாள் நிம்மதியாகப் பரப்பிரம்மத்தில் ஒன்றிப் போக, நான் அவர் சொல்லித்தந்த.

ஊருஞ் சதமல்லஉற்றார் சதமல்ல உற்றுப் பெற்ற... என்ற பாடலைப் பாடுகின்றேன். அத்துடன் அவரும் நினைவாக என்னில் எஞ்சுகிறார்.

'மரணம் என்பது என்ன! சிவன் பழைமையாகிவிட்ட தனது உடற்கூட்டை நீங்கிப் புதிய உடலை நாடிச் செல்லுதலே. தூங்குவது போலும் சாக்காடு. அதை ஞானி திறந்த கைகளோடு வரவேற்கிறான். உலக பந்தத்தில் சிக்கிக் கிடக்கும் மூடனுக்கு உண்மை புலனவதில்லை...

உண்மை புலனனல்... இரகசியம் வெளியானல்... மரணத்தின் வலிய திரை கிழிபட்டால்...

'ஓம்...அஹம் பிரஹ்ம அஸ்மி அஹம் பிரஹ்ம அஸ்மி, நான் பிரமம் ஆகிறேன் நான் பிரமம் ஆகி...

'என்ன இது...? எழுந்திருங்கள் சேர்'

'ஓ... ஓ! என்ன குழந்தை பிறந்து விட்டதா?

'குழந்தை பிறக்கவில்லை, நீங்கள் தான் தூக்கத்தில் குழந்தை போல என்னவோ பிதற்றினீர்கள்.'

'மன்னிக்க வேண்டும்' நேர்ஸ்! என்ன என்னவோ நினைப்புக்கள்'

'வேறு என்ன நினைப்பு. அருமை மனைவி ஆபத்தொன்றும் இல்லாமற் பிள்ளைப் பெற வேண்டும். என்ற நினைப்புத்தான்.'

'நோ! நோ! அப்படி ஒன்றுமில்லை. ஹி...ஹி! உடலை விட்டு உயிர் நீங்கினல் அடையும் நிலை என்ன என்பதைப் பற்றி ஆராய்ந்து கொண்டிருந்தேன். அவ்வளவுதான்.'

'நேர்ஸ்' என்னை அபூர்வமான ஒரு மிருகத்தைப் பார்ப்பது போலப் பார்த்துவிட்டுக் கல கலவென்று சிரித்தபடி உள்ளே செல்கிறாள். அங்கு தன் தோழிக்கு 'அவர் ஒரு 'எக்சென்ட்ரிக்' ஆக இருக்கிறார்.' என்று சொல்லித் தொடர்ந்து சிரிப்பது என் காதுகளில் தெளிவாக விழுகிறது.

(3)

'எக்சென்ட்ரிக்' என்றால் மேதைப் பித்து என்பது பொருள். நான் ஒரு எக்சென்ட்ரிக்! அதாவது அறிவு மேதையும், பித்தும் கலந்த ஒரு கலவை!

இந்தச் சொல் என் மீது பிரயோகிக்கப்படுவது இது நான் முதல் தடவையல்ல. எனது பல்கலைக்கழகச் சகபேராசிரியர்களும், மாணவர்களும் எனக்குக் கேளாமல் மறைவாகப் பேசுவதாக நினைத்து இந்தப் பொன் மொழியை என் மீது எத்தனையோ தடவை பிரயோகித்திருக்கிறார்கள்.

தெறி அறுந்த சட்டை. குழம்பிய தலைமயிர், முள்ளாப் போற் குத்தி நிற்கும் முகத்தின் தாடி, எனக்குள்ளேயே' நான் பேசிச் சிரிக்கும் சிரிப்பு, அநாவசியமாக யாருடனும் பேசாமை, விரிவுரைகளின் போது வகுப்பிலே இடி விழுந்தாலும் தெரிந்து கொள்ளாது விரிவுரையிலேயே என்னை இழந்து போகும் தன்மை 'முப்பத்தெட்டு வயதிலும் கூட மனக்கோட்டையை உடைக்க இடமளியாத பிரமசரியம், என்று எனது மேதைப் பித்தின் பட்டியல் விரிய விரிய எனக்குத் தரப்பட்ட பட்டமும் மாறாது நிலைத்தே தவந்தது.

எனது டாக்டர் பட்டமோ, எனது கட்டுரைகளுக்குக் கிடைத்து வந்த பாராட்டுக்களோ என்னைத் திருப்தியடையச் செய்யாத அளவிற்கு, இந்த எக்சென்ட்ரிக் பட்டம் என்னைக் கூடுதலாகக் கவர்ந்தது என்று சொல்ல வேண்டும்.

தத்துவஞானிகள் யாவரும் நான் ஒரு எக்சென்ரிக் 'எக்சென்ட்ரி' க்குகளே,

ஃ நான் ஒரு தத்துவஞானி என்று நான் அமைத்துக் கொண்ட நியாய 'மாலை' போலியானதானலும், அதன் உட்பொருளில் எனக்கு அளவு கடந்த பெருமை.

எனக்கு எழுதப்பட்ட காதற் கடிதங்கள், என் மீது வீசப்பட்ட ஏக்கம் நிறைந்த காதற் பார்வைகள் என்ற இவற்றின் சர்வசங்காரத்தின் மீது நான் எழுப்பியிருந்த 'எக்சென்ட்ரிக்' கோட்டையைப் போலியாக்கி, தூளாக்கி, காற்றிலே பறக்கவைத்து...

எனது உண்மைத் தன்மையை என் மாணவி புனிதா எனக்கு உணர்த்தி என் குருவாக அவள் ஆன வேளையில்...

நான் அவளின் கரத்தைப் பற்றிக் கொண்டு எனது நாற்பதாவது வயதில், ஓமத்தீயைச் சுற்றி வந்து, அம்மியில் அவளது காலைத் தூக்கி

(14-ம் பக்கம் பார்க்க)

சொக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரத ஐக்கியத்திற்கு ஒரு சவால்

## தேர்தல் முடிவு தரும் படிப்பினை

பாரத துணைக் கண்டத்தின் நான்காவது பொதுத் தேர்தல் முடிவுகள் நாட்டின் எதிர்கால ஐக்கியத்திற்கும், சனநாயக பாரம்பரியத்திற்கும் ஒரு பெரும் சவாலாக அமைந்துள்ளது. அனைத்திந்தியாவையும் சங்கிலியாற்பிணைத்து வைத்திருந்த காங்கிரசை ஆட்சிபீடத்திலிருந்து அகற்றும் பொழுது அதே போன்ற மற்றோர் இயக்கத்தையும் தோற்றுவிக்க வேண்டியது மக்களின் கடமை. இந்த முடிவினை அடுத்த பொதுத் தேர்தலுக்கு முன்னர் பாரத மக்கள் எடுக்கத் தவறினுல் நிச்சயம் நாட்டின் ஐக்கியம் பாதிக்கப்படும் அல்லது சனநாயகம் வேரறுக்கப்படும்.

இந்தியப் பொதுத் தேர்தல் எதிர்பார்க்கப்பட்டதற்கு முற்றிலும் மாறுபட்ட முறையில் அமைதியாக நடந்து முடிந்துவிட்டது. தேர்தலுக்கு முந்திய வாரங்களில் நாடு பூராவிலும தலை தூக்கியிருந்த பலாத்கார சம்பவங்கள் பலரது மனதிலும் என்ன நடக்குமோ, எது நடக்குமோ என்ற சந்தேக வினுக் குறிகளை ஏழுப்பியிருந்தன.

### பலாத்காரம்

சென்னையில் நடைபெற்ற சினிமா நடிகர்களின் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை அடுத்து ஆரம்பமான பலாத்கார நிகழ்ச்சிகள் சம்யுத்த சோசலிஸ்ட் தலைவர் திரு. மதுலிமாயியின் உயிருக்கு உலை வைக்கும் நிகழ்ச்சிவரை வளர்ந்து முடிவில் பிரதமர் இந்திரா காந்தி மீது கல் வீசுகின்ற அளவுக்கு எட்டிப் பிடித்தது. பிரதமர் மீது கல் வீசப்பட்ட நிகழ்ச்சி பாரத மக்களை மட்டுமல்ல, பாராளுமன்ற சனநாயகத்தில் நம்பிக்கையுடைய உலக மக்கள் அனைவரையுமே ஒரு உலுப்பு உலுப்பிவிட்டது.

இந்த நிலையில் ஓர் அமைதியான தேர்தலைப் பாரத நாட்டில் எதிர்பார்க்க முடியாது என்றே பலரும் நம்பினுர்கள். ஆனுல் தேர்தல் அமைதியாக முடிந்துவிட்டது.

பூங்குன்றன்

தேர்தல் முடிவுக்குப் பின்னரும் சில பலாத்கார சம்பவங்கள் ஆங்காங்கே தலை தூக்கியிருந்தாலும் அவை குறிப்பிடக்கூடியளவிற்கு வளர்ச்சியடையவில்லை என்பதனுல் நிம்மதியாக மூச்சுவிட முடிகிறது.

என்றுலும் பாரத நாட்டுத் தேர்தல் முடிவுகள் பல தரப்பட்ட சிந்தனைகளை எழுப்பியிருப்பதை எவரும் மறுக்க முடியாது. கடந்த இருபது வருடகால காங்கிரஸ் ஆட்சிக்கு இம்முறை போன்று பெரியதொரு அடி என்றுமே கிடைத்ததில்லை.

கேரள மாநிலம் மட்டுமே காங்கிரஸ் ஆட்சிக்குப் படியாத மாடாக 1957-ம் ஆண்டு முதல் இருந்து வந்திருக்கிறது. 1957-ம் ஆண்டு கேரளத்தில் ஏற்பட்ட மாறுதல் பாரதத்தின் ஏனைய பகுதிகளிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று சிலர் நம்பியிருந்தார்கள். ஆனுல் 1962-ம் ஆண்டுத் தேர்தல் இக்கணிப்பு முற்றிலும் தவறுனது என்பதைத் தெளிவுபடுத்தியது.

1962ம் ஆண்டு தேர்தலின் போதும் நாட்டில் பல பிரச்சினைகள் தலை தூக்கியிருந்தன. என்றுலும் நேரு என்ற பெருந் தலைமையின் முன் அப் பிரச்சினைகள் மறைக்கப்பட்டுவிட்டன. முன்னைய ஆண்டுகளைப் போன்றே காங்கிரஸ் பெரும் வெற்றியீட்டியது.

இம் முறை நடைபெற்ற தேர்தல் நேரு இல்லாத இந்தியாவில் நடைபெற்ற முதலாவது தேர்தல். அதே நேரத்தில் அன்றிருந்த பிரச்சினைகள் பல புரையோடி புதிய உருவம் பெற்றிருந்தன. இன்று பிரச்சினைகளின்தோற்றம் மக்களைப் பயமுறுத்தவும் தொடங்கிவிட்டன. அந்தப் பயத்தினைப் போக்கக்கூடிய ஒரு பெருந் தலைமையைக் காங்கிரஸ் கொண்டிருக்கவுமில்லை.

### தேர்தல் முடிவு

இத்தனைக்கும் மேலாக நேருவின் மறைவின் பின் காங்கிரஸ் மக்களை விட்டுப் பிரிந்துவிட்டது. மக்களின் மன எழுச்சிகளைப் புரிந்துகொள்ளாத முறையில் காங்கிரசின் செயல் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. முடிவு தேர்தல் நடைபெற்ற பதினுறு மாநிலங்களில் காங்கிரஸ் சரிபாதி இடங்களில் கோட்டைவிட்டு விட்டது. மத்திய அரசிலும் அபரிமிதமான பெரும்பான்மையை வைத்திருந்தகாங்கிரஸ் இன்று மட்டுமட்டான பெரும்பான்மையுடன் நிற்கிறது.

இந்நிலையில் சுதந்திர இந்தியாவின் நான்காவது பொதுத் தேர்தல் முடிவுகள் பாரதத்தின் ஒன்றுபட்ட ஐக்கியத் தன்மை நீடித்து நிலைக்குமா என்ற கேள்வியை உலகத்தவர் உள்ளங்களில் எழுப்பி உள்ளது.

காங்கிரஸ் எட்டு மாநிலங்களில் தோல்வி அடைந்துள்ளது. காங்கிரசின் இடத்தை நிரப்பி உள்ளவர்கள் யார்? எட்டு மாநிலங்களிலும் எட்டு வகையான கட்சிகள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளன.

தமிழ்நாட்டில் இன்றும் பிரதேசக் கட்சியாக விளங்கும் தி. மு. கழகம் காங்கிரசின் இடத்தை நிரப்பி உள்ளது. கேரளத்தில் சீனச் சார்புக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் இடதுசாரி, வலதுசாரி நடுநிலைப் போக்கு அனைத்தையும் கொண்ட ஏழுகட்சிகள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளன.

(14-ம் பக்கம் பார்க்க)

# மொழி பெயர்ப்பா? மொழிப் பெயர்ப்பா?

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

மரபினை அறியாதவர்கள்—மொழிபெயர்க்கத் தெரியாதவர்கள்—மொழி பெயராதவர்கள்—மொழி பெயர்டபதற்கான சொற்றெருகுதிகளைத் தொகுத்தளிக்கும் ஆற்றலில்லாதவர்களென ஒதுக்கிச் சம்பள ஏற்றம் பெறுவதற்கே தகுதியற்றவர்களாகக் காணப்பட்டவர்களை வைத்துக் கொண்டு மொழிபெயர்ப்புப் பணி செய்கிருர்.

பிற திணைக்களங்கள் செய்யும் மொழிபெயர்ப்புக்களையும் மீளவாய்விக்கிருர். அப்பணிகள் எப்படி நடைபெறுகின்றன என்பதை அறிவதற்கு, அரசகரும மொழித் திணைக்களத்தினர் தங்கள் மொழிபெயர்ப்பாளர்களால் மொழிபெயர்ப்பித்து, மீளவாய்ந்து வெளியிட்டிருக்கும் விளம்பரமொன்று 1967-ம் ஆண்டு பெப்பரவரி மாதம் 3-ம் தேதியன்று வெளிவந்திருக்கும் அரசாங்கச் செய்தி மடலில் உள்ளது. அந்த விளம்பரத்திலே மலிந்துள்ள பிழைகளை நோக்குலே, அரசகரும மொழித் திணைக்கள மொழிபெயர்ப்பின் 'செம்மை' எல்லோருக்கும் புலனுகி விடும். எனவே, அந்த விளம்பரத்தினை எடுத்து நோக்கி ஆராய்வோமாக.

அரசகரும மொழித் திணைக்களத்தினர் 1959-ம் ஆண்டிலே அச்சேற்றி வெளியிட்டு இதுகாலவரை திணைக்களங்களெல்லாம் பயன்படுத்தப்பட்டு வந்த 'அரசகருமச்சொற்றெருதி' தரும் சொற்களையே எடுத்தாளாமல், போர்த்துக்கேயர் வருகையின்பின்17-ம்,18-ம், 19-ம் நூற்றுண்டுகளிலே மொழிபெயர்ப்பு ஆற்றலற்றவர்கள் எடுத்தாண்ட அழிதமிழ்ச் சொற்களையெல்லாம் வைத்து ஒட்டுப்போட்டமைத்த மொழிபெயர்ப்பாக அது காட்சி தருகிறது. 'அரசகரும மொழித் திணைக்களம்' என வழங்கி வந்த பெயரினை 'அரசாங்க பாஷைப் பகுதி' என மொழிபெயர்த்தவர் யார்? அவருக்கு ஆங்கில மொழி தெரியுமா? என்று அதிசயப்பட வேண்டியிருக்கிறது! அப்படி மொழிபெயர்த்தவர், விளம்பரத்தின் தொடக்கத்திலேயே "அரசாங்க மொழிப் பகுதி" என -முன்னுக்குப் பின் முரணுக- கூறுவதற்குக் காரணம்யாது?

### அரசாங்கம் -பாஷை -பகுதி

'அரசாங்க பாஷைப் பகுதி' என்பதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துப் பார்த்தால் என்ன வரும்? 'அரசாங்கம்— "Government; பாஷை-Speech;பகுதி-portion, part." ("Goverment-Speech -portion") எனவே வரும். அது,"Official Language Department" அல்லவே. அதனுலேதான், மொழி பெயர்க்கத் தெரிந்தவர்கள் "Official- அரச கருமத்துக்குரிய, அரசகரும" என மொழிபெயர்த்துக்கொண்டார்கள். ஆங்கில மொழியையும் அச்சொல்லின் பொருளையும் திட்பமாகவும் தெளிவாகவும் உணர்ந்துகொள்ளும் ஆற்றலற்றவர்கள் மொழிபெயர்த்தும் மீளவாய்ந்தும் கொண்டார்கள் என்பது துலக்கமாகத் தெரிகின்றது. அப்படிப்பட்டவர்கள் பிற திணைக்களங்கள் செய்கின்ற மொழிபெயர்ப்புக்களை ஆய்வதும், ஏற்றுக்கொள்ளுமாறு சிபார்சு செய்வதும் விந்தையாகத் தோற்றுகின்றது.

'பாஷை' என்ற சொல் சமஸ்கிருதச் சொல்லாகும். 'மொழி' என்பது அதன் பொருளாக ஒரு காலத்திற் கருதப்பட்டாலும், 'மிலேச்சக் குறி' என்பதும், 'மிருகங்கள் வியவற்றின் ஒலிக்குறி' என்பதுமே உண்மைப் பொருளாகப் போர்த்துக்கேயர் வருகையின் பின் கருதப்பட்டு வந்திருக்கிறது. உவிஞ்சிலோ இதனைத் தெளிவுபடுத்திவிட்டு, 'சபதம்' எனவும் ஒரு பொருள் காட்டி, "A conditional curse, in which a person binds himself., by oath, to wreak vengence on his foe, என விளக்கிக் காட்டுவார். அவர் வாழ்ந்த காலத்திலே 'பாஷை' என்னும் சொல் பொருள் இழந்துவிட்டது என்பதனை, அவர் காட்டுகின்ற 'பாஷைக்காரர்-Europeans, chiefly Englishmen' என்னும் விளக்கம் தெளிவுபெறக் காட்டுகின்றது.

### விசாரணை வேண்டும்

உவிஞ்சிலோ காட்டுகின்றது போல 'பாஷாந்தரமாக்க -பாஷாந்தரப்படுத்த' 'to translate into another language' ...... என்பதை எடுத்தாண்டால், 'மொழிபெயர்ப்பு' என்பதன் பொருளீட்டமும் செம்மையும் இல்லாமலிருப்பதை ஏதோ வகையில் உணர்ந்தவர்கள் மேலும் தவறிழைக்காமலிருந்ததே 'பாஷை' என்பது தவறுன வழக்கு என்பதைக் காட்டும்.

'பாஷை' என்னும் சொல்லின் பொருள் உண்மையில் 'பேச்சு - Speech' எனலாம். பாஷை வேறு. மொழி வேறு. ஐரோப்பிய மக்களைப் 'பாஷைக்காரர்' என உவிஞ்சிலோ காட்டும் வழக்கே இதற்கு அரிய சான்றுகும்.

ஏறக்குறைய பத்து ஆண்டுகளாக, 'அரசகரும மொழித் திணைக்களம்' என வழங்கி, அத் திணைக்களத்திலிருந்து வெளிவந்த நூற்றுக்கணக்கான நூல்களிலெல்லாம் எடுத்தாளப்பட்ட ஒரு பெயரை [illegible] சொல்வதற்கு [illegible] பாயவித்தனப் பார்க்க வேண்டும்.தேசிய அரசாங்கம் செய்து வரும் முயற்சிகளை மறைத்து ஒரே குழப்பம் விளைவிக்க வேண்டும் எனச் செய்யப்பட்டு வரும் சதி எனவே இதனைக் கொள்ளுதல் வேண்டும். அக் காலத்திலே சிறப்பாணையாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்த திரு. இ. சே. செனவிரத்தின அவர்களின் ஆணையின்படி, பற்பல குழுக்களால் ஆயப்பட்ட பின், நிரந்தரச் செயலாளர்களான திரு. ம. சிறீகாந்தா, திரு. கு. பாலசிங்கம், பதிற்சட்டவறிஞர்நாயகமாயிருந்த திரு. மு. திருச்செல்வம், திருவாளர்கள். த. ஆ. வயித்தியலிங்கம், ஆ. த. மூர்த்தி, பண்டிதர். அ. பெரியதம்பி, பேராசிரியர் கலாநிதி க. கணபதிப்பிள்ளை ஆகியோரைக் கொண்ட சிறப்புக் குழுவினுலும் மீளவாயப்பட்ட 'அரசகருமச் சொற்றெருதி'யிலுள்ள சொற்களைத் தம் மனம்போனபடி மாற்றுவதற்குத் தகுதி வாய்த்தவர்-அதிகாரம் பெற்றவர் - யார் என்பதே தெரியவில்லை.

'இலாகா, துறை, பகுதி என வழங்கி வந்த- பொருத்தமற்ற - சொற்களை நீக்கிவிட்டு, பழந்தமிழ்க் கல்வெட்டுகளில் வழங்கிவந்ததான 'திணைக்களம்' என்ற சொல்லினை விதித்து-அரசாங்கமே ஒரு சொற்றெருதியினை வெளியிட்டிருப்ப-அதனை நோக்காமல், 'பகுதி' என மீண்டும் எழுதிக் குழப்பம் விளைவிப்பவர் யார்? அவரை உடனடியாகப் பதவியிலிருந்து நிறுத்தி வைத்து-பகிரங்க விசாரணை நடாத்த வேண்டும் எனத் தமிழ் மக்கள் கேட்பது நியாயமானதேயாகும். அப்போதுதான், தேசிய அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு முட்டுக்கட்டைபோட்டுச் சதி செய்து வருவோர் ஒவ்வொருவராக அகப்படுவார்கள். முன்னதாகவே மொழிபெயர்க்கப்பட்டு மீளவாயப்பட்டு அச்சேற்றப்படும் நிலையிலேயே அலுவலகத்திலிருந்த அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பிரமாணங்கள், நடைமுறைக் கைநூல் ஆகியவற்றின் மொழிபெயர்ப்புப் பிரதிகள் எங்கே போயின என்பதும் தெளிவாகப் புலப்பட்டுவிடும்.

வளவன்

வியாபாரத்திற்கழகு விளம்பரம் செய்தல்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடிகர்கள் பொறுப்புணர்ச்சியற்றவர்களா?

## சிவாஜி கணேசன் தரும் விளக்கம்

"நடிகர்கள், தயாரிப்பாளர்களுடன் ஒத்துழைக்காமல் பொறுப்பில்லாமல் நடப்பதாக ஒரு தப்பான அபிப்பிராயம் பரவியுள்ளது. இந்த குற்றச்சாட்டுக்கு துளியும் ஆதாரம் கிடையாது. ஒரு தயாரிப்பாளருக்கு உதவினுல் இன்னெரு படத் தயாரிப்பாளர் பாதிக்கப்படத்தான் நேரும். பாதிக்கப்படும்போது சிலர் குறை கூறுவார்கள். லாபம் அடையும்போது யாரும் கூப்பிட்டு சொல்லமாட்டார்கள். இது மனித இயல்பு. இதைப் பற்றி நாம் பெரிதாக எண்ணக் கூடாது. நம் மனதுக்கு விரோதமில்லாமல் பணியாற்றினுல் போதும்—நாம் பொறுப்போடு இருக்கலாம்'' இவ்வாறு நடிகர் திலகம் சிவாஜிகணேசன் அளித்த பேட்டியொன்றில் தெரிவித்தார்.



அவர் தமது பேட்டியில் மேலும் கூறியதாவது:-

''காலை 7 மணிக்கு படப்பிடிப்பு என்ருல் 10 மணிக்கு வருவது பொறுப்பில்லாத செயல்தான். மாலை 3 மணிக்கு படப்பிடிப்பு என்ருல் இரவு 7 மணிக்கு வருவது கண்டிக்கத்தக்க செயல்தான். ஆனுல் என்னைப்பொறுத்தவரை குறிப்பிட்ட நேரத்துக்கு முன்பே 'மேக்கப்' புடன் படப்பிடிப்பு நிலையத்துக்கு செல்கிறேன்——சிலவேளைகளில் நான்சென்ற பிறகுதான் தயாரிப்பாளர்கள், டைரக்டர்கள் செட்டுக்கு வருகிருர்கள். இருந்தாலும் நான் என் பணியை செவ்வனே செய்கிறேன். மற்றக் கலைஞர்களும் மோசமாகநடப்பதாகச்சொல்வதற்கில்லை!

''இந்த நிலையில் நடிகர்கள் தயாரிப்பாளர்களுடன் ஒத்துழைப்பதில்லையென்பதில் எந்த ஆதாரமுமில்லை. சமீபத்தில் கற தன் கருணை படப்பிடிப்பில் கலந்துகொண்டேன். எனக்கு அப்போது உடல் நலம் இல்லை. பத்து நாட்கள் டைபாய்ட் ஜுரத்தில் வாடிவிட்டு படப்பிடிப்புக்கு சென்றேன். வண்ணப்படம் ஆதலால், எரிக்கும் நெருப்புபோல உள்ள விளக்குகளின் முன்னே நின்று வேலைசெய்தேன்.

''இந்தக்காட்சிஏற்கெனவே படமாக்கப்பட்டிருந்தது. லாபரட்டரியில் ஏற்பட்ட குறைபாட்டால் மீண்டும் படமாக்கினுர்கள். இம்மாதிரி பலகாட்சிகள் மீண்டும் மீண்டும் படமாக்கவேண்டிய நிலை ஏற்படுகிறது. இதனுல் இப்படத்தை அடுத்து வெளிவரவேண்டிய படங்களுக்கு நான் அளித்த கால்ஷீட்டுகள் நஷ்டமாயின. அந்தப்படங்கள் சில தினங்கள் தள்ளி வெளிவரும்,

''நடிகர்களின் கடமைகுறிப்பிட்ட நேரத்தில் படப்பிடிப்பில் கலந்துகொள்வது, கொடுத்த பாத்திரத்தைகுறைவின்றி இயக்குனரின் எண்ணம் போலநடிப்பது, இவைதான்!''



இப்பொழுது சினிமாஸ் திரைகளில் காட்சியளித்துக் கொண்டிருக்கும் 'தாயின் மடியில்' படத்தில் கன்னடத்துப் பைங்கிளி.

# "தூக்கில் தொங்கினேன்"

**எம். ஜி. ஆர். எழுதும் தொடர் கட்டுரை (4)**

நான் (கதாநாயகன்) தற்கொலை செய்துகொள்ள மேடைமீது ஏறி நிற்கிறேன்.

டைரக்டரும் கேமராமேனும் முடிவெடுத்தார்கள். அதாவது, ஒரே 'ஷாட்டில்' நான் கயிற்றை மாட்டிக்கொள்வதும், என் காலடியில் இருக்கும் பலகையைத் திறக்கச் செய்வதற்காக என் கைகளுக்குப் பக்கத்திலிருக்கும் கைப்பிடியை இழுப்பதும், காலுக்கு அடியிலுள்ள பலகை திறந்து விடுவதால் நான் கயிற்றில் தொங்கும்படியாவதும், அதே சமயம் என் கனத்தைத் தாங்காமல் உத்திரம் உடைந்து கீழே விழுவதும், இப்படியாக நல்ல முறையிலே எல்லாவற்றையும் இணைத்து எடுத்துவிடக் கருதினுர்கள்.

'உங்களால் முடியுமா?' என்று என்னைக் கேட்டார்கள்.

நான் எப்படி முடியாது என்று சொல்வேன்?

முடியாது என்றுதான் சொல்லவே கூடாதே!

வேடம் ஒருவேளை மாற்றப்பட்டுவிட்டால்?

என் ஆசைக் கனவுகள் என்ன ஆகும்!

எதற்கும் சொல்வதுபோல் இதற்கும் சொல்லிவிட்டேன், முடியுமென்று.

மேடைமீது ஏறினேன், என் காலுக்குக் கீழேயுள்ள பலகையை இழுப்பவர்கள் கேமராவுக்குத் தெரியாமல் மறைந்தபடி தயார்ராக இருந்தார்கள்.

மேலே உத்தரத்தை உடைத்துப் பொருத்தி அது தெரியாமலிருப்பதற்காக துணி முதலியவற்ருல் மறைத்திருந்தார்கள்.

நான் கழுத்திலே கயிற்றை மாட்டிக்கொண்டேன்.

அந்தக் கயிற்றிலே இருந்த சுருக்கு, கழுத்தை நெரித்துவிடாமல் இருப்பதற்காக, சுருக்கு முடி போடாமல், நன்ருக வட்டமாகக் கட்டி முடிச்சிட்டு அது சுருங்காத அளவுக்கு மிக எச்சரிக்கையோடு வைத்திருந்தார்கள்.

கழுத்திலே மாட்டிக்கொண்டதும், 'ஆக்ஷன்' என்ருர்கள்.

கைப்பிடியை இழுத்தேன், கீழேயிருந்த பலகையையும் இழுத்துத் திறந்துவிட்டார்கள்.

அவ்வளவுதான்; நான் தூக்கிலே தொங்கினேன்.

தூக்குக் கயிற்ருல் கட்டப்பட்ட, என் தலைக்கு மேலுள்ள



உத்திரம் உடைந்து, நான், திறந்துவிட்டிருக்கும் கீழ்ப் பள்ளத்திற்குள் போய்ச் சேர வேண்டும். எனக்கு அடிபடாமல் இருப்பதற்காகக் கீழே நார் மெத்தையும் போட்டிருந்தார்கள். எந்த அளவுக்கு எனக்கு உதவி செய்ய முடியுமோ; என்ன பாதுகாப்புத் தரமுடியுமோ அத்தனையும் செய்துதான் இருந்தார்கள்.

உத்திரத்திலிருந்து கட்டித் தொங்கவிடப்பட்டிருந்த கயிறு, என் கைகளால் [illegible] இழுக்கப்படுவதல் [illegible] கழுத்துச் சுருக்கினுலேயே [illegible] டவேண்டும். அடியிலிருந்த பலகை நீக்கப்பட்டுவிட்டதால், கீழே பிடிமானமே இல்லாமல் என் உடல் அந்தரத்தில் தொங்கிற்று.

இந்த நிலைஒரு விநாடிதான்! நான் பலகையில் காலூன்றி நின்றுகொண்டிருந்த போது கழுத்திலே இடைவெளியோடு மாட்டப்பட்டிருந்த கயிறு, பலகை, இழுக்கப்பட்டதனுல், என் உடல் கீழ் நோக்கி விழுந்த காரணத்தால், மேலே என் கழுத்தில் இடை வெளியோடு இருந்த கயிறு கழுத்தை நெருக்கி மேலே இழுத்தது. என் கழுத்தின் குரல்வளை மேல் நோக்கி இழுக்க, உன் உடல் கனம் கீழ் நோக்கி இழுக்க......

அந்த ஒரு விநாடியில் என் கழுத்திலே ஒரு திருப்பம் ஏற்பட்டது. வலது பக்கம் நோக்கி என் கழுத்து எப்படியோ திரும்பிற்று.

அந்த ஒரு விஞடிக்குள் ஓர் அதிர்ச்சி!

தலையிலே திடீரென்று ரத்தம் ஏறியது போன்றது ஓர் உணர்வு.

நெஞ்சிலே ஒரு வலி.

இவ்வளவு ஏற்பட்டதும் ஒரு விநாடி கூட இருக்காது என்று தான் சொல்ல வேண்டும்.

உத்திரம் உடைந்து கீழே விழுந்தேன்!

என்னுடைய சுய உணர்வற்ற நிலையில், தலை குனிந்து முன்புறம் சாய்ந்துவிட்ட காரணத்தால், மேலேயிருந்து உடைந்து விழுந்த கட்டைகள் என் முதுகிலே விழுந்தன.

படப்பிடிப்பிலே இருந்தவர்கள் எல்லோரும் ஓடி வந்தார்கள், அக்கரையோடும் அனுதாபத்தோடும்!

அப்போதும் என்னுடைய நினைப்பு அத்தனையும் நான் இந்தக் காட்சியில் நடிப்பதற்குத் தகுதியற்றவன் என்று யாரும் சொல்லிவிடக்கூடாதே என்பதில்தான் மேலோங்கியிருந்தது.

நண்பர் நம்பியார் என்ன நினைத்தாரோ, சிறிது நேரத்திற்குள் குடிப்பதற்கு தண்ணீர் கொண்டுவந்து கொடுத்தார்.

என்னுடைய கதாநாயகன் வேடம் முதல் படத்திலேயே என்னைத் தற்கொலைக்குத் [illegible]

அன்று [illegible] கவனக்குறைவோடு இருந்திருந்தால், முதல் கதாநாயகன் வேடமேற்ற படத்திலேயே, நான் தற்கொலை செய்துகொண்ட கதாநாயகனுக, என் வாழ்க்கைப் பாதை முடிவடைந்திருக்கும்.

என் ஆசைக் கனவுகள்—ஆளே இல்லையென்ருல் ஆசை ஏது? கனவு ஏது?

ஒட்டிவைக்கப்பட்டிருந்த மரத்துண்டு (உத்திரம்) ஒரு இரண்டு மூன்று நிமிஷங்கள் உடைபடாமல் இருந்திருந்தால்—? அதைப்பற்றி இப்போது எண்ணவேண்டாம்!

ஆனுல், ஒன்றை மட்டும் எண்ணுங்கள்!

நடிகனின் வாழ்க்கை எப்பேர்ப்பட்ட கத்திமுனையில் நடைபோடுகிறது என்பதை மட்டும் எண்ணிப்பாருங்கள்!

மாறுபட்ட கற்பனைகளில் எடைபோட்டுப்பார்க்கும் உள்ளங்களில் நடிகர்களின் நிலை பற்றிய உண்மை இது தான் என்பது எதிரொலி செய்யட்டும்!

ஒவ்வொரு கணமும் இந்தப் பணியில் அந்த நடிகன் ஏற்கும் பலவகையான சுமைகளை அன்புக் கண்ணுல் சற்றேனும் பார்த்து உண்மையை உணரட்டும்!

# இசை மழை பொழிந்தது

நீண்டநாட்களாக வான் மழையின்றிவரண்டு கிடக்கும் கொழும்பு மாநகரில் இம்மாதம் 2ம் திகதி கான மழை பொழிந்து வரண்ட உள்ளங்களுக்கு குளிர்ச்சியைக் கொடுத்தது. இது கொழும்பில் பொழிந்த இரண்டாவது கானமழையாகும். இக் கான மழையைப் பொழிந்தவர் ஸ்ரீ தியாகராஜ கான சமாசத்தின் அழைப்பின்பேரில் ஈழம் வந்திருந்த தமிழகத்தின் தலைசிறந்த இசைமேதைகளில் ஒருவரானஸ்ரீபாலமுரளிகிருஷ்ணு கானமழை பொழியப்பட்ட இடம் பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபம்.

கர்நாடக சங்கீதம்' என்ருல் காததூரம் ஓடுபவர்களும் நின்று இரசிக்கும்படியாகப் பாடக்கூடியவர்கள் வெகு சிலரே. அந்தவெகுசிலரில்குறிப்பிடக்கூடியவர் ஸ்ரீ பாலமுரளி கிருஷ்ணு. எவரையும் கவர்ந்திழுக்கும் சாரீர சம்பத்தும் இளம் வயதிலேயே முதிர்ந்த இசைஞானமும் வாய்க்கப் பெற்ற ஸ்ரீ கிருஷ்ணு இசைத் துறையில் புதிய கண்டுபிடிப்புக்களைச் செய்து வருவதோடு குருசிட முறையில் முறையாக இசைபயின்றவர். அவரது தந்தையாரும் ஒருசிறந்தபுல்லாங்குழல் வித்வானுக விளங்கியவர் என்ருல் ஸ்ரீ கிருஷ்ணுவின் திறமைக்கு கேட்கவும் வேண்டுமா?

சரியாக மாலை 6-45 மணிக்கு இரசிகர்களின் பலத்த கரவொலிகளுக்கிடையே ஸ்ரீ கிருஷ்ணு மேடையில் தோன்றினுர். இரசிகர்களுக்குஒரு வணக்கம்; ஒருபுன்சிரிப்பு; அடுத்தகணம் இசைமழை பொழியத்தொடங்கியது. 'மகாதேவ சுரா' என்ற தியாகராஜ சுவாமிகள் கீர்த்தனையுடன் கச்சேரி ஆரம்பமாயிற்று. ஸ்ரீ கிருஷ்ணுவின் இசையோடு ஒன்றி விண்ணுலகில் பறந்தும் மண்ணுலகில் நடந்தும், பாதாளத்தில்பதுங்கியும் மயங்கி நின்ற[illegible]ர்கள், 'இனி அமைச்சர் சு[illegible]தாசவினுல் ஸ்ரீ கிருஷ்ணுவுக்கு பொன்னுடை போர்த்தி கௌரவ பட்டமும் வழங்கப்படும்'' என்ற அறிவிப்பின் பின்னரே சுயநிலைக்கு வந்தார்கள்.

ஸ்ரீ பால முரளி கிருஷ்ணுவுக்கு இலங்கை தியாகராஜ கானசபாவின் சார்பில் 'கந்தர்வ கான வித்தகர்' என்ற பட்டம் வழங்கப்பட்டது. இப்பட்டத்தை அமைச்சர் திரு. சுகததாச வழங்கியதுடன் பொன்னுடையும் போர்த்தினுர்.

இதன் பின் 'தினபதி' ஆசிரியர் எஸ். டி. சிவநாயகம் பேசினுர். அவர் தமது பேச்சில் இந்திய கலைஞர்கள் அடிக்கடி ஈழம்வர வேண்டியதன் அவசியத்தை விளக்கினுர், அப்போது எனக்குப்பின்னுல் இருந்த ஒருவர் மற்றவருக்கு கூறியது கா[illegible] விழுந்தது. அவர்சொன்னது இதுதான்!

''சுயாதினப் பத்திரிகை சமாஜம் வெளியிடும் சிங்களப் பத்திரிகைகள் தமிழகத்திலிருந்து கலைஞர்கள் வருவதை கட்டுப்படுத்தவேண்டுமென்று ஓயாமல் எழுதிவருகின்றன. அதே பத்திரிகை நிறுவனத்தைச் சேர்ந்த தமிழ்ப்பத்திரிகையின் ஆசிரியர் இங்கு இப்படிச் சொல்கிருர். சிங்கள மக்களையும் தமிழ்மக்களையும் ஒரு சேர ஏமாற்றும் திட்டமா இது?''

இதையடுத்து தியாகராஜ சுவாமிகளின் வாழ்க்கையிலிருந்து சில நிகழ்ச்சிகளை எடுத்து விளக்கும் ஓரங்கநாடகம் நடைபெற்றது. இந்த நாடகத்தில் (இது நாடகமே அல்ல) ஸ்ரீ கிருஷ்ணு தியாகராஜ சுவாமியாக நடித்தார். இதையும் ஒருஇசைநிகழ்ச்சிஎன்றேசொல்லாம்.

ஸ்ரீ பால முரளி கிருஷ்ணு ஈழத்தில் ஒரு சில கச்சேரிகள் மட்டுமே செய்த போதிலும் அவர் இங்குள்ள இசைஇரசிகர்களின் நெஞ்சில் நீங்காத இடத்தைப் பிடித்துக் கொண்டுவிட்டார்.

—எஸ். ஆர். எம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரைவாணன் பதில்கள்

என். யோகராஜா,
விரமுனை.

கே: உன்னைப்போல் ஒருவன் படத்தில் கதாநாயகனாகவும், கதாநாயகியாகவும் நடித்தவர்கள் யாவர்?

ப: கதாநாயகி: ஆர். காந்திமதி, கதாநாயகன் உதயம் என்ற 12 வயதுச் சிறுவன்!

ஃ

கே. இளங்கோ,
சாவகச்சேரி.

கே: நமது நடிகமேதை சிவாஜிகணேசன் ஐந்துவேடத்தில் நடிக்கும் புராணப்படமாகிய திருவருட் செல்வர் வெற்றிப்படமாக அமையுமா?

ப: நான் என்ன சோதிடனா?

ஃ

க. மனோகரன்,
இறந்தோட்டை.

கே: முன்பு கூறப்பட்டபடி எம். ஜி. ஆர். சுவிட்சர்லாந்துக்கு அல்லது ரஷ்யாவுக்குச் செல்வாரா? எப்போது?

ப: எம். ஜி. ஆர். சுடப்படுவதற்கு முன்னர் ரஷியாவுக்கு விஜயம் செய்யும்படி அவருக்கு அழைப்புக் கிடைத்திருந்தது. ஏப்ரல் மாதத்தில் போகவிருந்தார். இனி எப்பொழுது போவார்என்பதை இன்றுள்ள சூழ்நிலையில் சொல்ல முடியாது!

ஃ

தேவநேசன்,
மல்லாகம்.

கே: நடிகர்திலகம் சிவாஜி கணேசன் சிறந்த நடிகர் என்கிறேன் நான். என் நண்பர்இதை மறுக்கிறார். உங்கள் பதில் என்ன?

ப: [illegible]வருக்கும் கருத்துச் சுதந்[illegible]ரம் உண்டு.

ஃ

எம். எம். அபூபக்கர்,
மன்னார்.

கே: சினிமாவில் நடிப்பதற்கு வேண்டியது எது? வேண்டாதது எது?

ப: ஆணுக்கா, பெண்ணுக்கா? முதலில் அதைச் சொல்லுங்கள்!

ஃ

எம். ஞானசிகாமணி,
பருத்தித்துறை.

கே: இலங்கையில் இருந்து நவாலியைச் சேர்ந்த எஸ். அருமைநாயகம் இந்தியா சென்று டைரக்சன்பழகிவந்தாரே அவர் இப்பொழுது என்ன செய்து கொண்டு இருக்கின்றார்?

ப: தனது திறமையைக் காட்ட சந்தர்ப்பத்தை எதிர் நோக்கிக் கொண்டிருக்கின்றார்.

ஃ

வே. பத்மகாந்தன்,
நல்லூர் வடக்கு.

கே: சிவாஜிகணேசன் தேர்தல் பிரசாரம் செய்த தொகுதிகளில் அவருடைய அபிமானக் கட்சிதோல்வி அடைந்துள்ளதே! பாவம், சிவாஜிஇனிமேல் எந்தக் கட்சிக்குத் தாவுவார்?

ப: கலைஞனுக்கு கட்சி தேவையில்லை என்ற அவரது பழைய பல்லவியை பாடக் கூடும்!

ஃ

கே: நடிகை கே. ஆர். விஜயாவின் வருங்காலம் எப்படி இருக்கும்?



ப: நன்றாக இருக்கும். நல்ல நடிப்பாற்றல் கொண்ட விஜயா, விரைவில் பத்மினி, சாவித்திரி முதலியோர் முன்பு பிடித்திருந்த இடத்தைநிரப்பி விடுவார் என்று எதிர்பார்க்கலாம்.

ஃ

எம். எல். ஹசன்,
ஏறாவூர்.

கே: எஸ். எஸ். ஆருடைய முதல்படம் எது?

ப: பராசக்தி.

கே: நாகேஷ் இதுவரை எத்தனை படங்களில் நடித்துள்ளார்?

ப: 110 படங்களில்.

கே: புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். இதுவரை எத்தனை படங்களில் நடித்துள்ளார்?

ப: 'தாய்க்குத் தலைமகன்' அவரது 95 வது படம்.

கே: எம். ஜி. ஆர். பத்து வேடங்களில் நடிக்க விருக்கும் தேவருடைய படத்தின் பெயர் என்ன?

ப: பெயர் இன்னும் வைக்கப்படவில்லை!

ஃ

வி. விஜயா
கொஸ்லந்தை

கே: பிறந்த இடத்தை விட புகுந்த இடத்தை மதித்து வாழும் நடிகர் யார்?

ப: எம். ஜீ. ஆரை நினைந்துக்கொண்டு தானே இக்கேள்வியைக் கேட்டிருக்கிறீர்கள்? தம்மை வாழ வைத்த தமிழ் நாட்டுக்காக உள்ளன்போடு பாடுபடும் மக்கள் திலகத்துக்கு தாம் பிறந்த நாடாகிய ஈழத்திலும் தணியாத ஆசையுண்டு.

ஃ

வ. குணபாலசிங்கம்
நல்லூர்

கே: எம்.ஜி. ஆர். நடித்து வெளிவந்த 'ஆயிரத்தில் ஒருவன், படகோட்டி ஆகிய இரண்டு படங்களும் இந்தியாவில் 100 நாட்கள் ஓடியதா?

ப: 'ஆயிரத்தில் ஒருவன் மட்டும் 100 நாட்களுக்கு மேல் ஓடியது.

ஆர். பாலகிருஷ்ணன்,
மாத்தளை.

கே: கலைக்குரிசில் சிவாஜி கணேசன் நடித்த படங்களில் உங்களை மிகவும் கவர்ந்த படமெது?

ப: சிவாஜியை மிகவும் கவர்ந்தபடம் எதுவோ அந்தப்படம்தான் என்னையும் கவர்ந்தது.

ஃ

எஸ். எம். யூசுப்,
இலந்தைமோட்டை.

கே: அதிக மக்களால் போற்றப்படும் தமிழ் நடிகர் யார்?

ப: மக்கள் திலகம்தான். உண்மையாகவே தெரியாமற்தான் இக்கேள்வியைக் கேட்டிருக்கிறீர்களா?

கே: எம். ஜி. ஆர்., வி. என். ஜானகியை திருமணம் செய்தது எந்த ஆண்டு?

ப: 1949ம் ஆண்டு.

ஃ

எஸ். சிவசேகரம்,
யாழ்ப்பாணம்.

கே: மக்கள் திலகம் எம். ஜி. ஆரின் விலாசம் என்ன?

ப: எம். ஜி. ஆர். தோட்டம், ராமாவரம், சென்னை.

கே: எனது நண்பர் ஒருவர் இந்தியாவுக்கு சென்று படங்களில் நடிக்க விரும்புகிறார். அவர் எம். ஜி. ஆருக்கு எழுதினால் ஒரு செலவுமில்லாமல் அங்கே வரவழைத்து படத்தில் நடிக்க எம். ஜி. ஆர். உதவி செய்வாரா?

ப: என்ன இருந்தாலும் உமது நண்பருக்கு பேராசை கூடாது!

ஃ

நாகராசா,
தாழங்குடா.

கே: எம். ஜி. ஆரைப்போல சிவாஜியால் மக்கள் அன்பை பெற முடியுமா?

ப: பிரச்சினைக்குரிய இந்தக் கேள்வியைப் போட்டு என்னையும் சிவாஜியையும் பிரித்து விடத் திட்டம் போடுகிறீர்களா?



சிலோன் தியேட்டர்ஸ் திரைகளில் இப்பொழுது காட்சி தரும் 'கொடிமலர்' படத்தில் ஏ. வி. எம். ராஜன், காஞ்சனா

திரைவாணன்,
சுதந்திரன் கலைப்பூஞ்சோலை
த. பெ. இல. 1183.
கொழும்பு.

# சினிமாவும் கவர்ச்சியும்

"நைன்டீன் சிக்ஸ்டி சிக்ஸ்லே ரிலீஸான படங்களிலேஎதுசார் சக்ஸஸ்? என்றார் புரொடியூசர் ஒருவர்.

"'ஸிக்ஸ்டி சிக்ஸ் செக்ஸ் ஷோ சக்செஸ்'! என்றார் அவரது நண்பர்.

அவர் குறிப்பிட்டது வோர்ல்டு பை நைட், பாரீஸ் பை நைட், டோக்கியோ பை நைட், ஸ்வீட் ஸ்விட் நைட் என்று மக்களின் பால் உணர்ச்சியைக் கிளறிக் கவரும் இனக் கவர்ச்சிப் படங்களைத்தான்! அது ஓரளவு.........என்? முழுக்க முழுக்க உண்மைதான். என்றாலும், தமிழக ரசிகர்கள் அனைவரையும் அந்தபடங்கள்கவர்ந்துள்ளனவாஎன்று ஆராய்ந்தால் அப்படிச் சொல்வதற்கில்லை.

ஆனாலும் இளம் உள்ளங்களையும், தொழில் நுணுக்கத்தில் புதுமையினை அறியும் அவாவுடையவர்களையும், கலைத்துறையில் ஈடுபாடு கொண்டவர்களையும் அவைகள் முழுக்க முழுக்க ஒரு முறையல்ல, பலமுறை காணும் படி கவர்ந்துவிட்டன என்பதைத் தியேட்டர் வாசல்களில் நிற்கும் 'க்யூ' வைக் கொண்டே அறியலாம்.

அதை மனதிற்கொண்ட சில தயாரிப்பாளர்கள், குடும்பக் கதையை விட்டு விட்டு கேளிக்கையும், விரசமும் விரவும், மர்மக் கதைகளைத் தயாரிப்பதில் ஈடுபட்டு ஒரு சிலர் வெற்றியும் பெற்றுள்ளனர்.

கலை வளர்ச்சிக்கு கவர்ச்சி அவசியம். ஆனால் அந்தக் கவர்ச்சி, உணவுக்குத் தேவையான உப்பைப் போலிருக்கவேண்டும் என்பதுதான் எனது கருத்து.

உப்பில்லாத பண்டம் 'சப்' என்றுதான் இருக்கும். அது தான் ருசியையேதருகிறது. அதற்காக உப்பை அள்ளிக் கொட்டினால் நமது பண்பாடு என்னும் உணவு சுவையாக இருக்குமா?

"நெஞ்சில் ஓர் ஆலயம், என்னை உங்களுக்கு நன்கு அறிமுகமாக்கிய வெற்றிப் படம்.

அதன்வெற்றிகவர்ச்சியை அடிப்படையாகக் கொண்டதா?

கல்யாணப்பரிசு, பாசமலர், [illegible] தெய்வத்தாய் போன்ற கலைநயம், கலைமயம் கொண்ட படங்களைவிரும்பி ரசித்த நமது பண்பான சில ரசிகர்களை வேறுதிக்கில் திருப்பிவிட்டது சில 'நைட்' படங்கள் தான்!

படத் தயாரிப்[illegible]ளர்கள் வெறும்தத்துவபோ[illegible]கர்கள் மட்டுமல்லஅவர்களதுதயாரிப்பில் நல்ல கருத்துக்களை தரும் உயர்ந்த நோக்கங்கள் இருந்தாலும், வருலுக்காகவே அவர்கள் நகரில் ஓடும் இதர இனக்கவர்ச்சிப் படங்களைப்போல் தன் படத்திலும் சிலகாட்சிகளை சேர்க்க வேண்டிய நிர்ப்பந்தநிலைக்கு வந்துவிடுகிறார்கள்.



## முத்துராமன்

அப்போது அவரது தயாரிப்பைக் குறைகூறுகிறோம் கூசாமல். ஆனால், அந்த நிலைக்கு அவர் வரக் காரணம் யார்? புலவு தின்பவர்கள் ஆட்டைக்கொல்லுவது அநீதி என்று சொல்வது போல்தான் அதுவும்.

பாகப் பிரிவினை போல குடும்பக் கதை, கப்பலோட்டிய தமிழன் போன்ற தியாகிகளின் வரலாற்றுக்கதை சமுதாயத்திற்கு நல்ல கருத்துக்களை தரும் லட்சியக் கதைகள் இனி வருங்காலத்தில் வராமல் எல்லாமே ஜேம்ஸ் பாண்ட் பாணியில்தான் படங்கள் வருமா? என்று எண்ணினால் அது தவறு. ஒவ்வொரு சமயமும் ஒவ்வொரு ஸீஸன்! அதுமாறிக் கொண்டேதான்வரும்

புராணக் கதைகளிலிருந்து சரித்திரக் கதைகள், நாவல்கள், குடும்பக்கதைகள், மர்மக் கதைகள், கவர்ச்சிக் கதைகள் என்று மாறி மாறி வந்துஇப்போது மீண்டும் புராணக் கதைகளும் வெற்றிகரமாக ஓடும் என்ற நிலையும் வருகிறது. எனவே எப்போதும், எல்லாவற்றையும் ஒரேமாதிரி எடுத்து ஒன்றில் தான் வெற்றி வரும் என்று எதிர்பாராமல் மாறி மாறி பல சுவை கலந்து பயனுள்ள முறையில் தயாரித்து பலன் அடைந்தால் நல்லது என்பது என் சொந்தக் கருத்து.



'கந்தன் கருணையில்' பார்வதியாக சாவித்திரியும் சிவனாக ஜெமினியும் நடித்திருக்கிறார்கள்.



விரைவில் சிலோன் என்டர்டெயின்மென்ட்ஸ் திரைகளுக்கு வரவிருக்கும் ஏ. எல். எஸ்ஸின் வெற்றிப்படமான 'கந்தன் கருணை'யில் முருகனாக சிவகுமாரும், தெய்வயானையாக கே. ஆர். விஜயாவும் தோன்றும் காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை இலுமனைட் உற்பத்தி

இலங்கைத் திருநாட்டில் பொருளாதார உற்பத்திக்கும் விஞ்ஞான ஆக்கத் துறைகளுக்கும் ஏற்ற தான மூலப்பொருட்கள் இல்லையே என்று கவலைப்படுவோர் அனேகர். ஆனல், இலங்கையிலும் தனிமப் பொருட்கள் உண்டு என்று பறைசாற்றுவதுபோல் புல்மோட்டைப் பகுதியிலுள்ள இலுமனைட் என்ற இரசாயனப் பொருள் விளங்குகிறது. ஒவ்வொரு வருடமும் இலங்கையிலிருந்து அதிகளவு இலுமனைட் ஜப்பானுக்கு ஏற்றுமதியாகிறது.

இலங்கையில் இலுமனைட் தொழிற்சாலை 1958ல் புல்மோட்டைப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டது. தேசிய கைத்தொழிற் கூட்டுத்தாபனத்தினர் இப்பிரதேசத்தைக் கண்டுபிடித்து ஓர் சிறந்த கைத்தொழிற் பிரதேசமாக்கியுள்ளனர். இந்த இலுமனைட்டிலிருந்து பின்வரும் பொருட்கள் செய்யப்படுகின்றன. அவையாவன:-

1. டிட்டாலியம் ஈரொக்சைட்டு.
2. கிறமிக்.
3. எனுமல் உதிரிப்பாகங்கள்.
4. பிக்மன் இரும்பு.
5. வானிஷ்;
6. நிலவிரிப்பு.
7. சிந்தெற்றிக் துணிவகைகள் (நல்ல ரகம்)
8. இறப்பர்.
9. மை, நிலப்பூச்சுகள்.

மேற்படி பொருட்களைச் செய்வதற்கு மிகவும் உபயோகமான தனிமமாக இந்த இலுமனைட் விளங்குறது. இலங்கை அரசாங்கம் சுமார் 75 வருடங்களுக்குப் போதுமான இலுமனைட்டைப் புல்மோட்டைப் பகுதியில் எடுக்கலாம் என்று கணக்கிட்டிருக்கிறது. இந்த இலுமனைட் பிரதேசம் அரிசிமலை என்னுமிடத்திலிருந்து, கொக்கிளாய்வரையில் சுமார் நாலரை மைல்கள் தூரம் பரவியுள்ளது. இம்மூலகம் கறுப்புநிற மண போன்றது. கடற்கரையில் மண்மேடுபோற் குவிந்திருக்கும். தகுந்த காலங்களில் அகழ்ந்து எடுக்கும் எக்சவேற்றர் என்னும் கருவியின் உதவியால் அகழ்ந்து எடுக்கப்படுகிறது. அகழ்ந்து எடுக்கப்பட்ட கிடங்குகளில் கடல் மேலலைகளின் உதவியால் மீண்டும் இலுமனைட் வீழ்படிவு ஏற்படுகிறது. இந்த இலுமனைட் மீண்டும் படிந்து பெரிய திட்டுப்போற் காணப்படும். இது டிராக்டர்கள் மூலம் தொழிற்சாலைக்கு எடுத்துச் செல்லப்படுகிறது.

### மூலமும் கழிவும்

மலைபோன்ற இலுமனைட் கலந்த மண் குவியல்கள் ஒவ்வொன்றும் சுமார் 120 அடி நீளம், 12 அடி உயரம், 5 அடி அகலம் உள்ள அழகான முக்கோண வடிவமாக ஒழுங்கு படுத்தப்பட்டிருக்கும். இது கடற்கரையில் கடலுக்கு அணைக்கட்டுக் கட்டியது போல் இருக்கும். இலுமனைட் ஈழமாதாவின் இயற்கைச் செல்வம். ஒரு வருடத்தில் சுமார் 45,000 தொடக்கம் 60,000 தொன்கள்வரையில் இந்த இலுமனைட் ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதனுல் பல கோடிக்கணக்கான ரூபாய்கள் இலாபம் கிடைக்கக்கூடியதாக விருக்கிறது.

மண்குவியல்போல் முதலில் குவிக்கப்படும் இலுமனைட்டில் முழுவதும் சுத்தமான தனிமம் என்று சொல்லிவிடமுடியாது. இம்மண்ணில் ஏறக்குறைய 65 சத வீதமே இலுமனைட் காணப்படும். மற்றவை கழிவுப் பொருட்களாகும். ஆனல் இக்கழிவுப் பொருட்கள் மிகவும் உபயோகமானவை. இவை றூட்டைல், சேகோன் என இருவகைப்படும்.

இக்கழிவுப் பொருட்கள் சாதாரண இலுமனைட்டைவிடப் பன்மடங்கு விலையுள்ளன. ஆனல் இவற்றைப் பிரித்து எடுக்க வேண்டும். அதற்குச் சுத்தமான நீர் தேவை. இவ்வளவு காலமும் இலங்கையில் இக் கழிவுப் பொருட்களான றூட்டைல், சேகோன் என்பன எதற்கும் உபயோகமில்லாது கொட்டி வரப்பட்டது. ஆனல் ஆரம்ப இலுமனைட் மண்குவியலில் றூட்டைல் 10 வீதமும், சேகோன் 8வீதமும் உண்டு. இந்த றூட்டைல் என்ற பொருளிலிருந்து பின்வரும் உபயோகப்பொருட்களைச் செய்யக்கூடியதாக இருக்கிறது. அவையாவன.

1. டிட்டானியன் பவுடர்.
2. டிட்டானியன் கர்பைட் (இது வெட்டும் மூலகமாகும்)
3. சிந்தற்றெக் ஜெம்.
4. வெல்டிங் றெட்.
5. அலோயிசு.
6. தொழிற்சாலையின் அதி உஷ்ணக் கருவிகள்.
7. சத்திர சிகிச்சைக் கருவிகள்.
8. மறையன் கருவிகள்.
9. எயர் கிறாவ்ற் (விமானத்திற்கு உபயோகப்படுவது)

சேகோன் என்பதிலிருந்தும் அலோயிசு, றீவ்றக்ரறீஸ்' எரிகோடு, குருசிபிள் என்பன செய்யக்கூடியதாக இருக்கிறது. இவை மிகவும் உபயோகமான விலை உயர்ந்த பொருட்களாகும். மொத்தத்தில் இலுமனைட் தொழிற்சாலை உற்பத்திச் செலவையும், மேற்படி றூட்டைல், சேகோன் என்பன மேலதிக லாபத்தினையும் கொடுக்கக் கூடியதாக இருக்கிறது.

### இடமாற்றம்

இவ்வளவு காலமும் புல்மோட்டையில் மூலப் பொருளாகிய இலுமனைட் உள்ள பிரதேசத்திலேயே இருந்து வந்த தொழிற்சாலையைத்தற்போது அவசர அவசரமாகப் புல்மோட்டையிலிருந்து 30 மைல்கள் தூரத்திலுள்ள சினன்வாடி என்னுமிடத்திற்கு அரசாங்கம் மாற்றுவதற்கு முயற்சி எடுத்துள்ளது. தற்போது இந்த மாற்ற வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுத் துரித கதியில நடைபெற்று வருகின்றன.

**நெல்லை க. பேரன்**

நல்ல நீர் போதியளவு இல்லாத காரணமும், கப்பலில் எல்லாக் காலத்திலும் இலுமனட்டை ஏற்றுமதி செய்யக்கூடிய காரணத்தாலுமே மேற்படி இலுமைனட் தொழிற்சாலையை இடமாற்றம் செய்வதாகத் தெரிகிறது. ஆனல் புல்மோட்டைப் பகுதியிலேயே நல்ல தண்ணீரையும், ஏற்றுமதிவசதியையும் செய்து கொள்ளலாம் என்று இப்பகுதி மக்கள் கருதுகிறர்கள். அதற்கு அவர்கள் பின்வரும் காரணங்களைக் கூறுகிறர்கள்.

யான் ஓயா என்னும் வளமான ஆறு புல்மோட்டைப் பகுதியிலிருந்து நான்கு மைல்கள் தூரத்திற் றன் பாய்கிறது. இதிலிருந்து குழாய்களின் மூலமாக இந்த இலுமனைட் தொழிற்சாலைக்குத் தேவையான நீரைப் பெறுக் கொள்ளலாம். மேலும் கப்பலில் ஏற்றுமதியைச் சுலபமாக்கும் பொருட்டும், செலவைக் குறைக்கும் பொருட்டும் மின்சாரத்தால் இயங்கும் உறிஞ்சும் குழாய்களின் உதவியால் இலுமனைட்டைக் கப்பலுக்கு நேரடியாகவே ஏற்ற முடியும். இது மிகவும் செலவுச் சுருக்கமாகும். இத்தகைய வசதிகள் இருக்கும்போது தொழிற்சாலையை இடமாற்ற வேண்டிய அவசியம் இல்லை என்று புல்மோட்டைப்பகுதிமக்கள அபிப்பிராயப் படுகிறர்கள்.

மேலும் தற்போது சினன்வாடிக்கு இடமாற்றுவதால் தொழிற்சாலையைப் பகுதி பகுதியாகப் பிரிக்கும் செலவு-அதனல் ஏற்படும் சேதங்களுக்குரிய நஷ்டம், சுமார் 38 மைல் தூரத்திற்கு மூன்று நீர்ப்பாதைகளைத் தாண்டி இலுமனைட்டைக் கொண்டு செல்லும் கஷ்டம் என்பன கவனிககப்பட வேண்டியவை என்றும் அவர்கள் கூறுகிறர்கள்.

### தேவையற்ற முயற்சி

மேலும் சாதாரணமாக ஒரு நாளைய இலுமனைட் உற்பத்திக்கு 700 தொன் மண் மூலப் பொருளாகத் தேவைப்படுகிறது. இதைத் தரைமூலம் 38 மைல்கள் ஏற்றிச் செல்வது கஷ்டம். புகைபிரதப்பாதையும் கிடையாது. லொறிகளில் ஏற்ற முடியுமென்றாலும் ஒரு லொறியில் ஆகக்கூடியது 4 தொன் மண் தான் ஏற்றிச் செல்ல முடியும். எனவே 700 தொன்களையும் ஏற்றிக் கொண்டு தொழிற்சாலைக்குச் செல்வதற்கு அதிக லொறிகள், வேலையாட்கள், நேரம், உழைப்பு எல்லாமே தேவைப்படும். புல்மோட்டையில் தொழிற்சாலை இருந்து உற்பத்தி செய்யப்படும் இலுமனைட்டின் உற்பத்திச் செலவிலும் பார்க்கச் சினன் வாடியில் உற்பத்தி செய்யப்படவிருக்கும் இலுமனைட்டில் உற்பத்திச் செலவு சுமார் ஐந்து மடங்குகள் வரையில் அதிகரிக்கும் என்று அறியப்படுகிறது. எனவே தான் எதற்காக இந்தக் கஷ்டமான முயற்சியில் ஈடுபட வேண்டும் என்று புல்மோட்டைப் பகுதி மக்கள் கேட்கிறர்கள்.

இலுமனைட் இலங்கையின் தேசியச் சொத்து. இதைப் பாதுகாத்துத் தோண்டி எடுத்து ஏற்றுமதி செய்து இலாபங்காண வேண்டியது இலங்கை அரசாங்கத்தின் பொறுப்பு. இலுமனைட் எடுப்பது பொருளாதார விஷயம். இது பொருளாதார ரீதியிலேயே அணுகப்பட வேண்டும். எவ்வு செலவு குறைவோ, எப்படிச் செய்தால் அதிக லாபம் கிடைக்குமோ அப்படிச் செய்வது தான் பொருளாதாரத்தின் உண்மையான தத்துவமாகும். எனவே தேசிய கைதொழிற் கூட்டுத்தாபனத்தினர் இந்த இலுமனைட் தொழிற்சாலை இடமாற்ற விடயத்தில் தகுந்த பொருளாதாரக் காரணங்களை முன்வைத்த ஈடுபட்டிருக்கிறர்கள் என்று புல்மோட்டை வாசிகளும் ஏனைய இலங்கையின் பொருளாதார அறிவு உள்ளவர்களும் விளங்கிக் கொள்ளக் கூடிய அளவிற்கு இலங்கை தேசிய கைத்தொழிற் கூட்டுதாபனம் தனது சேவைகளை ஆற்றும் என்பதில் சற்றேனும் ஐயமில்லை. இலங்கையின் பொருளாதாரம் எங்கெங்கெல்லாம் உயர்கிறதோ அங்கங்கெல்லாம் மிக நன்ருக உயரவேண்டும், நாடு வளம் கொழிக்க வேண்டும் என்ற தேசிய உணர்ச்சி ஒவ்வொரு இலங்கையனின் உள்ளத்திலும் ஏற்பட வேண்டும்.

# தொழிற்சாலை இடமாற்றம் அவசியம்தானு?

## பாரத ஐக்கியத்திற்கு...

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கு வங்காளத்திலும் சீனச் சார்ப்பு கம்யூனிஸ்டுகளும், காங்கிரஸ் அதிருப்தியாளர்களும் கூட்டான பொறுப்பில் எதிர்க்கட்சிகள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளன.

ஒரிசாவில் அசல் முதலாளித்துவ கொள்கைகளைப் பின்பற்றும் சுதந்திராதலைமையிலான எதிர்க்கட்சிகள் காங்கிரசை முறியடித்துள்ளன. பீகாரில் எதிர்க்கட்சிகள் அனைத்தும் உதிரியான நிலையில் காங்கிரசை வீழ்த்தியுள்ளன.

425 உறுப்பினர்களைக் கொண்ட மத்திய பிரதேசத்தில் காங்கிரஸ் 138 ஸ்தானங்களை மட்டும் பெற்று எதிர்க்கட்சிகளிடம் தோல்வி அடைந்துள்ளது. எதிர்க்கட்சிகளுக்குள் தீவிர முதலாளித்துவப் பற்றும் மதப்பற்றும் இந்தி வெறியும் உடைய ஜனசங்கமட்டும் 100 இடங்களைப் பெற்றுள்ளது. ஏனைய கட்சிகள் ஆங்காங்கே பத்து பதினைந்து தொகுதிகளில் வெற்றிபெற்றுள்ளன.

பஞ்சாப், ராஜஸ்தான் ஆகிய இடங்களில் இதே நிலை தான். எதிர்க்கட்சிகள் சிதறிய நிலையில் காங்கிரசைத் தோற்கடித்துள்ளன.

இந்த நிலை ஒரு சனநாயக நாட்டுக்கு பயங்கரமானஆபத்ாதன நில என்பதை எவரும் மறுக்க முடியாது. இன்று காங்கிரசைப் பதவியிலிருந்து அகற்றிவிட்டால் அடுத்து எந்தக் கட்சியைப் பதவியில் அமர்த்துவது என்பதற்கு பாரதமக்கள தெளிவான ஒரு பதிலைக் கொடுக்கத் தவறிவிட்டார்கள்.

காங்கிரஸ் தோல்வியுற்ற ஏனைய மாநிலங்களுடன் தமிழ் நாட்டைநோக்குகையில் தமிழ் நாடு ஓரளவு தீர்க்கமான பதிலைக் கொடுத்திருக்கிறது என்பதை நாம் மறுக்கமுடியாது.

தேசிய அரசாங்கம் அமைக்கலாம், கூட்டணி அரசாங்கம் அமைக்கலாம் என்று காங்கிரஸ் எதிர்க் கோஷ்டியினர் பதில் கொடுத்தாலும் அது ஒரு ஸ்திரமான ஆட்சியாக விளங்கும் என்பதறகு எந்த வகையானநம்பிக்கையுமில்லை.

கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் எஸ். ஏ. டாங்கே கடந்த வாரம் காங்கிரசிற்கு எதிரான கட்சிகள் நிர்வாகப்பொறுப்பை ஏற்றுள்ள மாநிலங்களுக்கிடையில் ஒரு கூட்டு நிலை தோன்ற வேண்டும் என்றுகூறியிருக்கிறர். இந்த கூட்டு நிலைகள எந்தளவு நீடித்து நிலக்கும் அவற்றின் பலம் என்ன என்பது ஆழ்ந்து ஆராயவேண்டியது அல்ல. மூன்று வகையான இலட்சியங்களை உடையவர்கள் எந்தளவுக்கு ஒத்துழைக்க முடியும் என்பது அனைவரும் நன்கு உணர்ந்த உண்மையாகும்.

### பரிகாரம் என்ன?

பாரத மக்களின் இன்றைய சிந்தனைப் போக்கு தெளிவற்றதாகவே இருக்கிறது. நடந்து முடிந்த பொதுத் தேர்தல் இந்த உண்மையை அப்பட்டமாக எடுத்துக்காட்டியுள்ளது. இந்த நிலபாரதத்தின் ஐக்கியத்திற்கும் சனநாயகத்திறகும் ஒரு பெரும் சவாலாகும். இந் நிலையை அடுத்த பொதுத்தேர்தலுக்கு முன்னர் மாற்றியமைக்க வேண்டியது பாரதமாதா பெற்ற பெரும் புத்திரர்களின் தலையாய கடமையாகும்.

## பிரசவம்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

வைத்து, அருந்ததி பார்த்து, அவள் கழுத்திலே எனது அன்புத் தளையை இறுகக் கட்டி...

நான் செத்து அவளானேன். என்னுள்ளிருந்த அப்பா செத்தார்... அம்மாவின் பாசம் வட்டி குட்டியோடு வந்து எனது புனிதாவிலே ஆவாகித்து என்னை இல்லையென்று செய்திட...

இன்று இந்தப் பிரசவ அறையின் வாசலிலே உயிரைக் கையிலே பிடித்துக் கொண்டு, எனது புனிதாவிற்காகவும், எனது வாரிசிற்காகவும் காத்துக் கிடக்கிறேன்

'அஹம் புனிதா அஸ்மி!
அஹம் புனிதா அஸ்மி!
நான் புனிதா ஆகிறேன்...
நான் புனிதா ஆகிறேன்...
நானும் அவளோடு சேர்ந்து பிரசவிக்கிறேன்... தத்துவ சமாதியிலே எழுந்த பாசக் கோயிலின் தலைவாயிலிலே நான் வயிறு நொந்து கொண்டிருக்கிறேன்...

குவா... குவா... குவா...

கதவுகள் திறக்கின்றன. நேர்ஸ் புன்னகையில் மலர்கிறுள். நான் உள்ளே ஓடுகிறேன்.

## வாக்கு விபரம்

தமிழ் நாடு பொதுத் தேர்தலில் தி மு. கழகம் 62,15,144 வாக்குகளைப் பெற்றுள்ளது. சுதந்திராக் கட்சிக்குக் கிடைத்த மொத்த வாக்குகள் 7,94 171. காங்கிரஸ் கட்சிக்கு கிடைத்த மொத்த வாக்குகள் 63,72,626.

எதிர்ப்பணியான தி. மு. க., சுதந்திரா, கம்யூனிஸ்ட் (இடது) பி. சோ., சோசலிஸ்ட், முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகள் மொத்தம் 79,88,372 வாக்குகளைப் பெற்றுள்ளன. இது 52 சதவிகிதமாகும். காங்கிரஸ் மொத்தம் 41.8 சதவிகிதம் வாக்குகளைப் பெற்றது.

## கவர்னர் மாற்றம்

தி. மு. க. அமைச்சரவை சென்னைக் கவர்னர் திரு. உஜ்ஜல்சிங்கை உடன் மாற்றும்வண்ணம் மத்திய அரசை வற்புறுத்தும் என்று தெரிகிறது. கவர்னர் காங்கிரசிற்கு சாதகமாக நடந்துள்ளார் என்பது கழகத்தின் குற்றச்சாட்டு. கழகப் பத்திரிகைகள் இதுபற்றி பல முறை செய்திகள் வெளியிட்டதுடன், கவர்னரின் ஒருபக்கச் சார்புபற்றி அரசியற் தலையங்கங்களும் எழுதியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு வயதினிலே

— கே. என். ராஜா —

நரேந்திரன் ஐந்து வயதானதும் திண்ணைப் பள்ளியில் சேர்க்கப்பட்டான். அங்கு ஆரம்பக் கல்வி பயின்று வருகையில், துஷ்டப் பிள்ளைகளின் சேர்க்கையால் கேவலமான ஆபாச மொழிகளை அச்சமின்றிக் கூறத் தொடங்கி விட்டான். பெற்றோர் அவனைப் பள்ளியினின்றும்நீக்கிவிட்டார்கள். தங்களது மாளிகையிலே ஒரு ஆசிரியரை வருவித்து அவனுக்கு கல்வி புகட்டி வந்தனர்.

நரேந்திரனுக்கு இளமையிலேயே ஆத்மதாகம் அவனுள் இருந்தபடியால் பரமார்த்திகத்தில் அவனுடைய அறிவு படிந்து வரலாயிற்று. எனவே எந்நேரமும் ஈசுவரனிடத்திலேயே தன் உள்ளத்தைச் செலுத்தி நின்றான். தன் ஆசிரியரிடம் பாடங் கேட்கும் போது கூட தியான நிலையிலிருந்தே கேட்கலானான். ஆனால் ஆசிரியர் போதித்து வந்த விஷயங்களை அணுவும் விடாது கிரகித்து வந்தான். இவ்வுண்மையைஉணராத ஆசிரியர் இவன் அசட்டுப் பிள்ளையெனக் கருதி விட்டார் போலும்.

ஒரு முறை ஆசிரியர் பாடங் கற்பித்து வருகையில் நரேந்திரன் கண்களை மூடிக் கொண்டிருப்பதைக் கண்டு இவன் தூங்குகிறான் எனக் கோபங் கொண்டு உடனே அவனை ஓங்கி முதுகில் அறைந்து எழுப்பினர். இதனால் நரேந்திரன் தியானங் கலைந்து எழுந்து நிலைமையையுணர்ந்து, ஆசிரியர் அதுவரை கூறிவந்த பாடம் முழுமையையும் திருப்பிக் கூறித் தான் தூங்கவில்லை என்பதை மெய்ப்பித்தான்.

அமெரிக்காவில் நடைபெற்ற சர்வ சமய மகாநாட்டிலே பல்லாயிரக்கணக்கான மக்களின் மத்தியிலே அவன் செய்த அழகிய பிரசங்கம் யாவர் உள்ளங்களையும் ஒருங்கே கவர்ந்து விட்டது. மற்ற பிரசங்கங்கள் எல்லாம் 'சீமாட்டிகளே சீமான்களே!' என அழைக்க இவர் மட்டும் 'சகோதரிகளே! சகோதரர்களே!' என்று அழைத்து சகோதரத்துவங் கொண்டாடியது அங்குள்ளோர்க்கு மகிழ்ச்சியை அளித்தது. இவ்விரு வார்த்தைகளிலேயே இந்து சமயத்தின் பரந்தநோக்கத்தைப் புலப்படுத்திய அவன் தமது பிரசங்கத்தில் இந்து சமயத்தின் சிறந்த கொள்கைகள் தத்துவங்களையெல்லாம் விளக்கமாக எடுத்துரைத்தான். சர்வ சமய மகாநாட்டில் பேசிய அறிஞர்களனைவரிலும் அவனே தலைசிறந்து விளங்கினான். அனைவராலும் அறிவுக் களஞ்சியம் எனப் பாராட்டப் பெற்றான். யார் இந்தச் சிறுவன் என்றுதானே நீங்கள் கேட்கிறீர்கள். வங்கதிலே தோன்றி இவ்வையக முழுதும் ஒளி வீசிய ஞானசூரியன் சுவாமி விவேகானந்தரே யாவர்.



## திரு. வித்தகர்

### தந்திரம் - 6

முதலில் 16 தீக்குச்சிகளை எடுத்துக் கொள்ளுங்கள். இந்தப் 16 தீக்குச்சிகளையும் உடைக்காமலும், ஒன்றின் மேல் ஒன்று ஏருமலும், மூன்று சற்சதுரங்களை அமைத்துக் கொள்ளுங்கள் பார்க்கலாம்.

அடுத்து, நீங்கள் ஏற்படுத்தியுள்ள 3 சதுரமுள்ள இதே அமைப்பில் ஐந்து சற்சதுரங்கள் இருக்கின்றன. அவைகளைக் கண்டு பிடிக்க முயலுங்கள்!

மூன்ருவதாக, வேருெரு தீக்குச்சியைக் கொண்டு எல்லாத் தீக்குச்சிகளிலும் படும் படியாகத் தொட்டுக் கொண்டு வாருங்கள்! ஆனால் ஒரு முறைக்கு மேல் ஒரு தீக் குச்சியைத் தீண்டக் கூடாது.

முயலுங்கள்! முடியாவிட்டால் அடுத்த வாரம் பாருங்கள்.

— வித்தகர்

# தந்திரக் கணக்கு

நான் ஒரு கூடை நிறைய மல்லிகை மலர்கள் வைத்திருந்தேன். அதை எனது தம்பிகளுக்கும் தங்கைகளுக்கும் பங்கிட வேண்டும் என்று எனது தாயார் கட்டளையிட்டு இருந்தார். ராமுவுக்கு கூடையிலுள்ள மலர்களில் மூன்றில் ஒரு பங்கையும் சீராளனுக்கு ஐந்தில் ஒரு பங்கையும் வேந்தனுக்கு ஆறில் ஒரு பங்கையும் தங்கை நீலாவிற்கு நாலில் ஒரு பங்கையும் கொடுத்தேன். எனக்கு மிஞ்சியது ஆறு மலர்கள். இது எனது கூடையில் இருந்த மலர்களில் இருபதில் ஒரு பங்காகும். அப்படியானல் நீலா வேந்தனைவிட எவ்வளவு கூடப்பெற்றிருப்பாள்?

விடை அடுத்த வாரம்.

— அ. ஜவகர்ஷா

அனுராதபுரம்

# நோபல் பரிசு குடும்பம்

தந்தை, தாய், மகன் ஆகிய மூவருமே நோபல் பரிசு பெற்றுள்ளனா என்ருல் உங்களுக்கு மயக்கம் வருவது இயல்பே.

'யாம் கண்டு பிடித்துத் தனித்தெடுத்த ரேடியம்' என்ற நூலுக்காக 1903-ல் பியரி கியூரிக்கும் அவர் மனைவி மேரி கியூரிக்கும் சேர்த்து நோபல் பரிஇல் பாதி அளிக்கப்பட்டது. இது பௌதிகப் பரிசாகும்.

1916 ஆம் ஆண்டு கியூரி அம்மையாருக்கு இரசாயனத்திற்காக நோபல பரிசு அளிக்கப்பட்டது.

ஒருவரே இருமுறை நோபல் பரிசு பெற்றவர் வரிசையில் இவரே முதல்வர். மேலும் இதுவரை வேறு யாரும் பௌதீகத்திற்கும், ரசாயனத்திற்கும் ஒருவரே நோபல் பரிசு பெற்றதில்லை.

இத்தம்பதிகளின் மகள் ஜூலியட் கியூரி 1935 ஆம் ஆண்டு செயற்கைக் கதிரியக்கத்திற்காக நோபல் பரிசு பெற்றார்.

# மாணவர் அரங்கு

# குலதெய்வம்

— பாலமுருகன் —

அம்மா நல்ல அம்மா-அணைத்து
  அன்பு காட்டும் அம்மா
தேம்பா லமுதம் ஊட்டும்-குலத்
  தெய்வம் எங்கள் அம்மா.

பத்து மாதம் நம்மை - இரவு
  பகலாய்ச் சுமந்த அம்மா
முத்த மீந்து எம்மை - நன்
  முறையாய் வளர்த்த அம்மா

அம்புலி காட்டி எமக்கு - நல்
  அறிவு தந்த அம்மா
இம்மையி லிரங்கி வாழும்-தூய
  இதயந் தந்த அம்மா.

வள்ளுவர் காட்டிய வழியில்
  - இங்கு
  வாழ்ந்து காட்டும் அம்மா
தென்னு தமிழின் சுவையை
  - எமக்கு
  தெளிய வைத்த அம்மா

# எது அதிகம்?

(சென்ற வார விடை)

பால் பாத்திரத்திலிருந்து எவ்வளவு பால் தண்ணீர் பாத்திரத்துக்கு மாறியதோ அதே அளவு தண்ணீர் தான் தண்ணீர்ப் பாத்திரத்திலிருந்து பால் பாத்திரத்துக்கு மாறியிருக்கும். கணக்குப் போட்டுப் பாருங்கள்.

# மூளைக்கு வேலையா? முதுகில் வாங்கலா?

'சிம்பிளான' கேள்வியொன்றைப் போட்டு விட்டு மூளைக்கு வேலையென்று கூறும் முரளியே நீர் எமது தொழிலுக்கு லாயக்கில்லை. நீர் கூறுவது போல் கலந்தால் எந்தப் பாத்திரத்தில் இருந்தும் எதுவும் அதிகமாக மாறியிருக்காது. பால் போனளவு 'நீர்' மறுபாத்திரத்திற்கு மாறியிருக்கும். இரண்டும் சமம்தான்.

ஆனல் நூற்றுக்கு 80சத வீதமான தண்ணீர் பாலைக் கொடுத்தால் மூளைக்கு வேலை மாத்திரமல்ல முதுகிலும் கொடுப்பார்கள் கவனம் தம்பி!

கொழும்பு. பால்வியாபாரி



ஆசிரியர்: 'மூளையின் பிரயோசனம் என்னவென்று கேட்டால் சட்டியானை வளையலாம் என்று எழுதியுள்ளாயே''

மணி: 'நேற்று நீங்கதானே சார் உங்கள் தலைகளில் மூளைக் குப்பதிலாய் களிமண்தான் இருக்கும் என்று எம்மைப் பார்த்துக் கூறினீர்கள்!'

# தேசிய பறவை

இலங்கையின் தேசிய பறவை 'காட்டுக் கோழி' என்று தெரியும். அமெரிக்காவின் தேசிய பறவை தெரியுமா உங்களுக்கு? அவை வருமாறு:

| | | |
|---|---|---|
| அமெரிக்கா | — | கழுகு |
| இந்தியா, பர்மா | — | மயில் |
| டென் மார்க் | — | வானம்பாடி |
| தென் ஆப்பிரிக்கா | — | நீலக்கொக்கு |
| இங்கிலாந்து | — | ராபின் |
| ஜப்பான் | — | பச்சைக் கொண்டைக் கோழி |
| ஜெர்மனி | — | வெள்ளைக் கொக்கு |
| ஹாவாய்தீவு, கனடா | — | வாத்து. |

திருமலை — சி. சண்முகலிங்கம்

# எனது இலட்சியம்

நானொரு சீர்திருத்த புரட்சிகர எழுத்தாளனுக வரவேண்டும் என்பதே எனது இலட்சியம். பணத்திற்காக அல்ல. புகழுக்காகவல்ல. பெருமைக்காகவல்ல. அப்படியானல் எதற்கு என்று நீங்கள் கேட்கலாம்.

எமது இனம் தாழ்ந்து கிடக்கின்றது. அதனைக் காணும் போதெல்லாம் எனதுள்ளம் அனலில் பட்ட புழுப் போல் துடிக்கிறது. எனவே இந்தநிலையைப் போக்கிவைப்பதற்காகத் தான் நானொரு புரட்சிகர எழுத்தாளனுக வர வேண்டும் என இலட்சியம் பூண்டுள்ளேன். எனது வாழ்க்கையை அதற்காக அர்ப்பணித்து விட்டேன். எமது இனத்தைச் சீர்திருத்துவதற்காக முன்வரும் பொழுது என்னை எதிர்த்து தொல்லைகள் கொள்ளைகொள்ளையாக முன் வந்து நின்றாலும் அதனைத் துச்சமாக மதிப்பேன்.

'முயற்சி உடையோர் இகழ்ச்சி அடையார்' எனவே நானும் மேற் கொண்டுள்ள இலட்சியப் பணியை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்காக என்னால் இயன்ற வரைக்கும் போராடுவேன். அப்பொழுது உயிரையும் பணயமாக வைப்பேன்.

எமது இனத்திற்கு எந்த வகையிலும் இடர்கள் விளைவிப்பவர்களை எனது பேனு முனையினுல் மரண தண்டனை விதிப்பேன். சாதி, மத, இன, நிற, ஆண்டான் அடிமை, முதலாளி தொழிலாளி என்னும் பேதங்களை வேரோடு தகர்த்தெறிந்து 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' 'எல்லோரும் இன்னாட்டு மன்னர்' என்னும் கொள்கைகளை நாட்டில் மணம் கமழச் செய்வேன்.

எனது வாழ்நாள் முழுவதையும் சமூகத்திற்கே அர்ப்பணித்த நான் நாட்டிற்கு நன்மைதரக்கூடிய செயல்களில் ஈடுபட்டு எனது இலட்சியத்தை நிறைவேற்றுவேன். என்றைக்கு நமது இனம் தலை நிமிர்ந்து சீர்திருத்தமாக வாழத் தொடங்குகின்றதோ அன்றைக்குத்தான் நான் எனது இலட்சியத்தை நிறைவேற்றியவனுவேன்.

அல்வையூர் எஸ். கந்தையா

# அன்று முதல் இன்று வரை அமெரிக்க ஜனதிபதிகள்

| | | |
|---|---|---|
| ஜோர்ஜ் வாஷிங்டன் | — | 1789—1797 |
| ஜோன் அடம்ஸ் | — | 1797—1801 |
| தோமாஸ் ஜெபர்ஸன் | — | 1801—1809 |
| ஜேம்ஸ் மெடிசன் | — | 1809—1817 |
| ஜேம்ஸ் மொன்ரோ | — | 1817—1825 |
| ஜோண் குவின்சி அடம்ஸ் | — | 1825—1829 |
| அன்ரு ஜக்ஷன் | — | 1829—1837 |
| மாட்டின் போன் பியூரன் | — | 1837—1841 |
| வில்லியம் எச். ஹரிசன் | — | 1841— |
| ஜோண் ரெயிலர் | — | 1841—1845 |
| ஜேம்ஸ் கே. போர்க் | — | 1845—1849 |
| கச்சரி ரெயிலர் | — | 1849—1850 |
| மிலட் பில்மோர் | — | 1850—1853 |
| பிராங்லின் பியர்ஸ் | — | 1853—1857 |
| ஜேம்ஸ்புஜனன் | — | 1857—1861 |
| ஆபிரகாம்லிங்கன் | — | 1861—1865 |
| அன்றூ ஜோண்சன் | — | 1865—1869 |
| ஜூலியஸ் ஜீ. கிராண்ட் | — | 1869—1877 |
| ரதர் போர்ட்கேஸ் | — | 1877—1881 |
| ஜேம்ஸ் ஏ. கார்பீல்ட் | — | 1881— |
| ஜெஸ்டர் ஏ. ஆத்தர் | — | 1881—1885 |
| குரோவர் கிளிவ்லண்ட் | — | 1885—1889 |
| பெஞ்சமின் கரிசன் | — | 1889—1893 |
| குரோவர் கிளிவ்லண்ட் | — | 1893—1897 |
| வில்லியம் மக்கின்லி | — | 1897—1901 |
| தியடோர் ரூஸ்வெல்ட் | — | 1901—1909 |
| வில்லியம் எச். டப்ட் | — | 1909—1913 |
| வுட்ரோவில்சன் | — | 1913—1921 |
| வரரன் ஜி.காடர்ன் | — | 1921—1923 |
| கல்வின் கூலிக் | — | 1923—1933 |
| கேர்பட் ஜீ கூவர் | — | 1929—1933 |
| பிரங்ளின் டீ. ரூஸ்வெல்ட் | — | 1933—1945 |
| கரி எஸ். ட்ரூமன் | — | 1945—1953 |
| டுன் வட்டி ஐசனோவர் | — | 1953—1961 |
| ஜோண் எப். கென்னடி | — | 1963— |
| லிண்டன் பி. ஜோன்சன் | — | 1965— |

தொகுப்பு:

அக்கரைப்பற்று — வே. எவ. தெய்வேந்திரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பக்தியும் பழமையெழிலும் மிக்க
புராணச் சித்திரம்!

ஏ. எல். எஸ். புரொடக்ஷன்ஸாரின் பிரமாண்டமான தயாரிப்பு!

விரைவில் சிலோன் எண்டடெயின்மன்ட்ஸ் திரைகளில்!

ஏ. எல். எஸ். புரொடக்ஷன்ஸ்



# கந்தன் கருணை

(ஈஸ்ட்மன் கலர்)

பத்மஸ்ரீ சிவாஜிகணேசன் ● நடிகையர் திலகம் சாவித்திரி ★ ஜெமினி கணேசன் ★ பாலாஜி ★ முத்துராமன்
★ அசோகன் ★ நாகேஷ் ★ ஈ. ஆர். சகாதேவன் ★ சிவகுமார் ★ கே. பி. சுந்தராம்பாள்
★ கே. ஆர். விஜயா ★ ஜெயலலிதா ★ மனோரமா மற்றும் பலர் நடித்தது

திரைக்கதை — வசனம் டைரெக்ஷன்: ஏ. பி. நாகராஜன்
பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்,
இசை: கே. வி. மகாதேவன்,

எமது திரைகளுக்கு வரவிருக்கும் மற்றும் சில வெற்றிப்படங்கள்!

எம். ஜி. ஆர். — ஜெயலலிதா நடித்த
தேவர் பிலிம்ஸ்
## தாய்க்குத் தலைமகன்

ஜெமினி கல்பனா
சன்பீம்ஸ் ஜீ. கே. கொம்பைன்ஸ்
நடித்த
## பட்டத்து ராணி

ஜெய்சங்கர் — கே. ஆர். விஜயா,
நடித்த
சாரதா புரொடக்ஷன்ஸ்
## பட்டணத்தில் பூதம் (ஈஸ்ட்மன் கலர்)

ஜெய்சங்கர் — பாரதி
நடித்த
நவசக்தி பிலிம்ஸ்
## நான் யார் தெரியுமா?

## இப்பொழுது காட்சியளிக்கிறது!



செல்லமகால் (கொழும்பு) இம்பீரியல் (மட்டுநகர்) நெல்சன் (திருமலை) குமரன் (மன்னார்)
ராசினோ (மாத்தளை) றீகல் (கண்டி)

முத்துராமன், விஜயகுமாரி, காஞ்சனா, ஏ. வி. எம். ராஜன்
நாகேஷ், எம். வி. இராசம்மா நடிக்கும்

# கொடி மலர்

2-வது வெற்றிவாரம்! கெயிட்டி திரையில்
எஸ். எஸ். ஆர், விஜயகுமாரி, விஜயலட்சுமி, அசோகன் நடிக்கும்


# கைதியின் காதலி

எதிர்பாருங்கள்! ரவிச்சந்திரன், கே. ஆர். விஜயா நடித்த

# இதயக்கமலம் (ஈஸ்ட்மன் கலர்)

## வெற்றிகரமான இரண்டாவது வாரம்

கிங்ஸ்லி (கொழும்பு)
பிளாசா (வெள்ளவத்தை)
நவா (கும்பனித்தெரு)
விஜயா (மட்டுநகர்)
ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை)
மோடேன் (பண்டாரவளை)
விஜிதா (அட்டன்)
கல்யாணி (நாவலப்பிட்டி)
திவோலி (நுரலை)



மக்கள் திலகம்
எம். ஜி. ஆர்.
பி. சரோஜாதேவி
எம். ஆர். ராதா, நம்பியார்,
நாகேஷ், மனோரமா, பண்டரிபாய்,
நடிக்கும்

அன்னைபிலிம்ஸ்

# தாயின் மடியில்


இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா வீதி, 194, ஏ, இலக்கத்தில் 1967-ம் வருடம் மார்ச் மாதம் 10-ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org